# இலக்கியத்தில்

## இன்பச் சுவை

[உவகை]

தமிழண்ணல்

செல்வி பதிப்பகம்
காரைக்குடி

# இலக்கியத்தில் இன்பச் சுவை

## [உவகை]

தமிழண்ணல்

செல்வி பதிப்பகம்

காரைக்குடி

செல்வி - 11

முதற்பதிப்பு : டிசம்பர் 1956

ஆசிரியரின் பிற நூல்கள்

O31:1Ax:9
J6

| | |
|---|---|
| தாலாட்டு | 2-0-0 |
| மொழிவழிச் சிந்தனைகள் | 1-4-0 |
| குழந்தைகள் இலக்கியம் | 0-6-0 |

விலை ரூபாய் 2 - 8 - 0

அச்சிட்டோர் : சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

## பதிப்புரை

நம் உடல் நலத்திற்கு எல்லாச் சத்துப் பொருள்களும் இன்றியமையாதன. ஏதாவது ஒரே ஒரு சத்துப் பொருளால் மட்டும் ஆரோக்கிய வாழ்வை அடைய முடியாது. ஆனால் சத்துப் பொருள்களை நாம் விகித முறைப்படி கணக்கிட்டுச் சேர்த்துக்கொள்வதில்லை. இயற்கையாகவே நம் உணவு முறையில் இயன்ற அளவு எல்லாச் சத்துக் களும் கிடைக்குமாறு தயாரித்துக் கொள்கிறோம். பற்றாக்குறை வரும்பொழுது வைத்தியர்களின் உதவியும் வந்துவிடுகிறது. இதைப்போல வாழ் வின் மலர்ச்சி சுவைகளின் அடிப்படையில் இருக் கிறது. ஒவ்வொருவர் வாழ்விலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சுவைகள் நிரம்பியிருக்கின்றன என்றால், 'எங்கே; எப்படி' என்ற கேள்வி பலருக்குத் தோன்றலாம். காரணம் அதைப்பற்றிச் சிந்திப்ப தில்லை என்பதுதான்.

ஒரு காட்சியில் ஒருவர் மெய்ம்மறந்து இருக் கிறார் என்றால் அக்காட்சியில் ஏற்பட்ட சுவை அவரின் உள்ளத்தையும் உணர்வையும் ஈர்த்து விட்டது என்பதுதான் பொருள். அதே காட்சியைக் காணும் மற்றொருவர் காணாதவராகச் செல்லலாம். அப்பொழுது அவர் அதைப்பற்றிச் சிந்தனையைச் செலுத்தாததினால்தான் அக்காட்சியில் ஈடுபட முடியவில்லை. இந்நிலையில், தான் காணும் காட்சியைத் தன் சிந்தனையாலும், கற்பனையாலும் விரிவுபடுத்திப் பார்த்து, அதனைக் காணாத மற்றவர், தாமும் கண்டின்புற்றாற்போல்உணருமாறு,காவியத் திலோ, ஓவியத்திலோ இன்ன பிற காட்சிகளின் வாயிலாகவோ காட்டும் ஆற்றல் படைத்தவன் கலைஞன் ஆகின்றான்.

வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் தோன்றும் சுவைகளைக் கவிஞன் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், தன் கவிதைகளில் எடுத்தாண்டிருக்கும் முறைகளைப் படித்தால், அவன் காட்டும் தோற்றங்களில் எல்லாம் நாம் ஒன்றி விடுகிறோம். நாம் நேரில் அனுபவிக்கும் பொழுது நம் சிந்தனையைச் செலுத்த முற்படுவோம்; சுவைகளின் பயன் கிடைக்கும். இவ்வாறு எண் சுவைகளும் நிரம்பிய தமிழ் இலக்கியங்களையெல்லாம் முழுதும்எல்லோரும் எளிதில் படித்து இன்புறுவது இயலாததொன்று தான். இலக்கியம் முழுவதையும் படித்தறிய வேண்டும் என்னும் அவாவினை அதிகப் படுத்தும் ஆற்றல் மிக்க கவிதைகளை மட்டும் தொகுத்துச் சுவைகளின் விளக்கங்களைத்தந்தால் முழு நூலையும் படித்து நுட்பங்களை உணர்ந்து அநுபவிக்க அது தூண்டுகோலாக இருக்குமல்லவா? ஆகவே எட்டுச் சுவைகளுக்கும் தனித் தனியே நூல்கள் வெளியிட நினைத்தோம். சங்க இலக்கியம் முதல் பாரதி வரை சுவை நோக்கித் தொகுத்த தொகுப்பே இச்சுவை நூல்கள். இவ்வரிசையில் முதலில் இன்பச் சுவையை (உவகை) நூல் வடிவில் இப்பொழுது வெளியிட்டிருக்கிறோம். தொடர்ந்து மற்ற சுவை நூல்களும் வெளிவர இருக்கின்றன.

இவ்வரிய முயற்சியில் மிகவும் ஈடுபாட்டுடன் தமிழண்ணல் அவர்கள் ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். அவர்களின் ஆழ்ந்த புலமை நலத்தை எல்லாப் பகுதிகளிலும் காணுந்தொறும் மகிழ்வடையலாம். இந்நூலையும் இதனைத் தொடர்ந்து வெளிவரும் மற்ற சுவை நூல்களையும் தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

**வீர. சிவராமன்**

## நூன் முகம்

தமிழில் முதன்முறையாக, ஒரு புதுமுறையைத் தனக்குரிய அமைப்பாகக் கொண்டு, இலக்கியத்தை நோக்கும் திறனாய்வு நூல்களே இச்சுவை நூல்கள். இச்சுவை நூல்களில் தொல்காப்பியந் தொட்டுப் பாரதிவரை விளைந்துள்ள இலக்கிய வளர்ச்சியைப் பழமையைத் தழுவியும் புதுமையை ஏற்றும் விளக்கியுள்ளேன்.

சுவை நூல் வரிசைகளைத் தொடர்ந்து படிப்போருக்கு இவ்விலக்கிய மரபுகளில் பலவற்றைத் தெளிவுபடுத்த முயன்றுள்ளேன். ஒவ்வொரு சுவை நூலும் நான்கு பிரிவுகளை உடையது. முதற் கட்டுரை பொதுக் கட்டுரை—அது இலக்கியத்தின் பொதுவான சிறப்புக்களைத் திறனாய்வது. இரண்டாவது கட்டுரை சிறப்புக் கட்டுரை—அது தமிழின் தனி இலக்கிய மரபுகளில் ஒன்றை விளக்குவது. மூன்ருவதுகட்டுரை தொல்காப்பிய அடிப்படைப்படி சுவை விளக்கம் தருவது. இவை மூன்றும் ஒரு பகுதியாக, நான்காவது பகுதியில் சுவைப்பாக்களும் அவற்றின் விளக்கமும் சுவைத் திறனாய்வும் தரப் பெறுகின்றன.

இம் முறையில் இலக்கியங்களை விளக்கும் இப்புது முயற்சி இலக்கியத்தின் முழுப் பொலிவையும் விளக்கும் என்று நம்புகிறேன். இத்துறையில் என்னை ஊக்கி இவ்விலக்கியத் திறனாய்வு நூலை அழகிய முறையில் வெளியிடும் ‘செல்வி பதிப்பக’த்தார்க்கு மிகவும் நன்றியறிதலுடையேன்.

நெற்குப்பை
30-12-1956

தமிழண்ணல்

# உள்ளுறை

1 தமிழ் இலக்கியத்தில் சுவை பக் 9—17

2 காதல் மெய்ப்பாடுகள் 18—43

3 இன்பச் சுவை - உவகை 44—46

4 சுவைப் பாக்களும் திறனாய்வும் 47—60

நற்றிணை - குறுந்தொகை-ஐங்குறுநூறு - கலித்தொகை - அகநானூறு

பொருநராற்றுப் படை - பட்டினப்பாலை

திருக்குறள் - ஐந்திணை எழுபது - ஐந்திணை ஐம்பது

சிலப்பதிகாரம் - சிந்தாமணி

முத்தொள்ளாயிரம் - திருவாசகம் - திருவாய்மொழி - தேவாரம் - இராமகாதை - கலிங்கத்துப்பரணி-அருட்பா - பாரதியார் பாடல்.

* உடலுக்கு உயிர் இன்றியமையாதது. உடலுயிர்ச் சேர்க்கையின் பயன் நல் வாழ்வு. இலக்கியத்திற்கு இன்றியமையாதது சுவை. சுவையான இலக்கியத்தின் பயன் மக்கள் வாழ்க்கையிற் செம்மை.

* இலக்கியத்திற்குத் தன்னலம் சுவை; பொதுநலம் மக்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தல். சுவை அதன் வாழ்வு; செம்மை அதன் பயன். சுவையற்ற இலக்கியம் வாழ்வதும் இல்லை; பயன் தருவதும் இல்லை.

* இலக்கியக் கலைவன்மை பெற முறையான பயிற்சி தேவை. இலக்கியத்தின் பல கூறுகளை ஆய்ந்தறிந்த புலமை யமைதியுடையாரே இலக்கியப் பரம்பரையில் சேரும் தகுதிபெறுவர்; உயர்ந்த இலக்கியச்சுவையுணர்வு பெறுவர்.

* இச்சுவை நூல்கள் முறையான இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டுவன; இலக்கியத்திலுள்ள உலகியலுண்மைகளையும் நாடகப் பண்பையும் திரைப்பட நுணுக்கங்களையும் எளிதாக எடுத்துக்காட்டுவன; தமிழிலக்கியம் அனைத்தையும் அறிமுகம் செய்து வைப்பன.

* நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை (இன்பம்) என்பன எட்டும் தமிழ்ச் சுவைகள். வடமொழி நவரசங்களுடன் இவற்றில் ஒற்றுமையுடையனவும் உள்ளன. வேற்றுமையுடையனவும் உள்ளன. இவற்றை விளக்குவன சுவை நூல்கள்.

# தமிழ் இலக்கியத்தில் சுவை

கலையும் இலக்கியமும் மனித அனுபவத்தின் விளைவுகள் ; மனித வரலாற்றின் சிறப்புக்கள் ; மனித வாழ்வின் பயன்கள். அவை எங்ஙனம் பிறந்தன ?

மனிதன் சிந்திக்கும் ஆற்றல் உடையவன். அறிவும் நினைவும் அவற்றின் செயல்களாகிய ஆய்வும் சுவையும் அவனது செல்வங்கள். மனிதன் சுவைபடச் செயலாற்றும்போது கனவு எளிதாக நனவாகிறது ; சுவையுற வேலைபார்க்கும் பொழுது தொழில் கலையாகிறது ; சுவையுற நினைந்து வாழ்வை அனுபவித்துச் சொல்வதும் எழுதுவதும் இலக்கியமாகின்றன !

## பிறப்பும் குறிக்கோளும்

இவ்வாறு மனிதச் சுவையுணர்விற் பிறக்கும் இலக்கியம் சுவை பயப்பதையே குறிக்கோளாகக் கொண்டது. இலக்கியத்தில் பல கூறுகள் உள்ளன. அவை பல சுவையுடையன. ஒவ்வொரு இலக்கிய ஆசிரியர்க்கும் தக, ஒரே சுவை பல விதத்தில், பல முறையில் விளங்குவதைக் காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட இயற்கைக் காட்சியினைப் பலர் கண்டு அனுபவிப்பதாகக் கொள்வோம். அவர்கள்

தம்தம் இயல்புக்கு ஏற்ப மற்றவர்களிடம் அதனைச் சுவைபடச் சொல்கின்றனர். அவ்வாறு சொல்லியவற்றைப் பல்வேறு நடையிலும், அழகிலும், முறையிலும் எழுதுகின்றனர். அவை பலவித இலக்கியக் கூறுகள் ஆகின்றன. இலக்கியக் கருவாகக் கண்ட காட்சி ஒன்றேயாயினும் ஆசிரியர்தம் தனி இயல்புகளால் அவ்விலக்கியங்கள் பலவிதத்தன ஆயின. எல்லோர்க்கும் முகம் ஒன்றுதான். ஆயினும் ஒரு முகத்திற்கும் பிறிதொரு முகத்திற்கும் எத்துணை வேறுபாடுகள் உள! இலக்கியமும் ஒன்றுதான். ஆயினும் அவற்றிலே ஆயிரக்கணக்கான வேறுபாடுகள் காணப்பெறும். இதற்குக் காரணம் ஆசிரியர்கள். இதனுற்றான் இலக்கிய ஆசிரியரின் தனி நடையை, தனிப்பண்பை, தனி முத்திரையை, தனிச்சிறப்பை எதிர்பார்த்து இலக்கியத்தை மதிக்கிருர்கள் மக்கள்!

## உடலும் உயிரும்

இலக்கியத்தின் முதலும் முடிவும் மட்டுமல்ல, அதன் உடலெங்கும் ஊடாடி நிற்கும் உயிரும் சுவையே. மொழியும் நடையும், பொருளும், அணியும், அமைப்பும் பிறவும் எல்லாம் இலக்கியத்தின் உடல், உடை, அணி, அழகுகளாகத் திகழ்கின்றன. இவையெல்லாம் பெற்றிருக்கும் இலக்கியம் சிறப்புடையதேயாயினும் இவையனைத்தின் கூட்டுறவால், இணைப்பால், துணையால் உருவாகின்ற உயிரான சுவையின்றேல் அவ்விலக்கியம் மதிக்கப் பெருது. எவ்வளவு அழகுபடுத்தினுலும், உயிரற்ற உடலின் நிலைதான் சுவையற்ற பாவிற்கும் ஏற்படும்.

## இலக்கிய மதிப்பீடு

உணவின் தரத்தை நாச்சுவையால் மதிப்பிடுவதுபோலவே, இலக்கியத்தின் தரத்தையும் உணர்வுச்சுவையால் மதிப்பிடுகிறோம். 'இப்பா சிறந்ததா?' என ஒரு பாடலைக்காட்டி நம்மை ஒருவர் வினவினால் உடனே நாம் என்ன செய்கிறோம். அப்பாடலைப் பலமுறை படிக்கிறோம்; பொருளை உணர்கிறோம்; மொழி நடை, அணி, அமைப்பை ஆய்கிறோம். முடிவாக அப்பாடற் சுவை பற்றிய கருத்து நம் மனத்தில் உருவாகிறது; அச்சுவையின் அளவிற்கு ஏற்ப, அப்பாடலின் மதிப்பும் நம் மனத்தில் உருவாகிறது.

## சுவை நூல்கள்

முன்பு தமிழிலக்கியங்கள் பலவிதமாகத் தொகுக்கப்பெற்றன. எட்டுத்தொகை நூல்களில் ஒவ்வொன்றும் பலநூறு புலவர்களின் பாடல்களைக் கொண்டவை. பத்துப்பாட்டு என்பது பத்து நீண்ட பாடல்களின் தொகுப்பு. எட்டுத்தொகையுள் அடி அளவு நோக்கித் தொகுத்தவை ஐங்குறுநூறு, குறுந்தொகை என்பன; பொருள் நோக்கித் தொகுத்தவை அகநானூறு, புறநானூறு என்பன. அவைபோலச் சுவைநோக்கித் தொகுக்க முயன்றதின் விளைவே இந்நூல் வரிசை. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன எட்டும் இலக்கியச் சுவைகள் எனத் தொகுத்துக் கூறுகிறது தொல்காப்பியம். இச்சுவையடிப்படையில் எழுந்த முற்காலப் பிற்கால இலக்கியப் படைப்புக்களில் சிறந்தவையான

பாக்களைத் தேர்ந்து எடுத்துத் தொகுக்கப்பெற்றனவே இச்சுவை நூல்கள்.

## இலக்கியக் கூறுகள்

இலக்கியத்தின் கூறுகள் பல. சிறுகதை, கட்டுரை, கவிதை, காவியம், நாடகம் என்பன தலையாயவை. இலக்கியத்தோடு தொடர்புடைய கலைகள் ஓவியமும் திரைப்படமும் எனலாம். இவை அனைத்திற்கும் அடிப்படையான கருத்து அல்லது கரு ஒன்றே. இவ்வேறுபாடுகள் சொல்லும் கருத்தால் அன்று, சொல்லும் முறையால் வருவன என்பதை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும். ஒரே கருத்தினைக் கவிதை உருவிலும் தரலாம், கதை அமைப்பிலும் எழுதலாம், கட்டுரையாகவும் விளக்கலாம், நாடகமாக்கியும் காட்டலாம், ஓவியத்திலும் தீட்டலாம், திரைப்படமாக்கியும் படைக்கலாம்! கருத்தும் ஆசிரியர் திறனும் கூடுமிடத்தே இவ்வமைப்பு உருவாகிறது. ஆசிரியர் பெறும் இலக்கியத்திறன் அவரது அறிவையும் இலக்கியப் பயிற்சியையும் பொறுத்தது.

## முக்கால இலக்கியங்கள்

நாடகமும் திரைப்படமும் சிறந்தவை; மக்களிடத்தில் அதிகமாகப் பரவியுள்ளவை. ஆனால் கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் அனைய பிற கூறுகளின் பண்புக்கலப்பினால் உருவாவனவே நாடகமும் திரைப்படமும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சங்க இலக்கியம் உலக வழக்கையும் நாடக வழக்கையும் அடிப்படையாகக் கொண்டது. இடைக்கால இலக்கியமோ வாழ்விற்கு அப்பாற்

பட்ட கற்பனைகளை; உண்மைக்கு மாறான அதிசயங்களை, ஒன்றைப் பத்தாக்கும் வியப்பினை அக்கால மக்களின் மனநிலைக்கு ஏற்ப அடித்தளமாகக் கொண்டது. இக்கால இலக்கியம் மீண்டும் மனித வாழ்வையே அடித்தளமாகக்கொண்டு இயங்குகிறது. சங்ககால இலக்கியங்கள் வாழ்வையே அடிப்படையாகக் கொண்டன எனினும் வாழ்வின் நற்கூறுகளையே, அவர்கள் இலக்கியமாக்கினர். இன்று வாழ்க்கையின் நற்கூறுகளையே எழுதுவதனால், அவ்வாழ்க்கையைப் பாதி அளவே மனிதன் உணர்கின்றான் என்றும் வாழ்க்கையின் தீய கூறுகள் என நாம் கருதுகின்றவற்றையும் எழுத வேண்டுமென்றும் எண்ணி எழுத்தாளர்கள் முயன்று செயற்படுத்தி வருவதைக் காண்கிறோம்.

பிறநாட்டு இலக்கியங்கள் முதலில் 'அதிசய' மாக இருந்து பிறகு 'அன்றாட வாழ்வாக' மலர்ந்தவை. மனிதன் விலங்குணர்வினின்றும் வளராத காலத்தில் அல்லது அவனது குழந்தைமைப்பருவத்தில் 'அதிசய' இலக்கியங்களிலே இன்பங்கண்டான். பிறகு வளர வளர வாழ்வைக் கண்டு அனுபவித்து அதன் அடிப்படையுண்மைகளை ஆய்தலும் படைத்தலுமே சிறப்புடையதென அறிந்தான். முறையான இலக்கிய வளர்ச்சியுடைய பிறநாட்டாரிடம் இவ்விருகால இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுறும் நாம் தமிழ் நாட்டாரிடம் மட்டும் முக்கால மாற்றங்களையும் முறை தவறிய வளர்ச்சிகளையும் காணுகிறோம். சங்க இலக்கியம் மனித வாழ்வை அப்படியே அடித்தளமாகக்கொண்டு இயங்குகிறது. ஆனால் அதன்பிறகு 'அதிசய' இலக்கியத்திலே தமிழன் ஈடுபடுகிறான். இது திடீரெனத் தமிழ

னுக்கு அறிவுநிலை மாறி அறியாமைநிலை வந்ததனால் ஏற்பட்டதாகக் கருதமுடியாது. இடைக்கால மதத்தொடர்புகளால் விளைந்த மாற்றமே எனக் கொள்ளவேண்டும். இன்றுதான் உலக இலக்கியங்கள் மறுமலர்ச்சி பெற்றபிறகு, தமிழிலக்கியமும் சிறிது காலத்தால் பிற்பட்டு இப்புது மலர்ச்சியைப்பெற்று வருகிறது. சங்க இலக்கியத்தை ஆராய்ந்தால் அதற்கு முந்தி ஒரு தொடக்கநிலை இலக்கியக் காலம் இருந்திருக்க வேண்டுமென நாம் உய்த்துணரலாம். அஃது இன்று இல்லாமல் மறைந்துவிட்டது. இன்றுள்ள இம்முக்கால இலக்கிய வளர்ச்சிகளைத் தனித்தனியே அவ்வக்கால முறைக்கு மதிப்புக்கொடுத்துப் பயிலுவதனால், இனி வளரவிருக்கும் இலக்கியத்திற்கு நாம் நற்பணியாற்ற முடியும்.

## நமது இலக்கியத் தனிச்சிறப்புக்கள்

சங்க இலக்கியப் படைப்பு நம் உள்ளத்தைக் கவர்கின்றது. சங்க இலக்கியத்தைக் கற்குந்தோறும் அதன் இனிமையும் அருமையும் பெரிதாக வளர்கின்றன. இதனால், அதனை முன்னைப் பழமைக்கும் பழமையென்றும் பின்னைப் புதுமைக்கும் புதுமையென்றும் பாராட்டத் தோன்றுகிறது. 'புலனெறி வழக்கம்' என்பது தமிழர் கண்ட இலக்கிய மரபு. அம்மரபு வாழ்க்கையையும் நாடகப் பண்பையும் அடித்தளமாகவுடையது. சுவையும் மெய்ப்பாடும் இலக்கியத்தின் உயிரனையன. அகமும் புறமும் வாழ்க்கையிற்கண்டு இலக்கியத்தில் வடித்த இரு பகுதிகள். திணையும் துறையும் அப்பகுதிகளை வகைப்படுத்தி வாழ்வோடு இணைத்

துக் காட்டுகின்ற உறுப்புக்கள். உவமை முதலிய அணிகளும் உள்ளுறை முதலிய அமைவுகளும் இலக்கியக் கலைத்திறனைக் காட்டுவன. திணைக்கும் துறைக்கும் அடிப்படையான முதல், கரு, உரி என்பன வாழ்க்கையினின்றும் நாடகம் பிறக்கு மாற்றையும் இலக்கியம் பிறக்குமாற்றையும் புலப் படுத்துவன. இக்காலத் திரைப்படக் கலைஞரும் இத் திணை துறை அறிந்து, முதல் கரு உரி போற்று கின்றனர். இவ்வாறு பழந்தமிழிலக்கிய மரபுகள் இக்காலக் கலைத்திறமைகளுடன் பொருந்துமாற்றை அறிந்தால், நமது இலக்கியத்தின் மதிப்பு இன்னும் பெரும் அளவில் உயரக்கூடும்.

## இலக்கியத்தில் திரைப்படக்கலை

இன்றைய எழுத்தாளர்கள் அனைவரும் இலக் கியத் தொடர்பும் அறிவும் பெறவேண்டும். நாடகக் கலைஞர்களும் நடிகர்களும் இலக்கியப் பயிற்சிபெற வேண்டும். திரைப்படக் கலைஞர்களும் இலக்கியப் பயிற்சி பெற்றால்தான் நமது படங்கள் நம் நாட்டுப் பண்புடனும் நம் நாகரிகத்துடனும் வளர்தல்கூடும். காட்சிப் பதிவு ( Camera ), ஒளிப்பதிவு, கலை ( Art ), இணைப்பு ( Editing ), ஒப்பனை ( Make-up ), இடப் பின்னணி ( Settings ) இவையனைத்தும் இக்காலக் கலைத்திறமைகளே. ஆயினும் சங்க இலக்கியத்தில் இவற்றின் அமைவுகளைக் கருத்தளவில் நாம் காண முடிகிறது. சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் நாடகங்கள். அவை மனக்கண்ணால் காணுமாறு, நம் மனத்திரையில் விழுகின்ற கருத்துக் காட்சிக ளாதலின், இக்காலத் திரைப்படங்களிலும் சிறப் புடையனவாக உள்ளன. இப்பாடல்களில் வரும்

தலைவனும் தலைவியும், தோழியும், பாங்கனும் பிறரும் சிறந்த நடிகர்கள். வாழ்க்கையின் படப்பிடிப்பான இந்நாடகப் பண்பமைவுகளையும், பிற இலக்கியக் கலைத் திறன்களையும் செய்யுள் வடிவான சங்க நூல்கள் உட்கொண்டு விளங்குகின்றன.

## நாடகம்—இலக்கியத்தாய்

சங்கப் பாடல் ஒன்றைப் படிக்கும்போது அப்பாடற் காட்சி நம்முன் நிகழ்கிறது; அப்பாடற் கருத்து நம் நெஞ்சிற் பதிகிறது. இது எவ்வாறு கைகூடுகிறது? சங்கப் பாடல்களைச் சிலர் மிக மதித்துப் போற்றுவதன் இன்றியமையாமை என்ன? உலக இலக்கியங்கள் பலவற்றுக்குத் தாய் வடமொழி இலக்கியங்களே. முதன்முதல் நாடக நூல்களை அதிக அளவில் பெற்றுப் பிற மொழி நாடகங்கட்கு வழிகாட்டிய பெருமையும் வட மொழி இலக்கியத்தைச் சார்கிறது. ஆனால் அவ் வடமொழிக்கு இணையாக வாழ்ந்த தென்மொழியிலே அன்று முழு நாடக நூல்களே இல்லாமல் போயிருக்குமா? 'மதிவாணர் நாடகத் தமிழ்நூல்' 'முறுவல்' 'சயந்தம்' எனப்பல பெயர்களைக் கேள்விப்படும் நாம் தமிழிலும் நாடக நூல்கள் இருந்திருக்கும் எனக் கூறலாம். "உலகியல் வழக்கினும் நாடக வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்பது தொல்காப்பியம். தமிழ் இலக்கியங்கள் உலக வழக்கையும் நாடக வழக்கையும் அடித்தளமாகக் கொண்டெழுந்தவை என்பது இதன் கருத்து. இன்று கிடைத்துள்ள இலக்கியங்களே நாடக வழக்கையும் அடித்தளமாகக் கொண்டன என்றால் தமிழில் நாடகங்கள் இல்லாமல் இருந்

திருக்குமா? தமிழ் நாட்டில் நாடகங்கள் நடை பெருமல் இருந்திருக்குமா? சங்கப் பாக்களைக் கற்கும்பொழுது அதிலுள்ள வியக்கத்தக்க நாடகக்கலை நுணுக்கங்களைக் கண்டு வியப்படைகிறோம்.

"பெருஞ்செல்வம் பெற்றிருந்தேன், இழந்து விட்டேன்" என்பதில் பெருமையில்லை. இலக்கியங்களைக் கற்கும் மனப்பான்மை வேண்டும். நமது மரபும் நமது முறையும் அறிந்து நம் மக்களுக்கு ஏற்ற இலக்கியச் சுவையைப் பெருக்கி, நமது நாகரிகத்தைப் பாதுகாக்க வேண்டும். பல்வேறு கலைத் திறன்களால் இலக்கியம் சுவை பெறுவதுபோல, இலக்கியப் பயிற்சியால் வாழ்க்கை சுவைபெறும்.

# காதல் மெய்ப்பாடுகள்

தமிழர் என்றுமே உணர்ச்சிவயப் பட்டவர் போலும். உணர்ச்சிவயப் பட்டவரிடம் தலைசிறந்த கலைத்திறனைக் காணக்கூடும். ஆனால், அவர்கள் கவலையற்று வாழ்வாராதலின் அக்கலைத்திறனே அவர்கள் வாழ்வை நலிவிக்கும் கருவியுமாகும். தமிழர்வரலாறு இதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

சங்கக்காலத்தை நோக்குங்கள். தமிழன் காதற் சுவையிலே இன்பங்கண்டான்; தமிழிலே பல்லாயிரம் காதற் பாக்கள் எழுந்தன. இடைக்காலத்தே அவன் இறை அன்பில் ஈடுபட்டான்; எத்தனையோ ஆயிரம் பத்திப்பாக்கள் பிறந்தன. இன்றும் தமிழன் சமுதாயச்சீர்திருத்தத்திலே முனைகின்றான்; எழுதுகின்ற பாக்களெல்லாம் சீர்திருத்தக்கருவிலே உருவாகின்றன!

காதற்கலை உலகப்பொது. ஆனால் அதனை அணுகி அனுபவித்து உணர்ந்தும் ஆய்ந்தும் பிறகு அதனையே இலக்கியத்தில் விரித்தும் வகுத்தும் தொகுத்தும் தமிழ்நாட்டார் வெளியிட்டிருக்கும் அளவு பிறரெவரும் இதுவரை நினைந்துமிலர். இதனைத் துணிந்து கூறலாம். காதல் ஓர் உணர்வுக்கலை. காதலர்தம் சுவைகளை அல்லது மெய்ப்பாடுகளை இவை என எடுத்தெழுதுதல் எளிதன்று.

ஒருவனும் ஒருத்தியும் சந்திக்கும்பொழுது இன்னின்னவாறுதான் நடந்துகொள்வர் எனத் தீர்மானிக்கமுடியாது. இதனையும் வகைப்படுத்தி அறிவியலில் ( Science ) அறுதியிட்டுக் கூறுதல் போல் சில பொதுவான காதல் மெய்ப்பாடுகளை வரையறுத்துக் கூறுகிறது தொல்காப்பியம். அதில் உள்ள மெய்ப்பாட்டியலில் 13 ஆம் நூற்பா முதல் 26 ஆம் நூற்பா முடியப் பதினான்கு நூற்பாக்களில் இக்காதல் மெய்ப்பாடுகள் தொகுத்துரைக்கப் படுகின்றன.

முதற் சந்திப்பு

அவன் எங்கோ பிறந்து வளர்ந்தவன் ; அவளும் எங்கோ பிறந்து வளர்ந்தவள். அவன் கட்டிளங் காளைப் பருவத்தை அடைந்தான். அவள் கண்கவரும் கன்னிப் பருவத்தை அடைந்தாள்.

நீலநிற அடிவானை முத்தமிட்டு நிற்கும் குன்றுகள். அங்கே நெளிந்தோடிச் சிந்துபாடும் சிற்றாறுகள் ; சிற்றாற்றின் கரைவழியே நடமிட்டு உளங்கவரும் மாமயில்கள் ; அந்நடங் கண்டோ, தனைமறந்தோ இசைகூவும் குயிலினங்கள் ; இத்தகைய சூழலுக்கிடையே அவள் கதிர் முற்றிய தினைப்புனத்தைக் காத்துக்கொண்டிருந்தாள். அவன் வேட்டையாடிவிட்டுத் திரும்பினான். அப்பொழுது புலியொன்று வரக்கண்டு மங்கை நடுங்கினாள் ; அலறினாள். அச் சிங்கஏறு அனையான் சமயத்தில் பாய்ந்துசென்று, புலியைக்கொன்று வீழ்த்தி அவளைக் காப்பாற்றினான். உயர்ந்த தோளும் விரிந்த மார்புமுடையான் அவன் ; அவளோ பனிபுலராத புதுமலரனையாள். இரு

கண்கள் எதிர்நோக்க, மற்றிருகண்கள் தாழ்ந்தன. இருவரும் 'கருத்தினில் மாறிப் புக்குக்' காதலர் ஆயினர்!

அல்லது, இக் காலத்திற்கு ஏற்ப... அவன் கல்லூரியிற் பயிலும் காளை. அவளோ அவன் வகுப்புத் தோழி. மனத்தை மயக்கும் மாலைப் போதிலே அவன் நடைபயிலச் சென்ருன். மெள்ள உலாவரும் போதிலே, அவ்வுள்ளங் கவர்ந்தாளைக் கண்டான். அசைந்தாடி வருகின்ற தென்றலோ எனுமாறு வந்துகொண்டிருந்த அவள், எதிரே சென்ற உந்து வண்டியிலே அடிபட்டு விழ இருந்தாள். கணப்பொழுதில், அவளைக் கைகொடுத்துக் காப்பாற்றினுன். நாணத்தால் முகம் சிவக்க அங்கே நின்ருள். நன்றி கூற அவள் கண்கள் உயர்ந்தன; நாணம் தடுக்கவே தாழ்ந்தன. புன்னகையைப் பரிசாகத் தந்தாள். பிறகென்ன அவள் காதல் அரசியாளுள்; அவன் கன்னியின் அடிமையானுன்.

இவ்வாறு காதலர் சந்திப்பையே ஆயிரம் விதமாகக் கூறலாம் என்ருல், அப்போது அவர்கள்பால் நிகழும் மெய்ப்பாடுகளைக் கணக்கிட முடியுமா? காதல் அவரவர் இயல்புக்கு ஏற்பத் தனித்தனி நிகழ்வு உடையதாகும். 'பெண் எதிர் நோக்க ஆண் நிலன் நோக்கும்' காதலும் உள; அவை இலக்கியக் கருத்துப்படி 'பெருந்திணை'ப் பாற்படும். மெய்ப்பாடுகள் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடேயாகும். எனவே இவ்வுணர்வுகளையெல்லாம் ஆராய்ந்தால் கூடியமட்டும் பொதுவாக நேரக்கூடிய சில மெய்ப்பாடுகளை வரையறுக்க முடியும். தொல்காப்பியத்தில் இக்காதல் மெய்ப்பாடுகள் சிலவற்

றைக் காண்கிறோம். இவை அன்பை அடிப்படையாகக்கொண்ட 'ஐந்திணைக் காதலி'ல் பெண்களிடம் நிகழ்வன. திருமணம் செய்யுமுன் சந்தித்தல் முதலாகக்கொள்ளும் காதலாகிய களவிலும், திருமணம் செய்தபின் வாழ்வறம் பேணுங்கால் கொள்ளும் கற்பிலும் நிகழ்வன இவை. எனவே பெண் இனத்தில் பெரும்பாலும் நிகழ்வன என்ற அளவில் இவை எக்காலத்தும் ஒப்புக்கொள்ளத்தக்கன. தொல்காப்பியத்தையும் உரையாசிரியர்கள் விளக்கத்தையும் கொண்டு கீழ்க்கண்ட ஐந்து பகுதியினவாகிய மெய்ப்பாடுகளை விளங்க ஆராய்வோம்.

## ஐந்து பிரிவுகள்

படிப்பார்க்குத் தெளிவுபடுத்தும் முறையில் யாம் பிரித்துக்கொண்டனவே இவை ஐந்தும். இம் மெய்ப்பாடுகள் அனைத்தும் பெண்களுக்கே உரியன. ஆண்களுக்கும் இவற்றுள் சில பொருந்துதல் கூடும். ஆனல் ஆண்கள் எவ்வரையறைகட்கும் உட்படார் என்றுபோலும் அவர்பால் நிகழும் மெய்ப்பாடுகள் யாண்டும் தனித்துக் கூறப்பெற்றில. பெண்பாலுக்கு மெய்ப்பாடு வரையறுத்து, ஆண்பாலுக்கு ஏற்றவற்றை உணருமாறு நமக்கு விட்டுவிட்ட இச் செயலொன்றே அக்காலப் புலவர்தம் காதற்கலையுணர்வுக்குத் தக்க சான்றும்.

1. களவுக் கால மெய்ப்பாடுகள். இவை இரண்டு வகைப்படும். சந்திப்பு முதல் புணர்ச்சிகாறும் நிகழ்வன முதல்வகை. புணர்ச்சிக்குப்பின் களவு வெளிப்படுந் துணையும் நிகழ்வன இரண்டாம் வகை.

2. ஏமாற்றத்தால்விளையும் மெய்ப்பாடுகள். களவுக் காலத்து முறையாகக் காதல் நிகழாமல் மாற்றங்கள் அல்லது ஏமாற்றங்கள் நிகழ்வுழி வெளிப்படும் மெய்ப்பாடுகள் இவை.

3. வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள். வரைவுக்குத் (திருமணத்திற்கு) தலைவனைத் தூண்டும் விதத்தில் தலைவியிடம் நிகழ்வன.

4. வரைந்தபின்பு நிகழும் மெய்ப்பாடுகள். இவை தலைவி திருமணம் செய்துகொண்ட பிறகு அவளிடம் நிகழ்வன.

5. காதல் வாழ்வுக்குரிய மெய்ப்பாடுகள். இவை ஒப்பின் வகை என்றும் கூடாதன என்றும் இரண்டு வகைப்படும். ஒப்பின் வகை என்பன தலைவன் தலைவியரிடம் இருக்கவேண்டிய பண்புகள். கூடாதன தலைவன் தலைவியரிடம் தலைகாட்டக் கூடாதவை.

இவை ஐந்து பிரிவுகளையும் இனித் தனித் தனியே காணவேண்டும். தொல்காப்பிய நூற்பாக் களுடன் பொருளும் தந்து இவற்றை விளக்க முயலுகிறோம். ஆனால் இப்பொருள் விளக்கத்தில் அறிஞர்களிடையே பொதுவான பல கருத்து வேறுபாடு கள் உள. அவற்றுள் பொருத்தமானவை என நாம் கருதுகின்றவற்றையே தந்துள்ளோம்.இதனை நன்கு தெளிவுபெற உணர்ந்துகொண்டு, பிறகு வேண்டுமானால் அவரவர் விருப்பத்திற்கு ஏற்பக் கருத்து வேறுபட்ட விளக்கங்களை ஆராய்ந்து முடிவு கட்டலாம். முதலில் மலைபோல் தோன்றும் கருத்து வேறுபாடுகள் அனுபவமும் இலக்கியப் பயிற்சியும்

பெருகப் பெருகப் பனிபோற் பறந்துவிடும் அல்லவா !

## 1. களவுக்கால மெய்ப்பாடுகள்

இம் மெய்ப்பாடுகள் இரண்டு பிரிவின என்று முன்பே கண்டோம். முதற் பிரிவு இயற்கைப் புணர்ச்சிகாறும் நிகழ்வனவாம். அவை மூன்று வகைப்படும்.

ஒன்று :

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க்கு இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப

புகுமுகம் புரிதல்: முதன்முதல் தலைவனைச் சந்திக்கும் தலைவி அவன் எண்ணத்திற்கு உடன்படுபவளானல், தனது மலரும் முகத்தால் ஒப்புதல் தெரிவிப்பாள். பொறிநுதல் வியர்த்தல் - அவ்வாறு தலைவன் நோக்குவதைத் தானும் விரும்பி உளம் மகிழ்ந்து முகம் மலரும்போது, இதுவரை அடையாததோர் உணர்வின்வயம் ஆகின்ருளாகையால், அவளது நெற்றி வியர்க்கும். நகுநயம் மறைத்தல் : பிறகு தலைவனைக் காணும்பொழுதும் பேசும்பொழுதும் மகிழ்வு பெருகும். உள்ளத்தில் களிப்பு வெள்ளமிட்டுப் பாயும். ஆயினும் பெண்மை அடக்கத்திற்குரியது. எனவே, மனத்தில் எவ்வளவு மகிழ்ச்சி பெருகினுலும் அதனை அவள் வாய்விட்டுக் கூருள். நகுதற்குக் காரணமான விருப்பத்தை மறைக்கவே முயலுவாள். இம்மெய்ப்பாட்டிலுள்ள ஒரு நுண்மையை நாம் உணரவேண்டும். பெண் கழிபேருவகை கொள்ளவும் செய்வாள் ; அதை வெளிப்படுத்தவும் மாட்டாள். இஃதெப்படி மெய்ப்பாடா

கும்? தலைவிக்கு இப்போது மகிழ்ச்சி தோன்றுதிருந்தால் அது அவளது அறிவிலும், உணர்விலும் பழுதுள என்பதைக் காட்டும். மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாலோ பெண்மைக்கு இழுக்காகும். எனவே மகிழ்ச்சியுடன் அவள் போராடும் கட்டமே இம் மெய்ப்பாடாக வெளிப்படுகிறது எனக் கொள்ள வேண்டும். சிதைவு பிறர்க்கு இன்மை: அதன் பிறகு அவள் தன்மனச் சிதைவைப் பிறரறியாவண்ணம் நடந்துகொள்வாள். 'இவள் எதனையோ மறைக்கின்றாள்' என உலகம் உய்த்துணர்ந்துவிடுமாயினும் கூடியவரை மறைக்க முயலுதல் பெண்மைக்குச் சிறப்பென்க.

இவை நான்கும் காட்சி என்னும் முதல்நிலைக்கண் நிகழும் மெய்ப்பாடுகள்.

இரண்டு :

கூழைவிரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலோடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப

தலைமகனைக் கண்டு பழகிய தலைமகட்கு வேட்கை மிகுதல் ஒருதலை. அவ்வேட்கையினை அவள் என்றுமே வாய்விட்டுக் கூறாள். தன் காதலனுக்கு மட்டும் தன்வேட்கையை உணருமாறு அவள் குறிப்பால் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் சில உள. கூழை விரித்தல்: பெண் வேட்கை மிகும்போது கூந்தலை முடித்திருப்பின் அவிழ்த்தலும் பின்னியிருப்பின் கையாற் சுற்றுதலும் எனப் பலவாறு செய்து தலைவனை அணுகுவாள். காரணம் கூந்தலின் மயிர்க்கால்கள் உணர்வுமிக்கன. ஆதலின் அவள் கைகள் முதலிற் கூந்தலின்கண் சென்று

விளையாடுகின்றன. காதொன்று களைதல்: காதணிகளில் ஒன்றைக் கழற்றுவதுபோல முயலுவாள். ஊழணிதைவரல்: பிற அணிகளைத் தடவுவாள். உடைபெயர்த்து உடுத்தல்: உடையை அடிக்கடி சரிசெய்தும் பெயர்த்துடுத்தியும் நிற்பாள். 'கைவளை திருத்துபு கடைக்கணின் நோக்குதலும்' இம்மெய்ப்பாட்டு வகையே. பாரதிதாசனர் 'ஆடை திருத்தி நின்ருள் அவள்தான், அவனே ஆயிரம் ஏடுகள் திருப்புகின்ருன்' எனப் பாடியதும் இம்மெய்ப்பாட்டு வகையே.

இவையனைத்தும் வேட்கைமிகுதி என்னும் இரண்டாம் நிலைக்கண் நிகழும் மெய்ப்பாடுகள்.

மூன்று :

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப

வேட்கை மிகுதிப்பட்ட தலைவனும் தலைவியும் தனியிடத்துச் சந்திக்கின்றனர். அவளை ஆரத் தழுவி முயங்குகிருன் தலைவன். அப்போது புணர்ச்சிக் குறிப்பினளாய தலைவியிடம் நிகழும் மெய்ப்பாடுகள் விசித்திரமானவை. இவ்வாறு வேட்கைமிகும் சமயங்களில் தலைவியர் உள்ளம் வேறு செயல்வேருக இருக்கும். இப்போது தலைவி விலகி நகர்ந்தால் 'அணுகித் தழுவுக' என அழைக்கின்றனள் என்பது பொருள். அவள் 'நாணிக் கண்புதைத்தால்' 'கன்னம் கன்றிச்சிவக்க முத்தமிடும்' எனக்கட்டளையிடுவதாகப் பொருள். திரும்பினுல் விரும்புக என்றும் 'ஐயோ' என்ருல் 'இன்னும்' என்றும் 'போங்கள்' என்ருல் வருக என்றும் 'இது என்ன குறும்பு'

என்றால் இன்னும் இவ்வகையில் அதிகம் தேவை என்றும் பொருள்கொள்ள வேண்டுமென்பதை உலகறியும். சுருங்கச் சொன்னால் புணர்ச்சிக் காலத்தில் பெண்கள் பேசுவதே இல்லை, ஆனால் அவர்களது அங்கங்கள் ஒவ்வொன்றும் பேசுகின்றன ! இதனைத் தொல்காப்பியர் விளக்கும் முறையைக் காண்போம். அல்குல்தைவரல்: தனது உடையைச் சரிசெய்து கொண்டு மறைவிடத்தைப் பேணுதல். தலைவனுக்கு உடன்படாள் போன்று அவள் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயலும் காட்சி இது. அணிந்தவை திருத்தல்: இப்போது அவன், வளையலையும் பிற அணிகளையும் இட்டும் தொட்டும் இனையன செய்து கொண்டுமிருப்பானாதலின், அதனை அவள் விரும்பாதவள் போன்று அடிக்கடி சரிப்படுத்திக்கொள்ள முயலுவாள். இல்வலியுறுத்தல்: தனது குடிப்பிறப்புக் கூறி, 'தந்தை அறிந்தால் கோபிப்பார்' என்றும் 'தாயறிந்தால் வருந்துவாள்' என்றும் கூறிப் புணர்ச்சியினை மறுப்பாள் போன்று பேசுவாள். இதற்குப் 'புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மை படைத்துக்கொண்டு செய்தல்' என்பர் பேராசிரியர். இரு கையும் எடுத்தல்: புணர்ச்சிக் குறிப்பினளாய தலைவி இரு கைகளையும் மேற்கிளர்ப்பாள்.

இம் மெய்ப்பாடுகள் புணர்ச்சி விருப்பத்தைப் புலப்படுத்தும் இறுதி மெய்ப்பாடுகளாகும்.

இனி இக் களவுக்கால மெய்ப்பாடுகளில் இரண்டாம் பிரிவைக் காண்போம். இவை இயற்கைப் புணர்ச்சி தொடங்கி களவு ஊராருக்கு வெளிப்படுந் துணையும் நிகழ்வன.

நான்கு :

பாராட்டெடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப

பாராட்டெடுத்தல்: புணர்ச்சிக் காலத்தும் புணர்ச்சிக்குப் பிறகும் தலைவன் தலைவியைப் பலபடப் பாராட்டி மொழிவான். காதல் மதுவைக் குடித்து வண்டின் மனநிலை எய்திய அவன் பாராட்டிக் கூறும் மொழிகளெல்லாம் தேனென இனிக்கும் தலைவிக்கு. அவள் அவனது பாராட்டு மொழிகளை நினைந்து நினைந்து மகிழ்வாள். தனித்த இடத்துத் தனக்குத்தானே சொல்லியும் இன்புறுவாள். 'நேயக் கலவி மயக்கத்தே நிகழ்ந்த மொழியைக் கிளி உரைக்கக் கேட்டும்' மகிழ்வாள். மடந்தப உரைத்தல்: பிறகு அவள் பேச்சிலே ஒரு மாற்றம் விளையும். புணர்ச்சி நிகழுமுன் இருந்த இயல்பான தலைவியின் பேச்சுப் புணர்ச்சி நிகழ்ந்தபின் 'ஒருவிதமாக' மாறும். புணர்ச்சிக்கு முன் தலைவி கண்ணிலும் கருத்திலுமே மாற்றம் பிறக்கும். புணர்ச்சிக்குப் பின் அவள் பேச்சிலும் மாற்றம் பிறக்கும். முன்னெல்லாம் விளையாடும் பருவத்தே கொண்ட உலகியலறியாத் தன்மையோடிருந்தாள். இப்போது காமப் பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்றப் பேசுவாள். ஈரம் இல் கூற்றம் ஏற்று அலர் நாணல்: எப்படியோ இவளது காதல் உறவைப் பெற்றோரும் உற்றாரும் அறிவர். அன்பற்ற கடுஞ் சொற்களைப் பேசுவர். அப்போது அவ்வசை மொழிகளை ஏற்றுக்கொண்டு, இச்சச்சரவு வெளிப்பட்டு ஊராரும் உண்மையறிந்து அலர் தூற்று

வரோ என அவள் வெட்கப்படுவாள். உற்ருரும் ஊராரும் முன்பே அறிந்துகொண்டிருப்பர் எனினும் தலைவி தன் காதல் உலகறியாதது என நம்புதல் ஓர் இயல்பு. கொடுப்பவை கோடல்: மேலும் தலைமகனைச் சந்திக்கும்போதெல்லாம் அவன் கையுறையாக—காதற் பரிசாக யாது தரினும் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வாள். உலகம் அலர் தூற்றுமே என ஒருபுறம் அவள் வெட்கப்பட்டாலும் அவன் தரும் கண்ணியும் தழையும் பிற பரிசுகளும் உலகிற்கு அவனிடம் தனக்குள்ள உறவைப் பறைசாற்றுமே எனக் கருதாளாய், அவற்றை ஏற்றுக் கொள்ளவே விழைவாள். இதிலிருந்து புலனுவது என்ன? தலைவனிடம் உள்ள உறவுபற்றி உலகம் என்ன கருதினுலும் அதனை மேலும் மேலும் உறுதிப்படுத்தவே அவள் உள்ளம் விழையும் என்பதைத்தான் இம் மெய்ப்பாடு சுட்டுகிறது. இவை நான்கும் புணர்ச்சிக்குப் பின்னர் நிகழும் முதலாவது மெய்ப்பாடுகள்.

ஐந்து :

தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப

தெரிந்துடம் படுதல்: தலைவன் கூறுகின்றவற்றை ஆராய்ந்து அவற்றிற்கு உடன்படுவாள் தலைவி. புணர்ச்சிக்குப் பின் அவன் சொல்லும் ஒவ்வொரு சொல்லுமே அவளுக்குத் ‘திருக்குறளாகி’ விடும் என்பது இதன் கருத்து. இனி அவன் சொற்படி நடக்கவே அவள் உள்ளம் விழையும். திளைப்பு வினை மறுத்தல்: இதுவரை தோழியர் கூட்டத்துடன் சேர்ந்து மகிழ்ச்சியில் திளைத்து விளையாடித்

திரிந்தவள், இப்போது அவ்விளையாட்டுக்களில் விருப்பமிலாதவளாய் மறுத்துவிடுவாள். கரந்திடத்து ஒழிதல்: பெற்ளூேர் இவளை இற்செறித்துப் பாதுகாப்பர். இதனுல் காதல் நினைவே முழு இடம் பெறத் தனித்த இடங்களிலேயே எப்பொழுதும் இவள் காணப்படுவாள். கண்டவழி உவத்தல்: தலைவனை எப்போதாவது காணப்பெற்ருல் உடனே உவகை கொள்ளுவாள்.

தலைவனைக் கூடிப் பழகிய தலைவி இற்செறிக்கப்படுவாள் (வீட்டை விட்டு வெளியேருது பாதுகாக்கப்படுவாள்) ஆதலால், இம் மெய்ப்பாடுகள் அவள்கண் வெளிப்படுகின்றன.

ஆறு:

புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல்
விளம்பிய நான்கே ஆறெனமொழிப.

புறஞ்செயச் சிதைதல்: தலைவனை அடிக்கடி சந்திக்கப்பெருத தலைவி அவன் நினைவாகவே இருப்பாள். தோழிமார் தன்னை அழகுபடுத்தி ஒப்பனை செய்யுந்தோறும் அவள் மனம் உடைவாள். புலம்பித் தோன்றல்—அங்ஙனம் அழகுபடுத்தப் பெறினும் அக்கோலத்தோடு தலைவனைக் கூடப்பெருமையின் எப்பொழுதும் பொலிவழிந்தவள்போல் ‘புல்லென்று’ காணப்படுவாள். கலங்கி மொழிதல்: அவளையும் அறியாமல் தடுமாற்றமாகப் பேசுவாள். அவள் பேச்சு, சமயங்களில் அவளையே காட்டிக் கொடுப்பதாக இருக்கும். கையறவு உரைத்தல்: தெளிந்திருக்கும் சிலசமயத்திலும் செயலற்ற நிலையில் தான் இருப்பது பற்றியே பேசுவாள்.

மேலே சொல்லப்பட்ட ஆறு மெய்ப்பாட்டு வகைகளும் களவிற்கே உரியன என்று கண்டோம். இவை அனைத்தும் 'புணராத வழிப் பெரும்பான்மை நிகழும்' என்பது இளம்பூரணர் கருத்து. இவற்றுள் முதல் மூன்றும் புணராத வழி நிகழும், பின் மூன்றும் புணர்ந்தபின் நிகழும் என்பது பேராசிரியர் கருத்து. இதில் பேராசிரியர் கருத்தினைக் கொண்டே மேலே விளக்கம் தந்துள்ளோம்.

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப

மேலே சொல்லப்பட்ட மெய்ப்பாடுகளும், அவை போன்ற பிறபல மெய்ப்பாடுகளும் நிலைபெற்ற காதலுக்குரிய மெய்ப்பாடுகள் என்று நம்முன்னோர் கொண்டனர் என்பது இதன் பொருள். "நோக்கானை நோக்கி இன்புறுதல், தனியிடை நகுதல், நோக்குங்காலைச் செற்றார்போல் நோக்குதல், மறைந்து காண்டல், தற்காட்டுறுத்தல்" முதலியன "அன்னபிற மெய்ப்பாடுகள்" என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார்.

வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே

உயிர் மெலியும்படியாகக் காம உணர்வு மேலிட்ட விடத்து, அல்லது வேறு உடல்நலக் குறைவேற்பட்டு மெலிவு வந்த இடத்து மேலே குறிப்பிட்ட காதலுக்குரிய மெய்ப்பாடுகள் இன்றியும் கூட்டம் நிகழும் என்பது இதன் கருத்து. இம் மெய்ப்பாடுகள் அனைத்தும் நிகழ்ந்தே தீருமென்பதுமில்லை. இவற்றுட் சில நிகழும்; பல நிகழும்; ஒன்றிரண்டோடு காதல் வாழ்வு தொடங்கினாலும் தொடங்கும்; தொடங்கிய பின்பும் நிகழும்.

அவையும் உளவே அவையலங் கடையே

மேலே கூறிய அவையேயன்றி இனிக்கூறும் மெய்ப் பாடுகளும் காதல் வாழ்வில் நிகழ்வனவாம்.

## 2. ஏமாற்றத்தால் விளையும் மெய்ப்பாடுகள்

இவை களவுக் காலத்தில் நினைத்தவை கைகூடாதபோது காதலிபால் நிகழ்வன. இவற்றுட் சில கற்பின்கண்ணும் தலைவனைப்பிரிந்த தலைவியர் பால் நிகழக்கூடும். "உணவு செல்லவில்லை-சகியே உறக்கம் கொள்ளவில்லை" என்று பாடும் போதும் "பாலும் கசந்ததடி" என்று பதறும் போதும் "ஏடும் கிறுக்காச்சுது-என் எண்ணமும் கிறுக்காச்சுது" என்று புலம்பும்போதும் இம்மெய்ப்பாடுகள் உங்கள் நினைவிற்கு வரக்கூடும்.

இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல், பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல், உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல், மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல், அவன்தமர் உவத்தல்
அறன் அழித்துரைத்தல், ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்,
ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே

இன்பத்தை வெறுத்தல்: யாழும் குழலும், நிலவும், மலரும் முதலியனவாகிய இன்பத்திற்கேதுவான பொருள்கள் கண்டவழி வெறுத்துரைத்தல். இது,

சிறுகுழல் ஓசை செறிதொடீஇ வேல்கொண்டு
எறிவது போலும் எமக்கு

என்பதுபோல வரும்.

துன்பத்துப் புலம்பல்: துன்பத்தை வாய்விட்டுக் கூறிப் புலம்புதல். இது

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன் (குறள் 1167)

என்பதுபோல வரும்.

எதிர்பெய்து பரிதல்: தலைவனது உருவெளித் தோற்றங்கண்டு வருந்துதல்.

கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர் (குறள் 1126)

என்பது இது.

ஏதம் ஆய்தல்: தலைவனது குற்றத்தை ஆராய்தலும், தலைவனொடு கூடுதற்குத் தடையாக வரும் குற்றங்களை ஆராய்தலும் இம் மெய்ப்பாடாகும். இது,

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்றுபவர் (குறள் 1165) என்றும்,
இரவு நீ வருதலின் ஊறும் அஞ்சுவல்
(குறுந்தொகை 217)

என்றும் வரும்.

பசியட நிற்றல்: உணவுண்ணாதிருத்தல். இது

"இனியான், உண்ணலும் உண்ணேன்,
வாழலும் வாழேன் (கலித்தொகை 23)

என்று வரும்.

பசலை பாய்தல்: கூட்டம் பெறாத தலைவியர் பசலை நோயுற்று மாமைக்கவின் (உடற்பொலிவு) இழத்தல். இது,

எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே

எனவரும். (குறுந்தொகை 27)

உண்டியிற் குறைதல்: உண்ணும் சிறிது உணவிலும் வெறுப்புக்கொண்டு குறைத்துண்ணல். இது 'தீம்பால் ஊட்டினும் வேம்பினும் கைத்தலா'கும்.

உடம்புநனி சுருங்கல்: உணவின்மையால் உடல் மெலிவுறல். இது,

ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவதுகொல்என் வருந்திய உடம்பே(நற்றிணை 284)

எனவரும்.

கண்துயில் மறுத்தல்: உறக்கத்தைக் கொள்ளக் கண்கள் மறுத்தல். இது,

நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே (குறுந்தொகை-6)

எனவரும்.

கனவொடு மயங்கல்: ஒருவழியாக உறங்கும் சிறு பொழுதினும் கனவு கண்டு மயங்குதல். இது,

நனவினல் நல்காக் கொடியார் கனவினல்
என்னெம்மைப் பீழிப்பது. (குறள் 1217)

எனவரும்.

பொய்யாக் கோடல்: தலைவன் கூறும் உண்மையையும் பொய்யாகக் கருதுதல். மெய்யே என்றல்: தலைவன் பொய்யே கூறினும் மெய்யாகக் கொள்ளுதல். ஐயம் செய்தல்: தலைவன் கூற்றை உண்மையென்றும் துணியாது, பொய்யென்றும் தள்ளாது மறுகுதல். இது

'ஒண்ணுதல் நீவுவர் காதலர், மற்றவர்
கண்ணிய தெவன்கொலோ அறியேன் என்னும்'

என்பது போலவரும்.

அவன் தமர் உவத்தல்; தலைவனது சுற்றத்தார் யாரையும் கண்டாலும் தலைவி மனம் மகிழுதல். அறனழித்துரைத்தல்: அறத்தினையே அழித்து வெறுத்துக் கூறுதல். இதற்கு 'அறனளித்துரைத் தல்' என்று பாடங்கொண்டு அறக்கிழவனை அன்பு செய்தல்' எனப் பொருள் கூறுகிறார் பேராசிரியர். ஆங்கு நெஞ்சழிதல்: அவ்வாறு அறத்தைப் பழித் துக் கூறுமிடத்தும் மனம் உடைந்து கூறுதல். இதனை

....என்னெஞ்சம்
அழியத் துறந்தானைச் சீறுங்கால், என்னை
ஒழிய விடாதீமோ என்று

(கலித்தொகை 143)

என வரும் பாடலால் அறியலாம்

எம் மெய்யாயினும் ஒப்புமை கோடல்: தான்காணும் பொருளிலெல்லாம் தலைவனது வடிவு வண்ணம் பண்பு வினை இவற்றுள் ஒன்றின் ஒப்புமை கண்டு தலைவி கூறுதல். தலைவனும் தான் காணும் பொருள் களில் தலைவியின் ஒப்புமை கண்டு கூறுவான் எனவும் அவையும் இம்மெய்ப்பாட்டில் அடங்கும் எனவும் நாவலர் சோமசுந்தர பாரதியார் விளக்கு கின்றார். இம் மெய்ப்பாடுகள் தலைவிக்கே உரியன வாயினும் தலைமகற்கும் ஏற்ப வருவன கொள்க என்கிறார் இளம்பூரணர்.

ஒப்புவழி உவத்தல்: அங்ஙனம் ஒப்புமை கண்டவழி வரும் மனமகிழ்ச்சி. உறுபெயர் கேட்டல்: தலை வன் பெயரும் புகழும் பிறர்கூறக் கேட்டு உளம் மகிழுதல். இறுதியாக 'நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே' என்பதற்கு 'மனக் கலக்கமுற்று நிகழும்

பிற மெய்ப்பாடுகளும் இவ் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதுவே பொருளாகக் கொள்ள வேண்டும். இம் மெய்ப்பாட்டியற் பகுதிக்கு உரை கண்ட மூவரும் இக் 'கலக்கம்' பற்றி வேறுபட உரை கண்டுள்ளனர். (இளம்பூரணர் – பேராசிரியர் – நாவலர் சோமசுந்தர பாரதியார் என்ற மூவரும் மெய்ப்பாட்டியல் பகுதிக்கு உரை வகுத்துள்ளனர்.) கலங்கி மொழிதல் என்றும், சொல்லத் தகாதன சொல்லுதல் என்றும், மயக்க முறல் என்றும் அவர்கள் கூறுங்கருத்துக்கள் ஒன்றின் ஒன்று தொடர்புடையனவாயினும் 'நலத்தக நாடினல் (நன்ருக ஆராய்ந்தால்) எனப் பிரித்துக் கூறுவதால் 'கலக்க முற்று நிகழும் பிற அனைத்தையும்' சேர்த்துக் கொள்க எனப் பொருள்காணல் சிறப்பாகும்.

## 3. வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள்

தலைவன் களவொழுக்கத்தை நீட்டிக்கும் பொழுது, தலைவியும் தோழியும் அதனைத் தடுத்து 'விரைவில் திருமணம் செய்துகொள்' எனத் தூண்டுவர். அப்போது தலைவிபால் நிகழ்வனவே இம்மெய்ப்பாடுகள். இதுவரை ஆறு செல்லும் வழியிற் செல்லும் படகுபோல அவன் மன வழிச் சென்றுகொண்டிருந்த மங்கைநல்லாள், இனி ஆற்றை எதிர்த்துச் செல்லும் படகாவாள். இருவரும் திருமணக் கரைசேரும் முயற்சியின் விளைவே இது. ஆண்கள் எப்பொழுதுமே களிப்பில் மூழ்கிக் கடமையை மறந்துவிடுவர். அவர்கட்குத் தக்க சமயத்தில் கடமையை நினைவூட்டலும் செயலாற்றத் தூண்டுதலும் பெண்களின் பொறுப்பாகும். எனவே, இனித் தலைவியின்பால் தலைவனுக்கு எதி

ரான மெய்ப்பாடுகள் நிகழும். அவை அவன்மீது கொண்ட வெறுப்பால் நிகழ்வன அல்ல; அவனுக்குக் கடமையை அறிவுறுத்தி விரைவில் மணம் செய்துகொள்ளத் தூண்டுவனவாகும் என உணர்தல் வேண்டும்.

முட்டுவயிற் கழறல், முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல்
தூதுமுனிவு இன்மை, துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல், கட்டுரை இன்மைஎன்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்

முட்டுவயின் கழறல்: களவொழுக்கத்திற்கு முட்டுப்பாடு–இடையூறு வந்தபொழுது அதற்காக முன்பு வருந்தியவள், இப்போது தலைவனைக் கடிந்துரைப்பாள். ‘நீர் விரைந்து மணம்செய்துகொள்ளாததால்தானே இவ்வளவு துன்பமும்’ என்று சினப்பாள்; முகம் சிவப்பாள். முனிவு மெய்ந் நிறுத்தல்: முன்பு தலைவனைக் கண்ட வழி உவந்தவள் இன்று அவனைக் கண்டதும் முனிவை-சினத்தை உள்ளத்தாற் கொள்ளாவிட்டாலும் உடலிற் கொண்டு காணப்படுவாள். அச்சத்தின் அகறல்: இக்களவைப் பிறர் அறியின் தீது நேருமெனக் கூறிச் சந்திக்காமல் நீங்குவாள். அவன் புணர்வு மறுத்தல்: சந்தித்த வழியும் பகற் குறியும் இரவுக் குறியும் மறுத்துக் கூறுதல். தூது முனிவு இன்மை: அவனிடமிருந்து வரும் தூதுவரை வெறுமை. இதற்குத் தலைவி பறவையும் மேகமும் போல்வன கண்டு ‘என்னை விரைந்து வரைந்து கொள்ளுமாறு அவரிடம் சொல்லுங்கள்’ என்று தூது விடுதல் எனப் பேராசிரியர் தரும் விளக்கமும் பொருத்தமாகக் காணப்படுகிறது. துஞ்சிச் சேர்

தல்: சினத்துடன் தலைவனைச் சந்தித்தவள் வருத்தம் மிகுந்த தோற்றத்தோடும் தலைவனை அடைதல். இத்தோற்றம் கண்டேனும் மனம் வருந்தி அவன் வரைந்துகொள்ள முந்துவான் அல்லவா! காதல் கைம்மிகல்—இவ்வாறெல்லாம் தலைவனுக்கு எதிராக நடப்பினும், அவனுடன் இணைபிரியா வாழ்வையே விரும்புகின்றாளாதலால் காதல் மிகப்பெற்று வருந்துதல். கட்டுரை இன்மை: உள்ளக் கருத்தினை உரையாதிருத்தல். பிறவாறு பேசுதலும் நடித்தலும் தவிர்த்து 'என்னை வரைந்துகொள்' என அவள் ஒருகாலும் வாய்விட்டுக் கூறாள்.

இவை எட்டும் வரைந்தெய்திக் கூடும் அழியாத கூட்டத்திற்கு ஏதுவான மெய்ப்பாடுகளாம்.

## 4. வரைந்த பின்பு நிகழும் மெய்ப்பாடுகள்

தலைமகள் திருமணம் செய்துகொண்டபிறகும், சில மெய்ப்பாடுகளைப் பெற்று விளங்குகிறாள். தமிழர் நாகரிகத்திற்கு ஏற்ற இம் மெய்ப்பாடுகள் வாழ்க்கையின் உயர்வுக்கும் இன்பத்திற்கும் இன்றியமையாதன.

'தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்
புணர்ந்துழி உண்மை பொழுதுமறுப் பாதல்
அருண்மிக உடைமை அன்புமிக நிற்றல்
பிரிவாற்றுமை மறைத்தவை உரைத்தல்
புறஞ்சொல் மாணுக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே

தெய்வம் அஞ்சல்: கணவனையே தெய்வமாகக் கொண்ட தலைவி அவ்வொழுக்கத்திற் குறை நேரா

வண்ணம் அஞ்சிவாழ்தல். தலைமகன் குல தெய்வத்திற்குத் தலைவி அஞ்சி வாழ்தல் எனவும் பிற தெய்வங்கட்கு அஞ்சி வாழ்தல் எனவும் பிறர்கூறும் உரையெலாம் தமிழர் பண்பாட்டுடனும், தலைவனை மனத்தினால் வரித்தபிறகு பிறையும் கண்டு தொழாத தமிழ்ப் பெண்குலத்தின் பெருமையுடனும் பொருந்தவில்லை. புரை அறந் தெளிதல்: இல்லறத்திற்குப் பொருந்திய செயல்களை அறிந்து கடைப்பிடித்து வாழ்தல். விருந்தெதிர் பேணலும் அருங்குடி காத்தலும் அனையன இவ் அறங்கள்.

இல்லதுகாய்தல்: தலைவன்கண் இல்லாதனவற்றை உள்ளனவாகக்கொண்டு அவனைப் பொய்யாகச் சினத்தல். உள்ளது உவர்த்தல்: அவனிடம் உள்ள நற்பண்புகளையும் வெறுத்தாள்போற் கூறுதல். இவை இரண்டும் இல்லற வாழ்வைச் சுவைப்படுத்தும் ஊடலுக்கு வேண்டிய மெய்ப்பாடுகள். புணர்ந்துழி உண்மை: ஊடற்காலத்து மாறுபடக் கூறுகின்றவள் புணர்ச்சிக் காலத்து உண்மைகூறி மகிழுதல். பொழுது மறுப்பாதல்: தலைவனில்லாத போது பொழுதை வெறுத்துக் கூறுதல் அருண்மிக உடைமை: தலைவனிடத்தும் பிறரிடத்தும் அருளுடையவளாக விளங்குதல். அன்புமிக நிற்றல் - குடும்பத்தில் அன்பு பெருக வாழ்தல். பிரிவாற்றாமை மறைத்தவை உரைத்தல்: களவுக் காலத்தில் தலைவன் பிரிவைப் பொறுத்துக்கொண்டவள் இப்போது பொறுக்க இயலாதவளாய் முன்பு மறைத்துவைத்த நிகழ்ச்சிகளையும் கூறி வருந்துதல்.

முயங்கல் விடாஅல் இவையென மயங்கி
யானோம் என்னவும் ஒல்லார் தாமற்று
இவைபா ராட்டிய பருவமும் உளவே (அகம் 26)

எனவரும் பாடலில் பிரிந்துவந்த தலைவனிடம் தலைவி வருந்திக் கூறுங்கால் ‘முன்பு எம்மை இவ்வாறு விருப்பத்தோடு தழுவிக் கொண்டீரே’ என முன்னர் வெட்கத்தால் மறைத்தவற்றை இங்கே எடுத்தியம்புகிருள்.

புறஞ்சொல் மாணுக் கிளவி: தலைமகற்கு நேரும் புறஞ் சொல்லை—பழிச்சொல்லைப் பொருது தலைவி கூறும் சொற்கள். அவனுக்கு வரும் பழியை நீக்கலும் அவள் கடமையாகும். இதனைத் திருவள்ளுவர் ‘தகைசான்ற சொற்காத்தல்’ என்பர். இவை பத்தும் வரைந்தபின் தலைவிபால் பொருந்தியிருக்க வேண்டிய மெய்ப்பாடுகளாம்.

## 5. காதல் வாழ்வுக்குரிய மெய்ப்பாடுகள்

காதலுக்குரிய மெய்ப்பாடுகள் ஒப்பின் வகையென்றும் கூடாதனவென்றும் இரண்டுவகைப்படும். தலைவன் தலைவியர் இருவருக்கும் ஒருசேரப் பொருந்தி இருக்க வேண்டிய பண்புகளே ஒப்பின் வகையிற் கூறப்படுகின்றன. இப் பண்புகளின் பொருத்தம் பார்த்தேனும், இக்கால முறைக்கேற்பத் திருமணம் நடத்துதல் நலம் எனத் தோன்றுகிறது. இன்று ‘சாதகம்’ பார்த்துப் பொருத்தம் கணித்துத் திருமணம் செய்கின்றனர். இதைவிடத் தொல்காப்பியம் பார்த்துப் பண்புப் பொருத்தங்களை ஒப்பிட்டு முடிவுசெய்து திருமணம் செய்தல் உண்மையிலேயே நலம் பயக்கும் எனத் தெளியவேண்டும். மேலும், காதல் நெறிப்படும் ஆணும் பெண்ணும் தனக்குகந்த துணையைத் தேர்ந்தெடுக்கும் வழியை இவ் ஒப்பின் வகை காட்டுகிறது.

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே

பிறப்பு: குடிப்பிறப்பு, பரம்பரைப் பண்பைக்குறிக்கும்.

குடிமை: ஒழுக்கம். நற்குடிக்கேற்ற நல்லொழுக்கம்.

ஆண்மை: பெண்ணுக்குப் 'பெண்மை'யும் ஆணுக்கு 'ஆண்மையும்' கொள்க.

ஆண்டு: வயது ஒப்புமை

உருவு: உருவ ஒப்புமை

நிறுத்த காமவாயில்: நிலைத்த காமநிலை. இருவருக்கும் உரிய காம உணர்வுநிலையின் ஒப்புமை மிக இன்றியமையாதது.

நிறை: மனநிறை; அடக்கம்

அருள்: ஒருவர் மற்றவர் துன்பங் கண்டு பரிதல்

உணர்வு: ஒன்றிய உணர்வு

திரு: செல்வம். இதனையே தலைமையாகக் கருதுவோர், தொல்காப்பியர் இச் செல்வத்திற்கு இறுதியிடம் தந்துள்ளமையை உணரவேண்டும். இவை பத்தும் ஒன்றியிருத்தல் மிகச்சிறப்பு. இவற்றுட் பெரும்பான்மை ஒத்திருத்தல் சிறப்பு. பெரும்பான்மை மாறுபடல் சிறப்பன்று. இவற்றுள் தலைவியைவிடத் தலைவன் சிறிது உயர்வுடையவனாயினும் தவறில்லை. இவை காதலிக்கும் முன்பே இருவரும் காணவேண்டிய ஒப்புமைகள். ஆனால் தொல்காப்பியர் இதனை இறுதியில் கூறியிருக்கும் காரணம் திருமணமானவரும் இவை தம்முள் ஒத்திருக்குமாறு வாழவேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கேயாம்.

தலைவன் தலைவியர்பாற் கூடாத தீய பண்புகளையும் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுகின்றார். இத்தீய பண்புகள் அனைத்தும் புறக்கணித்துத் தள்ளப்படவேண்டியவை. இல்லற வாழ்வில் இவை எளிதில் தலைகாட்டக் கூடியனவாக இருத்தலினாலே தான் இவற்றைச் சுட்டிக்காட்டி 'நீக்குக' என எச்சரிக்கையும் செய்கிறார் தொல்காப்பியர்.

நிம்புரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்

நிம்புரி : அழுக்காறு, ஒருவர்மீது ஒருவர் பொருமைப் படுதல்.

கொடுமை : ஒருவர் கேட்டை ஒருவர் சூழும் கொடிய செயல்.

வியப்பு : ஒருவரைவிட ஒருவர் பெரியர் என உயர்வு பேசுதல்.

புறமொழி : ஒருவர் பழியை ஒருவர் புறங்கூறித் திரிதல்.

வன்சொல் : பிறர் மனத்தை வருத்தும் கடுஞ்சொல் பேசுதல்.

பொச்சாப்பு : சோர்வு. தம்தம் கடமையை மறத்தல்.

மடிமை : சோம்பல் உடைமை.

குடிமை இன்புறல் : தம்தம் குடிப்பெருமை பேசி இன்புறுதல்.

ஏழைமை மறப்பு : விட்டுக்கொடுக்கும் எளிமையை மறத்தல்.

ஒப்புமை : தலைவன் தலைவியைப் பிறமகளிரோடு ஒப்பிட்டு ஆராய்தலும், தலைவி கணவனைப் பிற

ஆடவரோடு ஒப்பிட்டு ஆராய்தலும் ஒப்புமையாம். மற்றெருரு ஆடவனுடன் தன் கணவனை ஒருத்தி ஒப்பிட்டுப் பார்த்தால், பிறகு அவள் மனம் மாறுபாடு அடைதலுக்குக் கேட்கவாவேண்டும்! எனவே இவை பத்தும் கூடாதனவாம்.

மெய்ப்பாட்டிற்கு அடிப்படையான பண்புகளையே இவ்விறுதிப் பிரிவு கூறுகிறது.

முன்னிகழ்ந்த வாழ்க்கையின் பயனாய்த் தோன்றிப் பின்னிகழும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய்த் திகழ்வது இலக்கியம். தமிழிலக்கியம் பல்லாயிரம் ஆண்டுப் பரம்பரையிற் பிறந்தது. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகட்குச் சிறந்த பயன் தரத்தக்கது. இக் காதல் மெய்ப்பாடுகள் இப் பேரிலக்கியத்தின் பயனாக நாமடைந்துள்ள பேறுகள். இவையனைத்தையும் பயின்று நாம் பயனடைய வேண்டும். தமிழ்நாட்டு இலக்கியம் நமக்குரிய தனிப் பண்புடன் வளர்க்கப்பட இப்பயிற்சி உதவும். பிற நாட்டு இலக்கியங்கள் நமக்கு மிகமிகத் தேவை. ஆனால் நமதாக, நாமாக உருவாக்கும் இலக்கியங்களும் கலைகளும் அப் பிறநாட்டுப் பாணியையே, முறையையே முழுக்க முழுக்கப் பின்பற்றியிருக்குமானால், இன்று நாம் நாடகத்திலும் இசையிலும் பெரும்பகுதி இழந்துவிட்டுத் தவிக்கிறோமே, இந்த நிலை நமக்கு இலக்கியத்திலும் ஏற்படும். நம்மிடம் தனிச் சிறப்பு இருந்தும் நாம் ஏன் இழக்கத் துணிய வேண்டும். இக்காலத்திற்கு ஏற்பத் தோன்றும் மறுமலர்ச்சி இலக்கியங்களாயினும் அவை தமிழ் மரபு போற்றி அதனுடன் இணைந்து உருவாகி வளர வேண்டும்.

இக்காதல் மெய்ப்பாடுகள் நம் புலவர்களின் வாழ்க்கை அனுபவத்திற்கும் இலக்கியத் திறனுக்கும் நுண்ணிய உணர்வுக்கும் சான்ருக உள்ளன. கதையாளரும் இம் மெய்ப்பாடுகளே அடித்தளமாகக் கொண்டு கதைகள் புனேயலாம் அன்ரே? கவிஞர்கள் படைக்கும் காதலியர் ஆங்கில நாட்டுப் பாணியில் ஆடி ஓடி வந்து தலேவனுக்கு நாணத்தை விளேவிக்காமல், அச்சத்தால் தலேவனின் நெற்றி வியர்க்கச் செய்யாமல், தமிழ்நாட்டுப் பாணியிலேயே வந்து புகுமுகம் புரிந்து, நகுநயம் மறைத்து, உடை பெயர்த்துடுத்துக் காதல் உணர்வினேப் புலப்படுத்தலாம் அன்ரே?

இக் காதல் மெய்ப்பாடுகள் போலத் தொல்காப்பியத்தில் மேலும் நாம் கற்கவேண்டிய பகுதிகள் பல உள. இனியேனும், தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் திருக்குறளும் பிற தமிழ் இலக்கியங்களும் நம் இல்லத்தையும் ஒவ்வொருவர் உள்ளத்தையும் இடனுகப் பெற்று வாழ வேண்டும். அவற்றிலே ஆர்வம் உள்ள அளவு அறிவும் பெருக வேண்டும். பிறகு, உலகப் பல்கலேக் கழகங்கள் தமிழ் இலக்கியங்களே எதிர்நோக்கி, வரவேற்று, இடம் அளித்துப் போற்றும் காலமும் வரக்கூடும்.

# இன்பச்சுவை - உவகை

## தொல்காப்பிய விளக்கம்

தமிழில் உள்ள எண்சுவைகள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி, உவகை என்பன. இன்பம், மகிழ்ச்சி, உவகை முதலியன ஏறத்தாழ ஒரு பொருளன. சுவை என்பது மெய்ப்பாடு; உள்ளத்து உணர்வின் வெளிப்பாடு. தொல்காப்பியம் அதன் வகைகளைப் பிரித்துக்காட்டி விளக்குகிறது.

> செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
> அல்லல் நீத்த உவகை நான்கே

செல்வத்தால் வரும் உவகை, கல்வியால் வரும் உவகை, காமப் புணர்வால் வரும் உவகை, விளையாட்டால் வரும் உவகை எனத்துன்பம் கலவாத உவகை நான்கு வகைப்படும். அக்காலத்தார் விளையாட்டு எனின் ஆறு சோலை முதலிய இடங்களில் காதலர் விளையாடியமையைக் குறிக்கும் என உரை கண்டனர். இக்காலத்திற்கு ஏற்ப விளையாட்டுக்கள் அனைத்தினும் பிறக்கும் உவகையை இதன்கண் கொள்ளலாம். பிறர் துன்பம் கண்டு தோன்றும் இன்பம் உவகையன்று என்பதற்கே 'அல்லல் நீத்த உவகை' என்றார். தன்கண் தோன்றிய இன்பம் கண்டும் உவகை பிறக்கும்; பிறனுடைய இன்பம் கண்டும் உவகை பிறக்கும். காதலால், புணர்வு வகையால் நிகழும் உவகைபற்றிய பாக்களே இலக்கியங்களில் மிகுதி. செல்வம், கல்வி (புலன்), விளை

யாட்டு இவற்ருல் வரும் உவகைபற்றிய பாடல்கள் இலக்கியங்களில் மிகுதியாக இல்லை.

வடநூலாரின் நவரசம்வேறு; தென்னுட்டாரின் எண்சுவை வேறு. நவரசங்களான சிருங்காரம், கருணை, சாந்தம், ரவுத்திரம் (சினம்), பீபற்சம் (இழிவு), வீரம், ஹாசியம் (நகை), பயானகம் (அச்சம்) அற்புதம் என்பன ஒன்பதுடன் எண்சுவையில் பெயரளவில் பொருத்தமுடையன உள்ளன. இப் பெயர்ப் பொருத்தம் ஒன்றே கொண்டு இரண்டும் ஒன்றே என மயங்கினவர் பலர். நவரசங்கள் நடிப்பை ஒட்டியன; நாடகத்திற்கு உரியன. தமிழர் தம் எண்சுவைகள் வாழ்வை ஒட்டியன, இலக்கியம் அனைத்திற்கும் உரியன, செய்யுளின் உறுப்பாக விளங்குவன. இவ்வாறு இவை இரண்டிற்கும் பிறப்பிலும் குறிக்கோளிலும் வேறுபாடுகள் உள.

இடைக்காலத்தில் தோன்றிய ‘செயிற்றியம்’ என்ற நூல், தமிழ்ச் சுவை அடிப்படையை வடமொழி ரசங்களுடன் ஒப்பிட்டுக் கலந்து விளக்கம் தருகிறது. அதில் இச்சுவை வகை நான்கில் காமப் புணர்ச்சியும் காம விளையாட்டுமாகிய ‘சிருங்காரம்’ ஒன்றே விளக்கப்படுகிறது. அது வருமாறு :

ஒத்த காமத்து ஒருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத்து ஒருவனெடு பலரும்
ஆடலும் பாடலும் கள்ளுங் களியும்
ஊடலும் உணர்தலும் கூடலும் மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புனல் என்றிவை
விருப்புறும் மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கட லாடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலும்
குளம்பரிந் தாடலும் கோலம் செய்தலும்

கொடி நகர்ப் புகுதலும் கடிமனை விரும்பலும்
துயிற்கண்இன்றி இன்பம் துய்த்தலும்
மயிற்கண் மடவார் ஆடலுண் மகிழ்தலும்
நிலாப் பயன் கோடலும் நிலம்பெயர்ந் துறைதலும்
கலம்பயில் சாந்தொடு கடிமலர் அணிதலும்
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்காரம்என வேண்டுப இதன்பயன்
துன்பம் நீங்கத் துகளறக் கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கமுத் தம்மே''.

இவ்வாறு பலவிதமாக விளக்கப்படும் சிருங்கார ரசத்தை நான்கு வகையான உவகையில் ' புணர்வு ' வகை எனினும், அதுவும் முழுதும் பொருந்துவ தன்று. வெறும் உடலின்பமும் லீலைகளும் உவகை யாதல் எக்காலத்தும் இல்லை. மேலும் சிருங்காரம் ஒரு பாடலின் கருத்தாக வரும். உவகையோ பாட்டுக்கு இன்றியமையாத உறுப்பாக வரும். ஒரு பாடலைச் சிருங்காரம் என்று அதன் கருத்தைக்கொண்டு கூறிவிடலாம். தமிழில் பாடலமைப்பைக் கொண்டு தான் உவகைச் சுவை அறியப்படும். இதனையறிந்த நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர், அ. நாராயணசாமி ஐயர் ஒவ்வொரு பாடலின் அடியிலும் திணைதுறை இதுவெனக் குறிப்பிட்டிருப்பது போல இன்ன சுவையினது என்பதையும் எழுதியுள்ளார். பிற நூல்களிலும் சுவைக் குறிப்புக்காட்டவேண்டியது உரையாசிரியர் கடமையாகும்.

கவிஞர்கள் அனைவரும் உவகைச் சுவை ததும்பக் காதற் பாடல்களையே பெரும்பான்மையாகப் பாடியுள்ளனர். காதலில் பிற சுவைகளும் உள வேனும் உவகையே தலையாயதாகும்.

# படக்காட்சி

தடமருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டிலோளே, அம்மா அரிவை!
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே!! [1]

அவளுக்குத் தன் கணவன்மீது கடுஞ்சினம். இரண்டு நாட்களாக அவன் வீட்டில் தங்காததே காரணம். யாரோ பரத்தையை நாடிச் சென்று திரும்பியிருக்கிருன் என எண்ணிருள்; கடுஞ் சினங்கொண்டு விலகிச் சென்று விட்டாள்!

தன்பால் அவள்கொண்ட சினத்தை எங்ஙனம் மாற்றுவது? அவளுடைய சிரித்த முகத்தை எப் போது காண்பது? நெடுநேரமாக இதுவே அவன்

1. மாங்குடி கிழார்-நற்றிணை-கஉ௦.
தடமருப்பு-வளைந்த கொம்பு. குழவி-கன்று. யாத்த -கட்டிய. தாழ்-மோதிரம். அட்டில்-சமையல்கட்டு. எயிறு-பல்.

சிந்தனையாயிற்று. முற்றத்தில் அவன் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தான். ஒருமுறை சற்று நின்று, அட்டிற் பக்கம் எட்டிப்பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி :

"வளைந்த கொம்புகளையுடைய எருமைகளின் இளமை பொருந்திய நடையினையுடைய கன்று களைத் தூண்தோறும் கட்டியிருக்கின்ற காட்சி வாய்ந்த அந்த நல்ல வீட்டில்,

குழை என்னும் காதணியை அணிந்த அழகிய அப்பேதைப் பெண், சிறிய மோதிரம் அணிந்த தன் கை விரல்கள் சிவக்குமாறு வாழையின் ஈரத் தண்டுகளை வலிந்து கறிக்கு ஏற்பத் திருத்தினாள். அதனை அடுப்பிலிட்டுச் சமைக்குங்கால் எழுந்த புகை படிந்து விரும்பத் தகுந்தகண்களுடன் காணப் படுகின்றாள். சிறப்புண்டாக விளங்கும் பிறை போலும் நெற்றியிலே தோன்றிய சிறிய நுண்ணிய பலவாகிய வியர்வைத் துளிகளை, அழகிய துகிலின் முன்தானையாலே துடைத்துக்கொண்டே, நம்மீது கொண்ட புலவி தணியாமல் சமையற் கட்டில் இருக்கின்றாள் அவள்.

எமக்கு ஏற்றதோர் விருந்து இப்போது வருமாக என விரும்புகிறேன். விருந்தினர் வரின் அவள் சினப்பதில்லை. சிறிய முள்போன்ற பற்களைக் காட்டிப் புன்முறுவலுடன் விருந்துபோற்றும் நாகரிகப் பண்புடையாள் என் துணைவி! ஆ! இப்போதுமட்டும் விருந்தினர் வந்தால் அப் புன்முறுவலை நாம் காணக்கூடுமே !!"

*

தலைவன் ஏதோ தவறு செய்திருக்கிறான். அத னால் அவள் முகம் சிவந்துபோயிற்று; கூம்பிப் போயிற்று. நெடுநேரமாகத் தலைவியின் மலர்முகம் இதழ் விரிந்து புன்முறுவல் பூக்குமாற்றைக் காணப் பெறுமல், வான் மழை காணுது வாடிய பயிர்போல, அவனுள்ளம் வாடியமையை ‘வருகதில் விருந்தே’ என்றும் ‘முறுவல் கொண்ட முகங்காண்கம்மே!’ என்றும் அவன் கூறும் சொற்கள் துடிப்புடன் வெளிப்படுத்துகின்றன. விருந்தினர் வந்தால் குடும்பச் சண்டையை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டாள். கணவன் மீது கொண்ட புலவியைப் போக்கிக்கொண்டு, புன்முறுவலுடன் உபசரிப்பாள்! விருந்தினர் வரவில்லையேல் அவள் சமைத்து வைத்துவிட்டு அப்புறம் போகக்கூடும்; வேலையா ளைக் கொண்டு சோறு போடப் பணிக்கக்கூடும்; அல்லது வேண்டா வெறுப்பாகச் சோறு போடவும் கூடும். அப்போது முறுவல் பூத்த முகம் காண முடியாது! விருந்தினர் வரின் சினம் தானே மறைந்தொழியும். அவளே விருந்து பரிமாறுவாள். சச்சரவு இல்லையெனக் காட்டுவான் வேண்டிப் புன் முறுவலும் காட்டுவாள். அப்போது தலைவன் உள் ளம் குளிரும். இது தலைவனின் பலநாள் அனுப வம். அதனுற்றான் விருந்தினர் வரவை அவன் அவ்வளவு ஆவலோடு எதிர்பார்க்கிறான்!

முகர்ந்தாலே வாடிவிடும் அனிச்சப்பூப் போல முகந்திரிந்து நோக்கியவுடனே, வரும்விருந்தினர் வருந்திச் செல்வர் அல்லவா? இத்தகைய விருந் தினர்முன் குடும்பச் சச்சரவுகளைக் காட்டாமை, தலைவியின் பண்பு. தமிழர் ‘அகம்’ போற்றிய காலத்து நாகரிகம். இன்று வீட்டில் நடக்கும் சிறு

சண்டையையும் ஊரார் அறிவான் வேண்டித் தெரு வில் வந்து, தலைவி இரைந்து பேசுதலும் தலைவன் பஞ்சாயத்துத் தேடுதலும் தமிழர் நாகரிகமே. இது 'அகம்' 'புறமா'ன நாகரிகம் போலும்!

நடையாலும் அமைப்பாலும் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தும் திறத்தாலும் இது கவிதையாகும். ஆயினும் இலக்கியத்தின் பிற கூறுகளையும் இதில் காண்கிறோம். தலைவன் இங் கும் அங்கும் நடக்கின்றான்; கையைப் பிசைகின் றான்; விருந்தினர் யாரும் வாராரோ என்று அடிக் கடி ஆவலோடு தெருப்பக்கம் பார்க்கின்றான். உள்ளே அவள் சமைத்துக்கொண்டிருக்கின்றாள். நெற்றியில் தோன்றும் குறு வியர்வையை முன் தானையால் துடைத்துக்கொண்டு, சினந் தணியாத முகத்தோடு காணப்படுகிறாள். இக் காட்சியைக் காட்டும் விதத்தில் இதனை ஒரு நாடகம் எனலாம்.

நாடகங்கள் கண்ணால் காண்பன. இந் நாடக வழக்கை அடித்தளமாகக் கொண்ட இலக்கியங் களோ கருத்தால் காண்பன. எனவே நாடகப் பண்பைக் கருவாகக் கொண்ட கவிதைகள் நாடகத் திலும் மேலானவையாகத் திகழ்வதற்கு வழியிருக் கிறது. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானப் படைப்பு, திரைப்படம். திரைப்படம் நாடகத்தி னின்றும் விரிவுபடுத்தி வளர்க்கப்பட்ட கலை. எனவே நாடகத்தைக் கருவாகக் கொண்டு வெளிப் பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் கலை—சங்க இலக் கியம் அதே நாடகக் கருவைக் கொண்டு வளர்ந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானக் கலை—திரைப் படம். இவ்வகையில் இரண்டாம் நூற்றாண்டுக்கு

முந்திய சங்கக் கவிதைக் கலைக்கும் இருபதாம் நூற்ருண்டுத் திரைப்படக் கலைக்கும் உள்ள ஒற்றுமைகள் பல. இப்பாடலில் அவ்வித ஒற்றுமை வருவதனை, நாம் உய்த்துணரவேண்டும்.

திரைப் படத்தில் காட்சிப் பதிவு முறை (Camera) முக்கியம். புகைப்படக் கருவியால் சேய்மைக் காட்சி, அணிமைக் காட்சி (Close-up) என ஒரே இடத்தையோ ஒரே பொருளையோ இரு விதத்தில் காட்டலாம். நாடகத்தில் சேய்மைக் காட்சியாகத்தான் காட்டலாம். அணிமைக் காட்சியாகக் காட்டல் இயலாது. கவிதையில் இத்திரைப்பட நுணுக்கத்தைக் கையாள வசதியிருக்கிறது. அது கருத்துக் காட்சிதானே !

"வளைந்த கொம்புகளையுடைய எருமைகளின் இள நடையையுடைய கன்றுகளைத் தூண்தொறும் கட்டியிருக்கும்" காட்சி அணிமைக்காட்சி. அவ்வீடு விவசாயியின் வீடு என்பதைக் காட்ட, இக்காட்சி இன்றியமையாததென உணர்ந்த கவிஞர் நம் கண் முன் தூண்தோறும் வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் எருமைக் கன்றுகளை முதலில் காட்டுகிருர். பிறகு அவர் 'காணத் தகுந்த நல்ல இல்லம்' என்று முடிக்கும்போது, அந்த இல்லத்தின் முழு உருவத்தையும் சேய்மைக் காட்சியிலே காட்டுகிருர். புகைபடிந்த கண்களுடன் பிறை நெற்றியிலே பொறித்த சிறிய வியர்வைத் துளிகளை அவள் முன் தானையால் துடைத்துக்கொள்ளும் காட்சி அணிமைக்காட்சி. இப்போது அவளை நம் அருகிலே பார்க்கிருேம் அல்லவா ? 'அவள் சமையற் கட்டிலே இருக்கின்ருள் !' என்று முடிக்கும்போது, கவிஞர் அவளை நம் கண்களுக்குத் தூரத்திலே கொண்டு

சென்று 'அட்டிலில்' நிறுத்துகிருர். வாழையின் ஈரத்தண்டுகளை அவள் கறிக்கு ஏற்ப வகிரும்போது அவளுடைய முழு உருவத்தையும் பார்க்கிருேம். அதற்கு முன் சிறிய மோதிரம் அணிந்த மெல்லிய விரல் சிவக்கும் காட்சியைக் கவிஞர் நம்கண்ணருகே காட்டிவிடுவதால், அவளது முயற்சியின் அருமையைச் சேய்மைக் காட்சியிலும் நாம் மறவாதிருக்கிருேம். திரைப்படத்தில் ஓர் உருவத்தை அணிமையிலும் சேய்மையிலுமாக, நேரத்திற்கும், இடத்திற்கும், கருத்திற்கும் பொருந்த மக்கள் மனத்திற் பதியுமாறு மாறி மாறிக் காட்டுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். புகைப்பட நிபுணரின் கலையாற்றலைப் படம் பார்ப்பவர் அளவிட்டறிந்து கூறக் காண்கின்ருேம். இப்பாடலில் பழங்கவிஞரின் படக்கலை நுணுக்கத்தை - கருத்தளவில் நாம் கண்டு களிக்கிருேம். புகைப்படக் கலைமட்டுமன்று, கலை அமைப்பும் இப் பாடலில் நன்ருக உள்ளது. உழவரின் வீடு என்பதை உணர்த்துவதற்காக எருமைக் கன்றுகளையும், சினம் மிகுந்தாலும் குடும்பக் கடமை மறவாத மாட்சிமையுடைய மனைவி என்பதை உணர்த்துவதற்காக வியர்க்க வேலை பார்த்து நெற்றியை முன்தானையால் துடைக்கும் காட்சியையும் கவிஞர் படைத்துள்ளார். எனவே இக் கவிஞரைப் படக்கலை இயக்குநர் (Director) என்றும் கூறலாம் அல்லவா?

இப்பாவில் காதலியுடன் மனவேறுபாடு தணிந்து கூடிக்களிக்கும் நிலையைக் காதலன் எதிர் பார்த்து இயம்பும் கருத்து இருக்கின்ற காரணத்தால் இது உவகைச் சுவையாயிற்று. (க)

# நிழற் காட்சி

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம! நாணுதும் நும்மொடு நகையே!!
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடுநீழல் பிறவுமார் உளவே. 1

அவள் நெய்தல் நிலத்தில்-கடற்கரை ஊர் ஒன்றில் பிறந்து வளர்ந்தவள். அவளும் அவள் காதலனும் ஒருநாள் கடற்கரைச் சோலையில் புன்னைமர நிழலில் சந்தித்தனர். வெட்கத்திஞல் சிவந்துவிட்ட முகத்துடன், விழிகள் மருள, அவள் சுற்றுமுற்றும் பார்த்தபடி இருந்தாள். "ஏன் இவ்வளவு வெட்கம், நாமிருவரும்தானே இருக்கிறோம்?" என்று அவளுடைய மலர் முகத்தைத் தன் பக்கம் திருப்பினன். அவளோ புன்னைமரத்தைச் சுட்டிக்காட்டித்

---

1 ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை-நற்றிணை-கஎஉ

ஆயம்-தோழியர். காழ்-விதை. முளைஅகைய-முளைவிட்டுத் தளிர்க்க. நுவ்வை-நும் தங்கை. விருந்தின் பாணர்-புதியபாணர். விளரிசை-மெல்லிய இசை. கடுப்ப-போல. கோடு-சங்கு. நரலும்-ஒலிக்கும். கொண்க-தலைவ.

தலை குனிந்தாள். அவன் வியப்பால் கண்களை அகல விரித்தான். அவள் சிரித்துவிட்டுச் சொல்கிறாள் :

“நான் சிறுபெண்ணாக இருக்கும்போது விளையாடவரும் என் தோழியருடன், இங்கே வருவதுண்டு ; ‘கிச்சுக்கிச்சுத் தாம்பழம்’’ விளையாடுவதுண்டு. கடற்கரையின் வெண்மணலைக் குவித்துப் புன்னை விதைகளை வைத்து நான் மூடுவதும், என் தோழிமார் கைவைத்துக் கண்டு பிடிப்பதும் உண்டு. அவ் விளையாட்டில் நாங்கள் மணலில் அழுத்தி மறந்துவிட்டுப்போன புன்னை விதையொன்று சில நாட்களில் முளை விட்டுத் தளிர்த்து வளரத் தொடங்கியது. அச் செடியின் மீது எனக்கு ஒரு தனிப் பிரியம். எனக்குத் தாய்தரும் தேனெய் கலந்த இனிய பசுவின் பாலை, நான் சிறிது குடித்துவிட்டு மீதத்தை இச்செடிக்குப் பசிக்குமே என்று ஊற்றிவிடுவேன். இவ்வாறு நான் வளர்த்த இச்செடியின் மீது எனக்குத் தனியன்பு இருப்பது கண்ட என் தாய், நான் சுட்டித்தனம் செய்யும்போதெல்லாம், ‘உன்னைவிட உன் தங்கை நல்லவளாயிற்றே, ஓர் அடமும் செய்யாது, எவ்வளவு அமைதியாக நிற்கிறாள் பார்’ என்று என்னிடம் இப் புன்னையைக் காட்டிக் கூறுவதுண்டு. அவ்வாறு புன்னையின் சிறப்பைக் கூறி என்னைத் தாய் திருத்தியன எல்லாம் இப்போது என் நினைவிற்கு வருகின்றன. இப்போதோ என் புன்னைத் தங்கை மரமாக வளர்ந்து பெரியவளாக நிற்கின்றாள். இவ்விடத்தில் உம்மோடு நகையாடி இன்பம் நுகர, என்னை வெட்கம் தடுக்கிறது ! புதிய பாணர்கள் மெல்லிய இசையிற் பாடுவதுபோல வலம்புரிச்

சங்குகள் ஒலிக்கும் கடற்கரைத் தலைவனே! நீ விரும்பி அருளினல், நிறைந்த நிழல் தரும் மரங்கள் பிறபல உள. ஆங்கு வந்தருள்க!"

✵

நாணம் பெண்களுக்கு ஒப்பற்ற அணிகலன். அழகுக்கு அழகுதருவதும் உவகைச் சுவையை மிகுதிப் படுத்துவதும் நாணமேயாகும். பெண்களின் கண்களிலும், முகத்திலும், நடையுடை பாவனையிலும் ஆயிரமாயிரம் சாயல் அழகுகளை நொடிக்கு நொடி பரிமாறும் நாணத்தைப் பெண்களின் இயற்கை அணிகலன் எனத் திருக்குறள் சிறப்பிக்கும். நாணந்தரும் செயல்களையும் முறைகளையும் ஒவ்வொன்ருக விடுத்து, பிறர்காண விளம்பரப்படுத்தும் வாணிகப் பொருள்களைப் போல, உறுப்பு நலனை யெல்லாம் வெளிக்காட்டிப் பகட்டித் தெருவிற்கு வந்துவிட்ட இக்கால நாகரிகத்தில், நாணம் தலைகாட்டுவது அருமையே!

தலைவனை அணுகும்போது, பிறர் இருப்பினும் பிற பொருள் காணினும் நாணந்தரும் தலைவிக்கு. இப்பாவில் ஓரறிவுயிராகிய மரமும் நாணத்தை மிகுவிப்பதன் காரணம், காதலியின் மென்மைப் பண்பாகும். நாணமற்ற பெண்மையின் கூட்டத்தில் உணர்வின்பம் இராது; உடலின்பமும் இராது; உடற் பயிற்சி வேண்டுமானல் இருக்கலாம்!

கடற் கரையில் சங்கொலிக்கும் காட்சியைக் காட்டுவது, திரைப்படத்தில் காட்டினைக் காட்டும் போது சிள்வண்டு ஒலியினையும் சேர்ப்பது போலாகும். அவ் வண்டொலி கேட்டதும் அடர்ந்த காடு என்ற எண்ணம் நம் மனத்தில் விரைந்து பதிந்து விடுவது போல, சங்குப் பூச்சிகளின் ஒலி கூறியதும்

கடற் காட்சி மனத்திற் பதிந்து விடுகிறது. பிற மர நிழலிலே வந்து சந்திக்குமாறு தலைவனை வேண்டுகிருள். காரணம் இவள் வளர்த்த புன்னை மரம் வீட்டருகே இருப்பதால், பெற்ருேர் எளிதில் இவர்கள் காதலை அறிந்து விடுவராதலின் அதைக் கூருமல், தன்பண்பு விளங்குமாறு குறிப்பாகக் கூறுகின்ருள்.

இப்பாவில் தலைவன் தலைவியர் கடற்கரையில் புன்னைமர நிழலில் பேசிக்கொண்டிருப்பதைக் குறிப்பால் அறிகிருேம். பேசும் இடப்பின்னணி (Settings) பேசும் உறுப்பினர்கள் (figure) வெளிப்படையாக இப்பாவில் இல்லை. தலைவியை ஓரிரு சொல்லாற் கூடஒப்பனை செய்து காட்டவில்லை கவிஞர். அவள் பேச்சின் மூலமே இதனை நிழல் காட்சி (Shadow play) யாகக் காட்டுகிருர்.

தலைவனுடன் தலைவி மகிழ்ந்துரையாடுதலும், வேறிடத்து வந்து சந்திக்குமாறு கூறுதலுமாகிய கருத்து இப்பாவில் அமைந்திருப்பதால் இது உவகைச் சுவையாயிற்று. (உ)

# நினைவுக் காட்சி!

மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல், அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுநர் ஆக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே! *

தலைவன் தலைவியைப் பிரிந்து வெளிநாடு சென்று பொருளீட்டி வரும் இயல்புடையவன். பலமுறை அவன் தலைவியைப் பிரிந்து சென்று திரும்பியிருக்கிறான். இன்றும் தன் வினைமுற்றி அவன் திரும்பிக் கொண்டிருக்கிறான். பாகன், அவனுடைய ஆர்வத்தை அறிவானாதலின் தேரை விரைந்து செலுத்திக் கொண்டிருக்கிறான். கார் காலத்தில்

---

* கீரத்தனார் — நற்றிணை — சஉ

பழமழை - பருவமழை. அவல - பள்ளங்களில் உள்ள நாநவில் பல்கிளை-கத்துகின்ற தவளைகள். கறங்க-ஒலிக்க. இளையர்-வேலையாட்கள். வல்லே-விரைந்து. மண்ணா-நீராடாத. குரல்-கூந்தல். கவைஇய-தழுவிய.

திரும்புவேன் என்று உறுதி கூறிச்சென்ற தலைவன், தான் வந்து கொண்டிருக்கும் போதே மழை பொழிந்துவிட்ட காட்சியைக்கண்டு துடியாய்த் துடிக்கிறான். பாகனை விரைந்து செலுத்துமாறு தூண்டுகிறான். முன்பு ஒரு முறை தான் திரும்பி வீடுசென்ற போது தலைவி மகிழ்ச்சிபொங்க ஓடிவந்து தன்னைக் கட்டிக்கொண்ட காட்சியை அவன் சொல்லுகிறான்.

"பாக! நாம் சென்றமுறை வீட்டிற்குத் திரும்பிச் சென்றோமே, அப்போது நடந்த காட்சி இன்னும் என் கண்களைவிட்டு அகலவில்லை. அது மறத்தற்கரிய காட்சியாகும்.

அன்று, மழையின்றிப் பல நாட்களாக வறட்சியுற்ற உலகம் மீண்டும் தொழிற்படுமாறு, பருவ மழை பெய்தது. புது வெள்ளம் பள்ளந்தோறும் நிறைந்தது. தவளைகள் கூட்டமாகக் கத்தின. நாம் சென்ற தேரின் மணியொலியைத் தலைவி முன் கூட்டிக்கேட்க முடியாது என்று, வேலையாட்களை அனுப்பினேன். அவர்கள் வீட்டிற்குச் சென்று செய்தி கூறிய அளவில், தனது ஒப்பனை செய்யாதிருந்த கூந்தலின் மாசு போக நீராடி, சில பூக்களை நிறைந்த கூந்தலிலே அவள் முடித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் நான் வீட்டிற்குள் புகுந்தேன். அவ்வளவில், அவள் உடல் துவள ஓடிவந்து பூவோடு கூந்தலும் அவிழ்ந்துவிழும் முடியினளாய் என்னைத் தழுவிக்கொண்ட இன்பக் காட்சியை எங்ஙனம் மறத்தற் கியலும்!"

*

தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில் அவள் தன்னை அழகுபடுத்திக் கொள்ளாது இருந்திருக்

கிருள். அவன் வரும் செய்தி கேட்டதும் நீராடி ஒப்பனை செய்துகொள்ளத் தொடங்கியிருக்கிருள். அவள் ஓடிவந்து தழுவிக்கொண்ட நிலையைத் தலைவன் கூறி, இப்போதும் தன்னை எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள் என்பதைப் பாகனுக்குக் குறிப்பால் உணர்த்துகின்ருன். இக்காலத்துத் தலைவன் வரும் ஒலியை—அது காராயின் 'ஆரன்' ஒலியாலும், சைக்கிளாயின் மணியொலியாலும், நடந்துவரின் 'அரவத்' தாலும் அறிந்து கதவு திறந்து காட்சியளிக்கும் மங்கையர் போல, தலைவன் வருவதைத் தேரிலே கட்டிய மணியொலியால் அக்கால மங்கையர் அறிந்துகொள்வர் எனத் தெரிகிறது. தான் வருவதைத் தலைவி முன் கூட்டி அறிய முடியாவண்ணம் தவளைகள் கத்துகின்றனவே என்று, வேலையாட்களை அனுப்பி அறிவித்து, அவள் தூநீராடி அழகுபடுத்திக் கொண்டு மலர்முகத்தோடு வரவேற்கத் தான் இல்லம் புகவேண்டுமெனத் தலைவன் விரும்பியமையை ஆராயுந்தோறும் இல்வாழ்க்கையின் இணையற்ற இன்பமே புலனுகிறது.

திரைப்படங்களில் வரும் நினைவுக்காட்சியை நீங்கள் அறிந்திருக்கலாம். ஒருவன் தனது முன் கதையைக் கூற வருவதாக, முதலில் அவனை அணிமையில் காட்டி, பிறகு கதை நிகழ்ச்சியைக் காட்டுவார்கள். இங்கே "மறத்தற் கரிதால் பாக!" என்னும்போது, தலைவனையே காண்கிருேம். பிறகு அவன் கூறும் கதையைக் கேட்கிருேம். எனவே இதுவும் ஒரு நினைவுக் காட்சியாகும்.

முதலில் செய்தியறிந்த தலைவி நீராடிப் பூ முடித்தலை அணிமைக் காட்சியிலே கண்டோம்.

தலைவன் வீட்டில் புகுந்தறுவாயில் அப்பூ அவிழ்ந்து விழ, முடி குலைய, உடல் குழைய அவள் ஓடிவரும் காட்சியைக் காண்கிறோம். அவள் ஓடிவரும் வேகத்தையும் அவள் ஆர்வத்தையும் இவ்வரிகளில் காண்கிறோம். பின்னர்க் கூந்தல் அவிழ அவள் ஓடிவருவதைக் காட்டுவதற்கே, முன்பு அவள் பூ முடித்த காட்சியைக் கூறினர்—பிற ஆடை அணி தல் முதலியவற்றைக் கூருது விடுத்தார் என அறி கிறோம். இதுவே திறமையான படக்கலை வன்மை (Direction) ஆகும். இப்பாடலில் முன்பின் நிகழ்ச்சி களின் இணைப்பும் (Editing) அறிந்து இன்புறற் பாலது.

"சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய'' காட்சியும், 'மெய்வருத் துருஅ அவிழ்பூ முடியி னள் கவைஇய'' காட்சியும் மறக்க முடியாத அணி மைக் காட்சிகள் (Close-up Shots). திரைப்படத் தில் இயக்குநர், ஓவியர், அமைப்பாளர், ஒளி, ஒலிப் பதிவாளர், புகைப்படம் எடுப்பவர் ஆகியோர் வேறு வேறு துறையினர் ஆவர். கவிஞரிடமோ ஒருவரே பல கலையிலும் வல்லவராக விளங்கும் அருமையைக் காண்கிறோம். இன்னும் அக்கவிஞரே நடிகருமாகி விடுகிருர் அன்றே! இதனுற்றுன் கவிஞர் இத் துறைகளனைத்திலும் பொது அறிவுபெற வேண்டிய திருக்கிறது.

இப்பாவில் தலைவன் தன்னை எதிர் நோக்கும் தலைவியை நினைத்து, மகிழ்ந்து செல்கின்ருனுகை யால், இது உவகையாயிற்று. (ரு)

# கலை நுணுக்கம்

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே ! *

அவன் எங்கோ பிறந்து வளர்ந்தவன் ; அவளும் அவனை முன்னறியாதவள். தற்செயலாக ஒருவரை ஒருவர் கண்டார்கள் ; பருவம், அறிவு, தகுதி, உணர்வு அனையன ஒன்றியதால் நெஞ்சம் ஒன்றினர்கள். காதல் பிறந்தது. இரண்டு நெஞ்சங் களும் ஓருருவாயின. 'இருதலைப் புள்ளின் ஓருயி ராக' அவர்கள் மாறினர்கள். முன்னறியாப் புதிய இன்பத்திலே மூழ்கித் திளைத்த அவ் இளைஞன், தன்னை மறந்து அவளிடம் பேசுகிருன் :

" அன்பே ! என் தாய் யார் ? உன் தாய் யார் ? என் தந்தையும் உன் தந்தையும் எவ்வித உற வினர் ? எனக்கும் உனக்கும்தான் எவ்வித அறிமுகம் உண்டு ? ஒன்றுமில்லை. எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த நாமிருவரும் நேற்றுவரை ஒருவரை ஒருவர் அறியாமலிருந்தோம். நான் வானத்து மழையானேன் ; நீ மண்ணகமாய்த்

---

* 'செம்புலப் பெயனீரார்'-குறுந்தொகை - ௪௦

யாய்-என் தாய். ஞாய்-உன் தாய், நுந்தை-உன்தந்தை. கேளிர்-உறவினர். செம்புலம்-செம்மண் தரை. பெயல்நீர்-மழைநீர்.

திகழ்ந்தாய்! இன்றோ, வானத்து மழைநீர் வையத்தில் பொழிய, செம்மண்தரையின் நிறத்தோடும் சுவையோடும் அந்நீர் கலந்துவிட்டாற்போல, நமது அன்புள்ள நெஞ்சங்கள் கலந்துவிட்டன!"

*

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு காதலனும், தன் காதலியிடம் இவ்விதம் சொல்லக்கூடும்; சொல்ல நினைக்கக் கூடும்; அல்லது இந்நினைப்பினைச் சார்ந்த உணர்வேனும் எழக்கூடும். அழியாத காதலுணர்வைக் கூறும் இப்பாடலிலே, புற உலகின் ஓவியத்தையோ, இயற்கை எழிலின் படப்பிடிப்பையோ காட்டவில்லை கவிஞர். அக வுணர்வையும் அழியாத ஓவியமாக்கலாம் என்பதற்கு இப்பா சான்றாகத் திகழ்கின்றது. எவ்வளவோ காலம் அறியா நிலையில் வளர்ந்தவர்கள், சில நாட்களில் ஒன்றுபட்ட விந்தையைப் பாடல் புலனாக்குகிறது.

'செம்புலப் பெயல்நீர் போல' என்ற உவமை மிக நயமானது; பாடலுக்கே உயிர் போன்றது. 'நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும்' என்பது திருக்குறள் (452). தான் சேர்ந்த நிலத்தின் இயல்பாக நீர் திரியும். 'விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந்தாற் போல' என்பது பரிமேலழகர் உரை. இதே உவமையைத் திருவள்ளுவர் காமத்துப்பாலிலும் எடுத்தாள்கிறார். 'நிலத்தொடு நீரியைந்தன்னார்' என்பது குறள் (1323). நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர் என்பது இதன் பொருள். 'நீர் தான் நின்ற நிலத்தியல்பிற்று ஆமாறுபோலக் காதலரும் தாம்

கூடிய மகளிர் இயல்பினர் ஆவர்' என்று பரிமேலழகள் உரைகாண்கிறார். இதிலிருந்து நாம் ஓர் உண்மையைத் தெளிவாக அறிகிறோம். இல்வாழ்க்கைக்கு வானத்துநீர் போல அவன் உதவக்கூடும்; ஆயினும் அவளே இல்லத்தின் அரசியாவாள். அவள் இயல்புக்கு ஏற்பவே இல்வாழ்க்கைப் பண்பும் அறமும் அமையும். மனைவி மாறுபட்டவளானால், இல்வாழ்வும் மாறிப்போய்விடும். இவ்வாறு இல்வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தையே கொண்டு விளங்குகிறது இவ்வுவமை.

இப் பாடலாசிரியர் பெயரை நாம் இழந்துவிட்டோம். இவ்வாறு சங்க இலக்கியத்தில் எத்தனையோ பாடலாசிரியரின் பெயர் காணப்பெறவில்லை. பிற்காலத்தில் இப்பாடல்களைத் தொகுத்தவர்கள் பெயர் குறியாமல் பாடல்களை வெளியிட விரும்பவில்லை. அதற்கு அவர்கள் ஒருமுறையை வகுத்துக் கொண்டார்கள். ஒரு பாடலில் வரும் சிறந்த சொல், சொற்றொடர், உவமை இவற்றையே அப் பாடலாசிரியர் பெயராக்கிவிடுவர். ஊட்டியார், கள்ளில் யாத்திரையன், கல்பொரு சிறுநுரையார் என்பன இத்தகைய பெயர்களாம். செம்புலப் பெயல்நீர் உவமை இப்பாடலிற் சிறப்புடைய பகுதியாதலினால், இப்பாடலாசிரியரைச் 'செம்புலப் பெயல்நீரார்' என அழைத்தனர், நம் முன்னோர்!

சமயம் பார்த்துச் சாதி பார்த்து, குலம்பார்த்துக் கோத்திரம் பார்த்துத் திருமணம் செய்யும் இக்காலத்தில், 'யாயும் ஞாயும் யாராகியரோ..' என்றெல்லாம் கூறும்படியான காதல் அமையாது. ஒரே சாதியில், அதிலும் ஒரே கோத்திரத்தில் திரும்பத் திரும்பப் பழகியவர்கட்குள்ளேயும் நெருங்கிய உற

வினர்கட்குள்ளேயும்தான் திருமணம் நடைபெற முடியும். பிறவகைக் காதல்கள் சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளப்படாமையால் அவை இரண்டு விதமாக முடிவடைகின்றன. ஒன்று காதல் முறிந்து அவலச் சுவையில் முடிவடைகிறது; அல்லது காதல் சிதைந்து 'பரத்தைமை' வாழ்வில் முடிகிறது! இந்நிலையில் இக்காலக் காதலன், "யாயும் ஞாயும் உறவாகியரே, எந்தையும் நுந்தையும் பன்முறைக் கேளிர், யானும் நீயும் பலவழி அறிதும், செம்புலப் பெயல்நீர் போல, அன்புடை நெஞ்சால் நாம் கலந் திலமே" என்று பாடி வருந்துவதைத் தவிர இன்பச் சுவை என்பது எள்ளளவும் இல்லை.

ஆணும் பெண்ணும் கூடிக் குலவிக் கொஞ்சி மகிழ்வதைக் காட்டும் படக்கலை இயக்குநர் யாது செய்கின்றார்? முதலில் காதலர் இருவரும் கலந்து மகிழ அணையும் காட்சியைக்காட்டி அதற்கடுத்துச் சோடிப் புருக்கள் ஒருகிளையில் அமர்ந்து கொஞ்சும் காட்சியையோ, மரம் ஒன்றில் பூங்கொடி ஒன்று பின்னிப்படரும் காட்சியையோ இணைத்துக் காட்டுகிறார். இப் பாடலில் நிழற்காட்சி போல தலைவன் தலைவியரைப் பார்க்கிறோம். அவர்கள் உள்ளப் பிணைப்பை அவன் பேச்சு வெளிப்படுத்துகிறது. இதனை "வானத்து மழைநீர் செம்மண் தரையுடன் கலந்து ஓடுகின்ற" அணிமைக் காட்சியுடன் இணைத்துவிட்டதால், அன்பு நெஞ்சங்களின் கூட்டுறவு நம் உள்ளத்தில் அழியாத விதத்தில் பதிந்து விடுகிறது. இதுவே கலை நுணுக்கம் (Technique) என்பதாகும்.

இப்பா, தலைவனின் மகிழ்ச்சிப் பெருக்கை உணர்த்துவதால், உவகையாயிற்று. (சு)

# குடும்பக் காட்சி

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே! *

செவிலித்தாய் புதிதாக மணமான மகள் வீட்டுக்குச் சென்று அங்கே, இன்பத்தோடு அவள் நடாத்தும் இல்லறத்தைக் கண்டு வீடு திரும்பினுள். பெற்ற தாயிடம், மகளின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வினை எடுத்துக் கூறுகிருள் செவிலித்தாய் :

"நம் வீட்டில் செல்லமாகத் திரிந்த மகள், தன் வீட்டில் எவ்வளவு கடினப் பட்டுச் சமையல் செய்கிருள் தெரியுமா? நன்ருக முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போலும் மெல்லிய விரல்களைப் பட்டாடை என்றும் பாராமல் துடைத்துக் கொண்டாள். நம் வீட்டில் சிறு அழுக்குப் பட்டாலும் உடனே உடை மாற்றும் இயல்புடைய அவள், அவ்வாறு துடைத்ததால்அழுக்குப்பட்டஉடையைக் களையாமல் உடுத்தியபடி வேலை பார்த்தாள். குவளை

* கூடலூர் கிழார்-குறுந்தொகை-கசுஎ
முளிதயிர்-கட்டித்தயிர், கலிங்கம்-பட்டாடை

மலர்போலும் மைதீட்டிய கண்களில் தாளிதப் புகை யானது படியுமாறு அவள் இனிய புளிப் பச்சடியைத் தானே துழாவிச் சமைத்தாள். அதனைச் சாப்பிடுங் கால், 'அவரும்' 'எவ்வளவு இனிமையாயிருக் கிறது?' என்று சொல்லி உண்டார். அதைக் கேட்டு ஒளி பொருந்திய நெற்றியையுடைய இவள் முகம், மிக நுண்மையாக மகிழ்ச்சியைப் புலப்படுத்தி மலர்ந்தது! இத்தகைய இன்பத்துடன் அவர்கள் வாழ்கின்றனர்."

*

இனிய குடும்பக் காட்சியே இப்பாடலில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இருவரும் சோலை யில் ஓடிப்பிடித்து விளையாடுவதையும், கட்டித்தழுவி மகிழ்வதையும் படமாக்கிக் காட்டினுற்ருன், இனிய குடும்பத்தை எடுத்துக் காட்டலாம் எனக் கருதும் எழுத்தாளர்களும், படக்கலை இயக்குநரும் இப் பாடற் கருத்தை உணர வேண்டும். முளிதயிரைக் காந்தள் மெல்விரலால் அவள் பிசையும்போது 'மென்மை' புலனுகிறது. குவளை உண்கண் ணில் குய்ப்புகை படியுமாறு சமைத்தலைக் காணும் போது அவளது கடமையுணர்வு புலனுகிறது. அவன் இனிதென உண்ணும்போது, அவள் முகம் நுண்ணிதின் மகிழ்வதை அணிமைக் காட்சியில் கவிஞர் காட்டுவதால் உவகைச்சுவை, நமக்குப் புலனுகிறது.

இல்லற இன்பத்தை உணர்த்துவதால் இப்பாடல் உவகையாயிற்று. (ரு)

# மழைக்காட்சி

தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை இனிய சிதறி, ஊழின்
கடிப்பிகு முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான்! யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவினம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் நல்லணை யேமே! *

பொருள் தேடச்சென்ற தலைமகன் வீட்டிற்குத் திரும்பிவிட்டான். அறவழியில் பொருளீட்டித் திரும்பிய அவன் இன்பம் நுகர்தற்கு ஏதுவாக மழை பொழியத் தொடங்கிற்று. அவள் இப்போது அவனருகே இருக்கின்றாளாதலால், 'மழையே நன்கு பெய்க!' என அவன் வாழ்த்துகிறான்.

"யாம் தொடங்கிய செயலை முடித்துவிட்ட நிறைவுடைய உள்ளத்துடன் இவளை அடைந்து, குவளையென்னும் சிறிய காம்பையுடைய புதிய மலரின் மணம் வீசுகின்ற இவளது மெல்லிய கூந்தலாகிய படுக்கையில் இருக்கின்றேம். எனவே,

---

* பாண்டியன் பன்னாடு தந்தான் — குறுந்தொகை-உ௭௦

தாழ்-தங்கிய. துமிய-கெட, உறை-துளி. ஊழின்-முறையாக. கடிப்பு - குறுந்தடி. செம்மல் - நிறைவு. அணை-படுக்கை.

பெரிய வானமே! தங்கிய இருள் கெடுமாறு மின்னி, குளிர்ச்சி உண்டாகுமாறு விழும் துளிகளை இனிமை யுடன் சிதறி, முறையாகக் குறுந்தடியால் அடிக்கப் படும் முரசுபோல் முழங்கி இடிஇடித்துப் பெருமழை பொழிவாயாக!"

*

யான் அவளுடன் உள்ளேன் எனப் பொது வாகக் கூறுமல் 'கூந்தல் மெல்லணையேன்' எனத் தலைவன் கூறுவது, மழையின் பயனைக் குறிப்பால் கூறுவதாகும். இக்காட்சியில் கூந்தலின் சிறப்பு நோக்கி, அதனை அணிமையில் காட்டுகிறுர் கவிஞர். அதன் மணமும் சிறப்பிக்கப்படுகிறது. இப்போது விஞ்ஞானக் கலை முன்னேற்றத்தால் படம் பார்க்கும் போது அந்தந்தக் காட்சிக்கேற்ற நிறம் மட்டுமன்றி மணமும் பரவச்செய்யக் கண்டுபிடித்துள்ளார்கள். கவிதை, மனத்தொடர்பால் அனுபவிப்பதாகலின் ஐம்புல உணர்வுக்கும் அது வழிவகுப்பதாகிறது. முன் நான்கு வரிகளில் மழை பெய்வதைக் காண் கிறேம். மின்னல், துளி, இடி இவை தோன்றும் காட்சியும் "பெய்தினி வாழியோ பெருவான்" என வேண்டும் காட்சியும் அருமையுடையன.

தலைவனின் மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டும் இப்பாடல் உவகைச் சுவையாகும் (சு)

# உவமை ஓவியம்

எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன் ; தோழி !
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே !!

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி, அதற்காகப் பொருள் சேர்த்துவர வெளியூருக்குப் புறப்பட்டான். இதுகாறும் காதல் ஒழுக்கத்திலே ஈடுபட்டிருந்த தலைவியைப்பார்த்துத் தோழி, "உன் தலைவன் திரும்பிவரும் வரை உன்னால் பொறுத்திருக்க முடியுமா ?" என்று கேட்கிறாள். அதற்குத் தலைவி,

"தோன்றி எழும் முழுமதியம் கடலிலே பிரதிபலிப்பதுபோல ஒழுகும் வெள்ளருவியினையுடைய உயர்ந்த மலைகளைக் கொண்ட நாட்டினனாகிய தலைவன் ஞாயிற்றைப் போன்றவன் ; தோழி ! என்னுடைய பெரிய மூங்கிலனைய தோள்கள் நெருஞ்சிப் பூவைப் போன்றவை"

*

நெருஞ்சிப்பூ ஞாயிற்றையே நோக்கிநிற்கும் இயல்புடையது. ஞாயிறு கீழ்த்திசைத் தோன்றும் போது நெருஞ்சிப்பூ கீழ்த்திசை நோக்கும்; ஞாயிறு

---

* மதுரை வேளாதத்தன் - குறுந்தொகை — கூகரு மதியம்-சந்திரன். பணைத்தோள்-மூங்கில்போன்ற தோள்

உச்சிக்கு வரும்போது நெருஞ்சிப்பூ உச்சியை நோக்கிநிற்கும்; மேற்றிசையில் ஞாயிறு சாய்ந்த போது நெருஞ்சிப்பூவும் மேற்றிசையை நோக்கிநிற்கும். இவ்வாறு ஞாயிற்றையே எதிர்நோக்கி நிற்கும் இயல்புடைய நெருஞ்சிப்பூவை, ஞாயிற்றின் காதலி என்பர். இங்கே தலைவி, தலைவன் திருமணம் செய்து கொள்வதற்காகவே பொருளீட்டிவரச் செல்லுவதால், அவனது எண்ணமே என் எண்ணமாக, அவன் சென்ற திசையையே நோக்கி, அவன் திரும்பும் வழியை எதிர்பார்த்து ஆற்றியிருப்பேன் என்று கூறுகின்ருள். முழுமதி கீழ் வானில் தோன்றுகையில், அதன் பிரதிபலிப்பைக் கடலிலே கண்டால் அஃதோர் நீண்ட ஒளிப்பிழம்பு உருகி அலைஅலையாய் ஓடுவதுபோல இருக்கும். சிறிய விளக்கின் ஒளிகூட, நீரில் நீண்ட ஒளியாகப் பிரதிபலிக்கும். மலையில் தோன்றும் வெள்ளருவிக்குக் கருநிறக் கடல்நீரில், இரவில் தோன்றும் வெண்மதியின் பிரதிபலிப்பை உவமை கூறியிருக்கும் காட்சியைக் கண்டு களிக்கவேண்டும். தலைவன் மனம்போல யான் நடப்பேன் என்று கூருமல், ஞாயிறும் நெருஞ்சியும்போல அவனையே என் தோள் நாடுமெனக் கூறும்முறை சிறப்புடையதாகும்.

உள்ளப் பிணைப்பை எடுத்துக் கூறுவதால் இது உவகைச் சுவையில் அடங்கும். (எ)

# நடை அழகு

நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென் ;
நன்னுதல் அரிவை ! காரினும் விரைந்தே !! *

பிரிந்துசென்ற தலைவன் திரும்பி வந்துவிட்டான். அவளோ இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்து வந்துள்ளாரே என்ற கருத்தில், ஊடற் குறிப்புடன் ஒதுங்கி நிற்கின்ருள். அவளது ஊடலைத் தவிர்ப்பதற்காக, எவ்வளவு விரைவாக ஆவலுடன் வந்தான் என்பதை அவன் அழகுபடக் கூறுகின்ருன்.

“நான் வந்த வழியில் பார்த்த பொருள்களெல்லாம் உன்னையே நினைப்பூட்டின. நல்ல நெற்றியை உடையவளே ! உன்னைப் போலவே சாயல் அழகு காட்டி மயில்கள் ஆடின. உன் நல்லநெற்றியின் நறுமணத்தைப் போலவே, முல்லையும் மலர்ந்து மணம் பரப்பிற்று ; உன் பார்வையைப் போலவே மருண்டு மருண்டு மான்கள் நோக்கின. இவ்வாறு மயிலும் முல்லையும் மானும் முறையே உனது சாயலையும் மணத்தையும் நோக்கையும் நினைவூட்ட, உன்னையே

---

* பேயனர்-ஐங்குறுநூறு சகஉ.
மஞ்ஞை மயில். ஆல-ஆட. உள்ளி-நினைத்து. கார்-மேகம்.

நினைத்துக்கொண்டு மேகத்தினும் விரைவாக நான் வந்தேன் !"

*

இக்காட்சியில் பாவின் நடையும் கருத்தும் நம்மைக் கவர்ந்து விடுகின்றன. நாமும் தலைவனுடன் விரைந்து செல்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது. 'எம் மெய்யாயினும் ஒப்புமை கோடல்" (தொல்-மெய்ப்பாட்டியல்-உஉ) என்பது ஒரு மெய்ப்பாடு. எந்த உருவை அல்லது பொருளைக் கண்டாலும் அதனைத் தலைவனுடன் ஒப்பிட்டுக் காண்பது தலைவியின் இயல்பென்பது இதன் கருத்து. இங்கு, தலைவனிடம் இம் மெய்ப்பாடு தோன்றுகிறது. வழியில் கண்ட பொருள்களெல்லாம் அவனை நினைவூட்டி, அவனது வேகத்தை மேலும் மேலும் மிகுதிப் படுத்தினவாம்.

பாவின் நடை மிக அழகியது. "உன்னையே உன்னையே" எனப் பலமுறை கூறி, 'விரைந்து வந்தேன்' என முடிப்பதால் நடை சிறப்புடையதாகிறது. கருத்தும் அமைப்பும் மட்டும் அல்ல, நடையும் சுவைதரும். இன்னும் சில பாடல்கள் சொல்லால் சுவைதரும். அவ்வப் பாடலின் சுவையூற்றைத் திறனாய்ந்து கற்பதே இலக்கியப் பயிற்சியாகும்.

பிரிந்த தலைவன் மீண்டும் தலைவியை அடைந்து, இங்ஙனம் கூறுகின்றானாதலின் இது உவகையாகும்.

# புகைப்படம்

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிதிருந்தனனே நெடுந்தகை
துனிதீர்கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே!*

தன் மகள் நடத்தும் இல்லறம் எத்தகையது எனக் கண்டுவருமாறு, பெற்றதாய் செவிலித்தாயை அனுப்பிவைக்கிறாள். செவிலி தலைவி வீடு சென்று அவள் இன்பத்துடன் வாழ்வதை நேரில் கண்டு திரும்புகிறாள். பெற்ற தாயிடம் தான் கண்ட காட்சியை விவரித்துக் கூறுகிறாள்.

"அவர்கள் வீட்டு முற்றத்திலே பாணர்கள் முல்லைப்பண்ணை யாழிலே மீட்டிப் பாடிக்கொண்டிருந்தார்கள். சுடர் வீசும் அணிகலன்களை அணிந்த, ஒளி பொருந்திய நெற்றியையுடைய அவள், முல்லை மலர்களைத் தன் தலையிலே சூடிக் கொண்டு நின்றாள். அவன் துன்பம் துடைக்கும் மருந்தாகிய புதல்வனை மடியிலே அழகுற வைத்துக் கொண்டு இன்பத்துடன் இருந்தனன்".

*

இவ்வாறு கூறுவதன்மூலம் சிறு குறையும் இன்றி, மகள் வாழுகின்றமையைச் செவிலி

---

* பேயனார்-ஐங்குறுநூறு—௪௱௮.
வாள்நுதல்—ஒளிபொருந்திய நெற்றி. அரிவை—பெண். நெடுந்தகை—தலைவன். துனி—வருத்தம்.

விளக்குகிருள். அவள் அக் குடும்பக் காட்சியை ஒரு புகைப்படமாய் எடுத்துவந்து நற்ருயிடம் காட்டுவதுபோல இருக்கிறது, இப்பாடல். ஒரு பக்கம் பாணர் பாட, மறுபக்கத்தில் அவள் பூவைத் தலையில் சூடிக்கொள்ள, மகனை மடியிலே வைத்துக் கொண்டு தலைவன் இனிதிருக்கும் காட்சியடங்கிய இப்புகைப்படம் காலத்தால் அழியாததாகும். அவள் தலையிலே பூச்சூடிய நிலையில் படத்தில் விழுந்திருக் கிருள். அந்தப் பையன் தோற்றம் படத்தில் அழ காகப் பதிந்திருக்கிறது. துன்பத்தைத் தீர்க்கும் முகமுடையவனுக அவன் காணப்படுகிருன். பாணர் கள் பாடும் காட்சியால் அவர்கள் பரிசுபெற வந் துள்ளனர் என்பதும், அவன் அவர்களுக்குத் தந்து வாழும் தகுதியுடையவனுகத் திகழ்கின்ருன் என்ப தும் விளங்குகின்றன.

இனிதிருக்கும் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவதால் இஃது உவகைச் சுவையாகும். (கூ)

# மண மகிழ்ச்சி

## ( ஓரங்க நாடகம் )

காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோடு ஒழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந்து அருளினால்
பூணாகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே ;

அவனுந்தான்,
ஏனல் இதணத்து அகிற்புகை உண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறல்என ஏணி இழைத்திருக்கும்
கானகல் நாடன் மகன் ;

சிறுகுடி யீரே ! சிறுகுடி யீரே !
வள்ளிகீழ் வீழா, வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுகலான் ;
காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்மையரும்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல் :
எனவாங்கு,

---

காமர்–அழகிய. தயங்க–விளங்க. ஆகம்–மார்பு.
ஏனல்–தினைப்புனம். இதணம்–பரண். சிலம்பு–மலை.
உருத்து–கோபித்து. கேள்–கணவன்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க்கு உய்த்துரைத்தாள் யாய்;

அவரும்,
தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேர்ந்து
ஒருபகல் எல்லாம் உருத்தெழுந்து ஆறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை;
தெரியிழாய்! நீயும்நின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண்;

நல்லாய்,
நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தந்நாண்தாம் தாங்குவார் என்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுரைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ!
விண்தோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டறியாதீர்போல் படர்கிற்பீர் மற்கொலோ;
பண்டறியாதீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பென் மற்கொலோ!
மைதவழ் வெற்பன் மணவணி காணமல்
கையால் புதைபெறூஉம் கண்களும் கண்களோ!
என்னைமன், நின்கண்ணால் காண்பென்மன் யான்!
நெய்தல் இதழ் உண்கண், நின்கண்ணா கென்கண்மன!

எனவாங்கு,
நெறியறி செறிகுறி புரிதிரிபறியா அறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக
வேய்புரை மென்தோள் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடன்நீங்கச்

சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழில் உண்கணும் பொலிகமா இனியே![1]

## காட்சி—1

தலைவிக்கு மணம் பேசப் பலர்வந்து குழுமியுள் ளனர். தலைவியோ வேறு ஒருவனைக் காதலித்து அவனையே திருமணம் செய்துகொள்வதென்ற உறுதியுடன் இருக்கின்றாள். இது தோழிக்குத் தெரியும். எனவே இச்சமயத்தில் தலைவியின் காதலை வீட்டார்க்கு உணர்த்துவதைத் தவிர்த்து வேறு வழியில்லை என்பதைத் தோழி சிந்திக்கிறாள். உடனே செவிலித் தாயைத் தனியே தோட்டத்துப் பக்கம் அழைத்துச் சென்று அவளிடம் உண்மை யைக் கூறுகின்றாள்.[2]

தோழி: அம்மா, தலைவியின் திருமணம் பற்றி…

செவிலித்தாய்: அதுதான் பேசிக்கொண்டிருக்கி றோம்.

தோழி: இந்த மாப்பிள்ளை வீட்டாரை நம் தலை விக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

செவிலி: பிறகு…

---

1 கபிலர்–கலித்தொகை–குறிஞ்சிக்கலி–ரு
நாண்–வெட்கம். வதுவை, திருமணம். மை தவழ்–மேகம் தவழ்கின்ற. நெறியறி–நூல்நெறி அறியும். செறிகுறி–இருவரும் கூடுதற் கேதுவாகிய நாழிகை. வேய்புரை–மூங்கில் போன்ற.

2 இங்ஙனம் தலைவியோ, தோழியோ ஒரு சமயத்தில் உண்மையைக் கூறவேண்டிய கட்டம் வரும். இவ் வாறு காதல் பற்றிய உண்மையை வெளிப்படுத்த லுக்கு ‘அறத்தொடு நிற்றல்’ என்று பெயர்.

தோழி: அன்று வந்தாரே 'கானகல் நாடன் மகன்'...வீட்டார்...

செவிலி: அவர்களுக்குத் தர முடியாதென்று, தந்தை சொல்லிவிட்டார்...

தோழி: ஐயோ...!

செவிலி: என்னடி?

தோழி: அவரைத்தானம்மா நம் தலைவி காதலிக்கிருள்!

செவிலி: இஃது என்னடி புதுக்காதல். எங்கிருந்து வந்து குதித்தது?

தோழி: ஆமாம் அம்மா—ஒருநாள்...

செவிலி: என்ன நடந்தது?

தோழி: "அன்று விரும்பத் தகுந்த வேகம் மிகுந்த ஆற்று நீரில் எம்மோடு கூடி நீராடிக்கொண்டிருந்தவள் திடீரென்று சுழலில் அகப்பட்டுக் கொண்டாள். தாமரை மலர்போன்ற கண்களை மூடிக் கொண்டு, பயந்து, கைகள் தளர்ந்தவளாய் ஆற்று நீரோடு இழுத்துச் செல்லப்பட்டாள். (நாங்கள் செயலற்று ஒரு வழியும் தெரியாமல் நின்ருேம்) அப்போது மணம் பொருந்திய குளிர்ந்த சுரபுன்னை மலர்மாலையானது அசையும்படி, நீரினுட் பாய்ந்து தனது கருணையினுலே இவளைக் காப்பாற்றி, இவளது அணிகலன்களை உடைய மார்பைத் தழுவிக் கரைசேர்த்தான் ஓர் இளைஞன். அவனது அகன்ற மார்போடு இவளது இளம் மார்பகமும் சேர்ந்தன என்று ஊரார் அறிந்து பேசிக்கொள்வதனுல், என் தோழி அரிய மழையையும் பெய்விக்கவல்ல, அத்தகைய பெருமை படைத்த கற்பினை உடையவளாகின்ருள்."

செவிலி: அது சரி, அவன் யார், தெரியுமா?

தோழி: தினைப்புனத்திலிட்ட பரண்மீது எரிக்கின்ற அகில் புகையானது வானையே மறைக்கும். இதனால், புகையுண்டு ஒளி மழுங்கித் திரிகின்ற மதியம் அம் மலையின்மேல் தோன்றுமாயின், அதனை அம் மலையில் வைத்த தேனடை எனக் கருதி, அதனை எடுத்தற்குக் கண்ணேணி உண்டாக்கும் காடகன்ற மலைநாட்டிற்கு உரியவன் அத்தலைவன்...

செவிலி: அப்படியா? நம் வீட்டார்க்கு விருப்பமில்லையே, என் செய்வது?

தோழி: (வருத்தத்துடன் ஊராரிடம் முறையிடுபவள் போல) சிறு குடியில் உள்ள மக்களே! இம் மலைக்கண் வாழ்வார் இங்ஙனம் உதவியார்க்கு மகளைத் தர நினையாது, பிறர்க்குத் தர எண்ணுகின்றார்களே! இவ்வாறு அறமல்லாதனவற்றை இவர்கள் விரும்பிச் செய்கின்ற காரணத்தினால் இனி இம்மலையில் வள்ளிக் கிழங்கும் விளையாது; மலைமேல் தேனும் தோன்ருது; கொல்லையில் தினையும் கதிர் தோன்றி முளையாது! அதுமட்டுமா? காந்தட்பூ மணப்பதும் பார்த்தவர்கள் கண்ணைக் கவர்வதுமாகிய இக்கரிய மலையிடத்து வளர்ந்த மூங்கில் போலும் மெல்லிய தோளையுடையகுறவரது இளம் மகளிர் தத்தம் கணவரே தெய்வமென்று வணங்கி எழுந்திருத்தலால் அவர்தம் ஐயன்மார் தாந்தொடுத்த அம்புகள் இலக்குத் தப்பாரக வாழ்ந்தார். இனி அதுவும் நிகழாது!

செவிலி: மகளே! வருந்தாதே. நான் நற்ருயிடம் கூறி இத்திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.

[தோழி மகிழ்ச்சியுடன் ஓடுகின்ருள்]

## காட்சி—2

தோழியும் தலைவியும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டுள்ளனர்.

தோழி: நான் இவ்வாறு செவிலித்தாயிடம் உண்மையைச் சொல்லிவிட்டேன். எல்லாம் உன் நன்மைக்காகத்தான்...

தலைவி: அப்படியா?

தோழி: அது மட்டுமா? செவிலித்தாய் உன்னைப் பெற்ற தாயிடம் சொன்னாள். அவளோ உன் தந்தையிடமும் தமையன்மாரிடமும் மெதுவாகச் சொல்லிவிட்டாள்...

தலைவி: ஐயோ, அவர்கள் சினந்துகொண்டிருப் பார்களே?

தோழி: வேறென்ன? நானுந்தான் கூடஇருந்து அந்த நாடகத்தைப் பார்த்தேனே!

தலைவி: என்ன நடந்தது? என்ன சொன்னார்கள்?

தோழி: என்ன நடக்கும். கோபம் தலைக்கேறியது. கண்கள் சிவந்தன. கூரிய அம்புகளையும் வில்லையும் மாறிமாறிப் பார்த்தார்கள்...

தலைவி: ஐயோ!

தோழி: ஒரு நாள் முழுதும் ஒரே ஆட்டந் தான். பிறகு சிறிது சினம் ஆறி, "அவர்கள் இருவ ரும் காதல் கொண்டதிலே ஒரு குற்றமும் இல்லை" யென்று வருத்தத்தோடு தலை சாய்த்தார்கள்!

தலைவி: சம்மதம் என்று?

தோழி: ஆமாம். அழகிய அணிகலன் பூண்டவளே! நீயும் உன் கணவனும் ஒன்றுசேர, இம்மலை வாழும் கடவுளாகிய முருகன் மகிழுமாறு குரவைக் கூத்

தாடுவோம், வா! அக்கூத்தின்கண் ஒருவருக் கொருவர் பதில் கூறிப்பாடி ஆடுவோம் வா!!

## காட்சி—3

தோழியும் தலைவியும் கைகோர்த்துக் கொண்டு குரவைக்கூத்து ஆடுகின்றனர். முதலில் தலைவி பாடுகின்ருள். அதற்குத் தோழி பதில்சொல் கின்ருள்.

தலைவி: அந்தத் திருமண நாளாகிய நல்ல நாளும் வரப்போகிறது. நம் சுற்றத்தார் முதலில் அவரை மறுத்துவிட்டார்கள். பிறகோ உண்மையறிந்ததும் சம்மதிக்க வேண்டியதாயிற்று. இனி அவரைத் திருமணநாளில் பார்க்க அவர்கட்கு எவ்வளவு வெட்கமாக இருக்கும். அந்த வெட்கத்தைத் தாங்க என்ன நல்வினையைச் செய்தார்களோ! மேலும் புனத்திலுள்ள வேங்கைப்பூவின் பொன்போன்ற தாது உதிரும் முற்றத்தின் வெளியிலே, நனவுப் புணர்ச்சி கைகூடுமல்லவா? அது கைகூடியதும் கனவுப் புணர்ச்சியை நான் கைவிடப் பெறு வேனல்லவா?

தோழி: (சிரித்தபடி) வானைத் தொடுகின்ற மலை நாடனும் நீயும் அத் திருமணத்தன்று முன்பு ஒருவரை ஒருவர்கண்டறியாதவர்போல நடந்துகொள்வீர் களோ? இவ்வாறு நடிக்கும் உங்களுடைய பழைய உறவை, நானும் கண்டறியாதவள் போல மறைப் பேனே? மேலும், தலைவீ! அன்று நீ வெட்கத்தால் கண்களை இறுக்க மூடிக்கொள்வாய் அல்லவா? மேகம் தவழும் மலையை யுடையவனுடைய மணக் கோலம் காணுமல் கையாலே புதைக்கப் படுகின்ற கண்களும் கண்களோ?

தலைவி: போடி. யான் உன் கண்ணாலே நன்றாகப் பார்ப்பேன் அல்லவா ?

தோழி: அப்படியா! நெய்தல் இதழ்போலும் மையுண்ட உன் கண்களாக, என் கண்களாகட்டும்! எனக்கு மிக நல்லதுதான்!

[இங்ஙனம் பாடிக்கொண்டிருக்கும் போது வெளியே ஆரவாரம் கேட்டு, தோழி ஓடிப்போய்ப் பார்த்துத் திரும்பி ஓடிவருகின்றாள், மகிழ்ச்சி பொங்க.]

தோழி: தலைவீ! நூல்நெறி கற்று இருவரும் கூடுதற்குத் தக்க வேளையைத் தப்பாது கூறும் கணியை முன்னிட்டு, தொகுத்தும் வகுத்தும் விரித் துரைக்கும் சான்றோரைத் துணையாகக்கொண்டு, மூங்கிலைப் போன்ற உனது மெல்லிய தோளில் பசலையும் ஊரிற்கூறும் அலரும் பொய்யான கனவுப் புணர்ச்சியும் எல்லாம் ஒருசேர நீங்கும்படி, உயர்ந்த மலைக்குரியவன் திருமணம் செய்து கொள்ள வந்துவிட்டான்! இனி உனது பூவினது அழகை யுடைய கண்கள் பொலிவு பெறுவதாக!

*

ஒரு கலிப்பாடல் இவ்வளவு பெரிய நாடகத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. கலித்தொகை நானூற்றில் இத்தகைய பாடல்களே மிக அதிகம். இப்பாடலிலுள்ள படக்கலை நுணுக்கங்களையும் வசனச் சிறப்பையும், நாடக அமைப்பையும் கூர்ந்து நோக்கவேண்டும்.

**கலை நுணுக்கம்**

'தாமரைக் கண் புதைத்தஞ்சித் தளர்ந்தத னோடு ஒழுகலான்' என்ற வரி அவள் ஆற்றால்

அடித்துச் செல்லப்படுவதை அப்படியே காட்டுவது போல் இருக்கிறது. கண்களைக் கைகளால் மறைத்துக்கொண்டு அஞ்சி அலறுவதும், பிறகு தன் செயலற்று ஆற்றுடன் போவதும் இயற்கையில் நிகழ்வன அன்றே! அவன் அவளைக் காப்பாற்ற ஓடி வந்து தாவுகின்ற வேகத்தை "நீணக நறுந்தண் தார் தயங்கப் பாய்ந்து' என்ற சொற்கள் தெளிவு படுத்தி மனத்திற் பதியவைக்கின்றன. படக்காட்சியில்கூட மாலை அசையும் காட்சியை அணிமையில் காட்டினல், அவன் பாயும் வேகத்தை நாம் உணரக் கூடும் அல்லவா? 'பூணகம் உறத்தழீஇ' என்று சொல்வது, இனி அவர்களைப் பிரிக்கவியலாது என்பதை நினைப்பூட்டுகிறது.

தலைவனுடைய மலைநாட்டைத் தோழி வருணிக்கும் காட்சி உட்கருத்துடையதாகும். மிகவுயர்ந்த மலையில் உள்ள தினைப்புனங்களில் மகளிர் அகிற்கட்டைகளை எரிப்பதனலே புகையுண்டாகி அது வானிற் பரவுகிறது. அப்புகை நடுவே தோன்றும் மதியம் ஒளி மழுங்கிய தோற்றத்துடன் மலைப்பக்கம் சாரும் போது, மலையில் கட்டிய தேனடை போலவே காட்சி நல்கும். உடனே மலைவாழ் மக்கள், தேனடையைக் கண்டதும் அதன் உயரத்திற்கு ஏற்ப மூங்கிலில் கண்ணேணி அமைப்பது போல, இப்போது இம் மதியத்தையும் தேனடையென எண்ணி எடுப்பதற்குக் கண்ணேணி தேடி உருவாக்குகிறார்களாம். அத்தகைய காடகன்ற மலைநாட்டான் தலைவன் என்று கூறுகையில் உண்மை அடிப்படையில் எழுந்த அழகிய கற்பனைக் காட்சியைக் காண்கிறோம். இதைக் கலைக் கண்ணுடன் நோக்கும் போது சிறந்த கலைத் (Art) திறன் என்பதும், கருத்

தோடமைந்த காட்சிப் பின்னணி (Settings) என்பதும் விளங்கும். இதன் உட்கருத்தும் ஒன்றுண்டு. அகிற்புகையால் ஒளி மழுங்கிய மதியம் தேனடை போலக் காட்சியளிப்பது, தலைவி தலைவனால் தொட்டுக் காப்பாற்றப் பெற்றதால் பெருமையிற் சிறிது குறைவுறுகின்றாளென்றும், அவளை அவனுக்கே கொடுப்பதாற்றான் கற்புச்சிறப்பு நிலைக்கும் என்றும் உணர்த்துகிறது. படக்கலையினர் இதனைக் கலை நுணுக்கம் (Technique) என்பர். தமிழ் இலக்கியத்தில் இதனை 'உள்ளுறை' என்பர்.

### காட்சி அமைப்பு (Scenario)

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும் காட்சி விரிவாக உள்ளது. ஐயன்மார் உண்மையறிந்ததும் கோபித்து வருந்தும் காட்சியும் காண்கிறோம். இடையே செவிலித்தாய் நற்றாய்க்கும் நற்றாய் ஐயன்மார்க்கும் அறத்தொடு நிற்கும் திருப்புக் காட்சிகள் இரண்டே வரிகளில் முடிகின்றன. ஏன் இந்த அமைப்பு? தோழி சொல்லிய விவரத்தைத் தானே செவிலி நற்றாய்க்கும், நற்றாய் ஐயன்மார்க்கும் கூறப்போகிறார்கள். அவற்றைத் திரும்பத் திரும்ப விவரிப்பது வேண்டாததுதானே. இக் காட்சியமைப்பு முறை, நாடகம், திரைப்படம் இவற்றில் இன்னும் அதிக அளவில் கவனிக்கப் பெறுகிறது.

### நடிப்பு (Action)

ஐயன்மார்க்கு உண்மை தெரிந்ததும் அவர்கள் கண்கள் சிவப்பதும் அம்பையும் வில்லையும் மாறி

மாறிப் பார்ப்பதும் நீண்ட நேரம் அந் நிலையில் பதறித்துடித்துப் பிறகு சினம் ஆறப்பெறுவதும் கடைசியில் வருத்தத்துடன், 'இனி என்ன செய்வது?' என்பது போல் தலை சாய்த்து உட்காருவதும் சிறந்த நடிப்பாகும். இத்தகைய சிறந்த இடங்கள் பலவற்றைத் தமிழிலக்கியங்களில் நிறையக் காண்கிறோம்.

உரையாடல் சிறப்பு (Dialogues)

"காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்" என்ற தோழியின் பேச்சு மிகச் சாதுரியமானது. செவிலித்தாயிடம் பேசும்போது, அவள் சினந்து கொள்வாளே என்று பயந்து எவ்வளவு சாதுரிய மாக முன்கூட்டியே திட்டமிட்டுப் பேசுகிறாள். "ஏனடி அந்த ஆற்றுக்குக்குளிக்கச் சென்றீர்கள்?" என்று செவிலி கேட்காமலே, காமர் புனல் - மனங் கவரும் அழகிய நீர், ஆகையினாலே சென்றோம் என்று சொல்கிறாள் தோழி. 'தலைவியை ஆறு அடித்துச் சென்ற காரணம் என்ன?" என்று பிறகு கேட்பதற்கு இடமில்லாமலே தோழி சொல்லி விடுகிறாள், "அது கடும்புனல்-வேகமாய் ஓடும் ஆறு" என்று. "சரிதான், அவளை மட்டும் அனுப்பிவிட்டு, நீங்களெல்லாம் வேடிக்கை பார்த் தீர்களாக்கும்?" என்று செவிலி சினவாத வகை யில் "கலந்தெம்மோடு ஆடுவாள்" (எங்களுடன் சேர்ந்து நீராடினாள்) என்று சொல்லிவிடுகிறாள் தோழி!

ஒருவனைத் தொட்டு மாலை சூட்டியபிறகு பிறரை ஏறெடுத்தும் பாராத வாழ்வே பெண்களின் கற்பு வாழ்வு. தமிழ்ப் பெண்கள் கணவனையே

தெய்வமாகக்கருதுவர். இங்கே தலைவனால்தொட்டுக் காப்பாற்றப்பட்ட தலைவியை அவனுக்குக் கொடுத் தாற்ருன், இனி அவளது கற்புடைமை காப்பாற் றப்படும் என்பதைத் தோழி குறிப்பாகவும் அழுத்த மாகவும் கூறும் முறை பாராட்டத்தக்கது. 'மழை யைத் தரவேண்டுமென்ருல் அதனையும் பெய்விக்கக் கூடிய ஆற்றல்படைத்த பெருமையினள்'' என்பது ''இவன் ஊரையே விற்றுவிடுவான்'', ''அறைந் தால் முப்பத்திரண்டு பல்லும் உடைந்துவிடும்'' என்பதுபோல உயர்வு நவிற்சியாகும். உண்மை யில் நடப்பன என்று கொண்டு மயங்க வேண்டுவ தில்லை.

ஊராரை நோக்கித் தோழி கூறுவன, யாரும் தீங்கு செய்வதைக் காணும்போது 'இனி இந்த ஊரில் மழை எப்படிப் பெய்யும்' என்பதுபோல அமைந்துள்ளன. குரவைக் கூத்தினுள் தோழியும் தலைவியும் ஒருவருக்கு ஒருவர் பதிலுரைத்துப் பாடு வன சிறப்புடைய உரையாடலாகும். இவ்வாறு கலித்தொகைப் பாடல் ஒவ்வொன்றும் கலைக்களஞ் சியமாகத் திகழ்கிறது. இக்காலத்திற்கு ஏற்ப நினைந்து படிக்கும்போதாவது, இந்த நாட்டு மக் களுக்கு அவற்றின் சிறப்புப் புலப்படாதா என்ற நம்பிக்கையிலேதான் இப்புதுமுறை விளக்கத்தை நாம் தந்துள்ளோம்.

இப்பா 'உவகைச் சுவை' தருவது என்பதை நீங்களே உணர்வீர்கள். (௧௦)

# கள்வன் மகன்

## (சிறு கதை)

சுடர்த்தொடீஇ! கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் எனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்! *

தலைவியும் தோழியும் தனியே பேசிக்கொண் டிருக்கிறார்கள். தலைவி ஏதோ ஒருவிதமாக

---

* கபிலர் - கலித்தொகை - குறிஞ்சிக்கலி - கரு. அடைச்சிய - சூடிய. கோதை - பூ. சிறுபட்டி - அடங்காச் சிறுவன். சிரகம் - செம்பு. நலிய - இறுக்க. தெருமந்திட்டு - வருந்தி. புறம்பழித்து - கோபித்துப் பேசி. நீவ - தடவ. நகைக் கூட்டம் - மனமகிழ்ச்சி யைத்தரும் சந்திப்பு.

இருக்கின்ருள். தோழிக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏன் ஒரு விதமாக இருக்கின்ருய் ?' என்று தோழி கேட்கவில்லை. ஆனல் அவள் தலைவியைப் பார்த்த விதம் அப்படிக் கேட்பது போல இருந்தது.

தலைவியும் சமயமறிந்து தன் மனத்திலுள்ள உண்மையைத் தோழியிடம் சொல்லத் தொடங் கினுள்.

"ஒளி பொருந்திய வளையலணிந்த தோழீ! நான் உன்னிடம் இதுநாள் வரையும் மறைத்து வைத்திருந்த ஒரு செய்தியைக் கூறுவேன், கேட்பாயாக! உனக்குத் தெரியுமென்று நினைக் கிறேன் நாம் சிறுமிகளாக இருக்கும்போது தெரு விலே விளையாடிய மணல் வீடுகளைக் காலினல் சிதைத்துவிட்டு நம்முடன் சண்டைக்கு வருவான் ஒருசிறுவன். அவன் நம் கூந்தலிலே வைத்திருந்த பூவைப் பிடித்து இழுத்து அறுத்துக்கொண்டு, நாம் விளையாடிய வரிகளையுடைய பந்தையும் எடுத்துக் கொண்டு ஓடிவிடுவான். இவ்வாறு நாம் வருந்து மாறு செய்யும் பழக்கமுடைய அவன் யாருக்கும் 'அடங்காதவன்' எனப் பெயரெடுத்தவனல்லவா ?

அவன் அன்றைக்கு ஒரு நாள் நானும் தாயும் வீட்டிலிருக்கும் சமயம் பார்த்து, உணவுண்ணும் நேரம் பார்த்து வந்து வெளியிலே நின்று கொண்டு "யார் வீட்டிலிருக்கிறது? கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும்!" என்று கூறினன். "விளங்கு கின்ற அணிகலன்களையுடைய மகளே! தகட்டுப் பொன்னற் செய்த செம்பிலே குடி தண்ணீர் எடுத் துச் சென்று, அதனைக் குவளையில் வார்த்துக்கொடு" என்று அம்மா கூறவே, யானும் வெளியே நிற்பது

யாரென்றறியாமல் சென்றேன். நான் தண்ணீரை நீட்டிய அளவில் அவன் அதனை வாங்காமல், என் வளையணிந்த முன்கையைப் பிடித்து இறுக்கினான் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியால் நான் பயந்து போய் "அம்மா! இவன் செய்வதைப் பார்!" என்று கூவினேன். அவ்வளவுதான், தாய் அலறிக் கொண்டு பரபரக்க ஓடிவந்தாள். எனக்கோ வெட்கமாகப் போய்விட்டது. என்னையும் அறியாமல் பொய்யாக, "அம்மா! இவன் தண்ணீர் குடிக்கும்போது விக்கினான்," என்று சொன்னேன். உடனே அம்மா 'மெதுவாகக் குடிப்பதற்கென்ன?' என்று அவனைக் கோபித்துக் கொண்டு, தொண்டையைத் தடவினாள். அவன் செய்ததெல்லாம் செய்துவிட்டு என்னைக் கடைக்கண்களால் கொல்பவன்போல் பார்த்துச் சிரித்தான். அக் கள்வன் மகன் செய்த செயலைப் பார்த்தாயா!"

*

என்று சொல்லித் தலைவி புன்னகை பூத்தாள். தோழிக்கோ சிந்தனை பலமாயிற்று. அவன் எவ்வாறு அவ்வளவு மன உறுதியோடு கைகளைப் பிடித்தான். முன்பே இவளும் அவனுடன் பழகியிருக்கிறாள். அதனாற்றான் சந்திக்கப்பெறாத அவன் சாப்பாட்டு நேரத்தில் வீட்டிற்கே வந்து இவளை நலிவு செய்திருக்கிறான். இனி அவன் இவளை மறக்கப்போவதும் இல்லை; இவள் அவனைக் கூடாமல் இருக்கப்போவதுமில்லை என்று தோழியின் உள்ளம் சொல்லிற்று.

இப்பாடல் சிறுகதையன்று. ஆனால் நல்ல கதைப் பண்பு இதில் அமைந்துள்ளது.

ஒரு நிகழ்ச்சியை விவரித்து அதன்மூலம் ஓர் உண்மையை விளக்கும் சிறுகதைபோல, இப்பாடலில் தலைவி கூற்றாகவரும் 'நிகழ்ச்சி விளக்கம்' இருக்கிறது. பாத்திரங்களே பேசுவதாகக் கதை கூறும் முறை இக் காலத்தது என்றுதானே எண்ணுகிறீர்கள். இப்பாடலில் தலைவியே கூறுவதாக அமைந்துள்ள முறையை நோக்குங்கள். இது செய்யுளாக இருக்கிறது என்பதைத் தவிர இக் காலத்துக் காண்டேகரும் பிறரும் எழுதும் கதையமைப்புக்களுக்கு இது எள்ளளவும் பிற்பட்டதன்று என்பதை உற்று நோக்குங்கள்.

கதை பாத்திரப்பண்பு வளர்ச்சிக்கு முதல் காரணமாகத் துணைபுரிவதாகும். திரைப்படம், நாடகம் முதலியவற்றில் இளம் பருவக் கதையைச் சிறிது காட்டிப் பிறகுதான் முக்கியமான கதையைக் காட்டுவர். சிறு பிள்ளையிலேயே ஒருவன் நாலு பிள்ளைகட்கு மேலாக விளங்கி விளையாடும் வாழ்வைக் காட்டி, பிறகு அவன் சமுதாயத்தின் தலைவனாக வாழும் வாழ்வைக் காட்டினால் பாத்திரப் பண்பு வளர்ச்சி (Characterization) நன்கு உருவாகும். இப்பாவில் சிறுவனாக இருக்கும்போது சுட்டியாகத் திரிந்த தலைவன், பிறகு தலைவியின் கையை அவள் வீட்டின் முன்னேயே பிடித்திழுக்கும் அளவு மனவலிமை கொண்டான் என்பதையும், இளம் வயது முதல் ஒன்றாக விளையாடி வளர்ந்த காரணத்தால் அவர்களின் இக்காதல் குறும்புகளுக்கு 'உரிமை' உண்டு என்பதையும் நாம் உணரும் வண்ணம் கதை அமைக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்தின் கூறு யாதாயினும் படிப்போர் தம் உள்ளத்தே அது பதியவேண்டும்; கண்முன்

நிகழ்வது போலச் சொல்லாற்றலுடன் அது திகழ வேண்டும். இக்கதையைப் படிக்கும்போது, நாம் அங்கு நடந்த நிகழ்ச்சியைக் காண்கிறோம் என்று தான் சொல்லவேண்டும். இக்கதை, கவிஞரின் சொல்லாற்றலால், காட்சிப் பொருளாகத் திகழ் கிறது. சங்க இலக்கியங்கள் ஒப்பற்ற கவிதைகள். இவற்றுள் கதைப்பின்னலும் நாடகப் பண்பும் கலந்துள்ளன.

இப்பாடலில் தலைவனின் குறும்புச் செயலைத் தலைவி கூறி மகிழ்வதால், இது உவகைச் சுவை யாகும். (கக)

# நடிப்புத் திறன்

அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந்த னளென வினவுதி அதன்திறம்
யானும் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரல்என் தோழிமா ரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி
புலிபுலி என்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசிபோகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகம் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே, அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறைபு ஒடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரி முடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்றஅக் குன்றுகிழ வோனே!
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்,
அதனளவு உண்டுகோள் மதிவல் லோர்க்கே! *

---

* தங்கால் முடக்கொற்றனார்-அகநானூறு-சஅ.

பழங்கண்-துன்பம். ஒலி-தழைத்த. குயம்-மகளிர் மார்பு. மா-விலங்கு. படர்திறம்-சென்றவழி. படுசுடர் அமையம்-சூரியன் மறையும் நேரம்.

மகளின் நிலைகண்டு செவிலித்தாய் வருந்துகின்றாள். மகளின் உடல் மெலிவிற்குக் காரணம் யாது என ஆராய்கின்றாள். இச்சமயத்தில் தோழி தன் திறமையைப் பயன்படுத்தி, தலைவியின் காதல் தொடர்பை 'அறத்தொடு நிற்கின்றாள்:'

“தாயே! வாழ்க! யான் கூறுவதனைக் கேட்க வேண்டுகிறேன். உன் மகள் பாலுணவும் கொள்ளாமல் துன்பங்கொண்டு பசலை நோயுற்றதன் காரணம் என்ன என்று நீ கேட்கின்றாய். அதைப்பற்றி யானும் தெளிவாக அறியேன். முன்பு ஒருநாள் பூக்கள் நிறைந்த மலைச்சாரலில், தழைத்த கிளைகளையுடைய வேங்கைப்பூக்களைக் கொய்வதற்குத் தோழிமாரோடு சென்றோம், வேங்கைப்பூக் கொய்யும்போது புலிபுலி என்ற ஒலிசெய்வது உண்டல்லவா? நாங்களும் எல்லோரும் சேர்ந்து 'புலிபுலி' என இரைந்துகொண்டு பூக்கொய்தோம்.

அப்போது ஓர் இளைஞன் மகளிர் கண்களைப் போலும் ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டிய மாலையை அணிந்து கொண்டு, தலையின் ஒரு பக்கத்தில் வெட்சிப் பூவாலாகிய கண்ணியைச் சூடிக்கொண்டு, மகளிரைத் தழுவும் மார்பின்கண் சிவந்த சந்தனத்தைப் பூசிக்கொண்டு, வரிந்து புனைந்த வில்லை உடையவனாய், நல்லதொரு அம்பினை ஆராய்ந்து எடுத்துக்கொண்டு 'அப்புலி சென்றவழி யாது?' என்று கேட்டுக்கொண்டு எங்கள் முன்னே வந்து நின்றனன்.

நாங்கள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லையாதலால் திடுக்கிட்டோம். அவனைப் பார்த்ததும் எங்களுக்குள் வெட்கம் மிகுந்ததால் ஒருவர்பின் ஒரு

வராக, ஒருவர் உடலில் ஒருவர் உடல் மறையுமாறு நாணித் தலைசாய்த்து நின்றோம். உடனே அவன், நாங்கள் விளையாடினோம் என்று கருதி "பேணி ஐவகையாக வகுத்த கூந்தலினையும் அழகிய நெற்றியினையும் உடைய பெண்களே! உமது வாயிற் பொய்ச்சொற்களும் தோன்றுமோ?" என்று கூறிவிட்டு அம்மலைநாட்டு மகன் குதிரைகளின் வேகத்தை அடக்கி மெல்லெனச் செலுத்தும் தேரை உடையவனாகி உன் மகளது மையுண்ட கண்கள், தன்னைப் பார்க்குந்தோறும் நிலம் நோக்குமாறு பலதடவை திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்.

பகற்பொழுது மாய்கின்ற அந்தியாகிய ஞாயிறு மறையும்அச்சமயத்தில், அவன்சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்ற தலைவி, "தோழி இவன் ஒரு சிறந்த ஆண் மகனே!" என்று என்னிடம் கூறினாள். ஆராயும் அறிவுடையோர்க்கு, அதனளவாக ஓர் உட்கருத்தும் உண்டு." இவ்வாறு தோழி தலைவியின் காதலை அறிவுறுத்துகின்றாள்.

*

பழங்காலத்தில் தலைவியர் தலைவர்களால் காப்பாற்றப் பட்டுக் காதல் கொண்டனர் என இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் உண்மையில் ஆற்றில் அடித்துப் போகப்பட்டுக் காப்பாற்றப் படுவதும் புலியால் தாக்கப்பட இருக்கையில் காப்பாற்றப்படுவதும் ஒருசில சமயங்களில், ஒருசில காதலியர்க்கு மட்டும் நேர்ந்திருக்கக் கூடியனவாகும். எனவே காதல் வயப்படும்போது, பெற்றோரிடம் "அவனைப் பார்த்தேன் பிடித்திருந்தது; காதல் கொண்டேன்" என்றால் சினங்கொண்டு பேசுவார்களாதலால், பொய்யாக 'அவன் என்னைக்

காப்பாற்றினுன். அவனில்லாவிட்டால் என் உயிரே போயிருக்கும்' என்று கூறி ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை இட்டுக்கட்டியும் கூறுவார்கள் என்று தெரிகிறது. (தொல்-பொருள்-கஙு)

தோழி தன்னுடைய கற்பனையை எவ்வளவு தூரம் உண்மைபோலப் படைத்துக் கூறமுடியுமோ அவ்வளவிற்குக் கூறுகின்ருள். இதே பாடலை இசைப் பாடலாக்கினுல் நாட்டியமாடி அவிநயம் பிடித்தற்கு மிகப் பொருத்தமுடையதாகும். 'யானும் தெளிவாக உணரேன்' என்கிருள் முதலில்; 'இந்த அளவு போதாதா அறிவுடையோர்க்கு' என்று பிறகு கூறுகின்ருள். இப்பேச்சில் அவள் தந்திரம் புலனுகிறது. 'ஒண்செங்கழுநீர்... அவற்கண்டு'' என்பது வரை மாப்பிள்ளையை வருணிக்கின்ருள். அவன் அழகன், வீரன், தகுதியுடையவன் என்பதெல்லாம் பொருந்தச் செவிலியின் மனத்தில் பதியுமாறு அவனைப் பாராட்டிக் கூறுகின்ருள். 'எம்முள் எம்முள் மெய்ம் மறைபு ஒடுங்கி'' என்பது நாணத்தைக் காட்டும் சிறந்த மெய்ப்பாடாகும். 'பரி விரைவைத் தவிர்த்ததேரனுக'' அவன் தலைவியைப் பல முறை நோக்கிச் செல்லும் காட்சியும், அவன் மறைந்த திசை நோக்கி 'இவன் மகனே' எனப் பெருமூச்சுவிடும் தலைவியின் காட்சியும் 'ஓவியம் போல்' உரைக்கப்படுகின்றன. இக்காட்சிகளிலும் தோழி பொய்யையும் மெய்போல விளக்கிக்கூறும் முறையிலும் சிறந்த நடிப்புத்திறன் விளங்கக் காண்கிருேம்.

தலைவியின் காதல் வாழ்வைக்கூறி மகிழ்ச்சியைப் பெருக்கும் வழியில், தோழி நடந்துகொள்வதால் இதனை உவகைச் சுவையின்பாற்படுத்தலாம். (மஉ)

## நிகழ்ச்சிப் படம்

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழா நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி ஆகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்

செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகி முகன் இகுத்து
ஒய்யென இறைஞ்சியோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே!*

தலைவனும் தலைவியும் தனியறையில் மஞ்சத்தில் உள்ளனர். தலைவி ஊடல் தவிராதவளாய்த் தலைவனின் முகம் நோக்காது படுத்திருக்கின்றாள். அப்பொழுது தலைவன் அவளுடைய ஊடலைத் தவிர்ப்பதற்காக, அண்மையில் அவர்கள் திருமணம் நடைபெற்ற விதத்தையும் அப்போது அவர்கள் சந்தித்துக் கூடியமை பற்றியும் அழகாக எடுத்துச் சொல்லுகிறான்.

" உழுந்தம் பருப்புடன் கூட்டிச் செய்யப்பட்ட நெய் சேர்ந்த களியினையும் பெருஞ்சோற்றுத் திரளையும் உண்டல் இடையறாது நிகழத் திருமண விருந்து நடைபெற்றது.

வரிசையாகக் கால்கள் ஊன்றிக்குளிர்ந்த பெரிய பந்தர் போடப்பட்டிருந்தது. அப்பந்தரில் புது மணல் கொண்டுவந்து பரப்பி, வீட்டைத் தூய்மைப் படுத்தி, விளக்கேற்றிவைத்து, எங்கும் மாலைகளைத் தொங்கவிட்டு அழகுபடுத்தினார்கள்.

தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வளைந்த வெள்ளிய திங்களைக் குற்றமற்ற சிறந்த

* நல்லாவூர் கிழார்—அகநானூறு-அசு.
அமலைநிற்ப-உண்டல் இடையறாது நிகழ. ஞெமிரி—பரப்பி. தொடரி—தொங்கவிட்டு. புகழ்நாள்-புகழுடைய உரோகணி நட்சத்திரம். பொது-திருமணம். கதுப்பு-கூந்தல். சும்மையர் – ஒலியினராய் இகுத்து - தாழ்த்து. ஓதி-கூந்தல்.

புகழினையுடைய 'உரோகணி நட்சத்திரம்' கூடிய அன்று, மிக்க இருள் நீங்கிய விடியற்காலையில் உச்சியிலே குடத்தினையுடையவரும் கையில் புதிய அகன்ற மண்டை எனும் கலத்தினையுடையவருமாகிய மணத்தினைச் செய்துவைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர் முன்னே தருவனவும் பின்னே தருவனவும் முறை முறையாகத் தந்திடத் திருமணச் சடங்குகள் நிறைவேறின.

மகனைப்பெற்ற தேமலுடைய அழகிய வயிற்றினைக்கொண்ட, தூய அணிகளையுடைய மகளிர் நால்வர் கூடி நின்று "கற்பினின்றும் வழுவாமல் நன்றாய பல பேறுகளையும் தந்து நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தையுடையை ஆக" என்று வாழ்த்தி நீரோடு கூட்டிப் பெய்த குளிர்ந்த பூவிதழ்களை நெல்லுடன் சேர்த்துக் கூந்தலில் சொரிந்து வாழ்த்தினார்கள்.

இவ்வாறு நன்றாகிய வதுவைக் கலியாணம் முடிந்த பிறகு, சுற்றத்தார் 'கல்' என்ற ஒலியுடன் விரைந்து புகுந்து, 'பெரிய மனைக்கிழத்தி ஆவாய்' என்று கூறி அனுப்ப, இருவரும் ஓர் அறையின் கண், அன்றிரவு உடன் கூடிய சமயத்தில், அவள் முதுகினை வளைத்துக்கொண்டு கோடிப் புடவைக்குள் ஒடுங்கிக் கிடந்தனள். அவளைச் சார்ந்து தழுவும் விருப்புடன் முகத்தினை மூடியிருந்த ஆடையினை நீக்க, அவள் பயந்தவளாய்ப் பெருமூச்செறிந்தாள்! "ஏன், இங்ஙனம் அஞ்சுகிறாய், உன் மனத்திலுள்ளதைச் சொல்!" என்று அவன் அந்த இன்ப மஞ்சத்தில் அவளுடைய பின் பக்கமிருந்து கேட்டான். மானின் மடத்தினைக்

கொண்டதும் செருக்குடையதுமான நோக்கினையும் ஒடுங்கிய குளிர்ந்த கூந்தலினையும் உடைய மாமை நிறத்தினளாகிய அவள் சிவந்த மணிகள் பதித்த ஒளிபொருந்திய குழை வளவிய காதின்கண் அசைய, உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியினளாகி முகத்தினைத் தாழ்த்து, விரைந்து தலைவணங்கினள்.

இவ்வாறு தன் துணைவி அன்று நடந்து கொண்ட விதத்தைப்பற்றி அவன் கூறியதைக் காது கொடுத்துக் கேட்ட அவள், இன்றும் ஊடல் தவிரப்பெற்று முகம் மலர்ந்தாள்.

*

இப்பாடலில் பல நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டப் படுகின்றன. ஒரு விழாவையோ திருமணத்தையோ படம் பிடிக்கும்போது சுவையான பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் படம் பிடிப்பது போலவே, இப் பாடலிலும் சுவையான பகுதிகள் கருத்துக்கு ஏற்ப வேண்டிய அளவிற்குக் கூறப்பட்டுள்ளன. உழுந்துடன் கலந்து செய்த கொழுங்களி மிதவை "ஆடிக்கூழ்'' எனச் சிறப்பு நாட்களில் செட்டிநாட் டுப் பகுதியில் செய்யப்பெறும் ஒருவிதப் பலகார மாக இருக்கலாம். "முறை முறை தரும்" முது செம் பெண்டிர் செட்டிநாட்டுப் பகுதியில் 'தண் டல்காரி' என அழைக்கப்பெறுவர். இக்கால வழக் குப்படி, அவர்கள் பண்டாரக் குலத்தினர். "இன்னின்னவாறு இவ்விச் சடங்குகளைச் செய்ய வேண்டுமென"க் கூறுதல் இன் றும் அவர்கள் பணியாகும். வதுவை நன்மணம் என்பது நீராடல். 'மஞ்சள் நீர் ஆடுதல்' என வழங்குவது போன்ற சடங்காகும். அச்சடங்கு முடிந்த பிறகு கோடியாடை உடுத்தல் இன்றும்

வழக்கு. அதன் பிறகுதான் 'அவனும் அவளும்' தனியிடம் எய்துவர். பூவும் நெல்லும் கலந்து தலையில் தூவி வாழ்த்துதலை இன்றும் செட்டிநாட்டில் காணலாம். 'மணமிடுதல்' என்று அதற்குப் பெயர். திங்களுடன் உரோகணி கூடிய நாள் தான், திருமணத்திற்கு ஏற்ற நாள் என்று வான நூற் கணியர் அக்காலத்தில் கருதினர் என்று தெரிகிறது.

திருமணக் காலத்தில் நடைபெற்ற இன்ப நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இது உவகைச் சுவையாகும். (௰௩)

# அழகிய வடிவம்

...அறல்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்ப்
பலஉறு முத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்
நாண்அடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
அணங்கென உருத்த சுணங்கணி ஆகத்து
ஈர்க்கிடைப் போகா ஏர்இள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்
உண்டென உணரா உயவும் நடுவின்
வண்டிருப் பன்ன பல்காழ் அல்குல்
இரும்பிடித் தடக்கையின் செறிந்துதிரள் குரங்கின்
பொருந்துமயிர் ஒழுகிய திருந்துதாட்குஒப்ப
வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி...
பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி...*

கரிகால் பெருவளத்தானிடம் பரிசில் பெற்று வரும் பொருநன் வழியில் கண்ட பொருநனிடம் தான்பெற்ற வரிசைகளையும் பரிசில்களையும் எடுத்

* முடத்தாமக் கண்ணியார். பொருநராற்றுப்படை-உடு-சஎ. அறல்-கருமணல். மழை-குளிர்ச்சி. மயிர்குறை கருவி-கத்தரிகை. எருத்து-கழுத்து. உகிர்-நகம். நடு-இடை. குரங்கு-தொடை. பெடை-பெண்.

துச்சொல்லிக் கரிகாலனின் வண்மையை விளக்கிப் பாடும் நீண்டபாடல் இது. இதன்கண் பாடினியின் அழகு வருணிக்கப்பெறுகிறது.

"ஆற்றுக் கருமணல் போன்ற கூந்தல், பிறை மதி போன்ற அழகிய நெற்றி, கொலைத் தொழிலை யுடைய வில்போலும் புருவம், அழகிய கடையினை யுடைய குளிர்ச்சியுடைய கண்கள், இலவம்பூ இதழ் போன்ற இனிய சொல்லையுடைய செம்மையுடைத் தாய வாய், கோத்த முத்துப்போல் குற்றந்தீர்ந்த வெள்ளிய பற்கள், மயிரை வெட்டுகின்ற கத்தரி கையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த பொலிவுடையமகரக்குழை அசையும்காதுகள், வெட்கம்சாய்த்தலால் பிறரைநோக்காது கவிழ்ந்தநன்மை விளங்கும் கழுத்து, அசைகின்ற மூங்கில்போலும் பெருத்த தோள்கள், அழகிய மயிரொழுங்கினை யுடைய முன்கை, நெடிய மலையின் உச்சியிடத்தன வாகிய காந்தள் போலும் மெல்லிய விரல், கிளியினது வாயுடன் ஒப்பாகக் கூறக்கூடிய ஒளி பொருந்திய நகம், காண்பார்க்கு வருத்தத்தை விளைவிப்பனபோல் பருத்த தேமல் படர்ந்த ஈர்க்கும் இடையே போகாத எழுச்சியையுடைய இளமை வனப்புடைய மார்பகம், நீரிடத்துப் பெயர்தலை யுடைய சுழிபோல அழகு நிறைந்த கொப்பூழ், உண்டு எனப் பிறர்உணரமுடியாததாகிய வருந்தும் இடை, பல வண்டுகள் ஒருசேர இருந்தாற்போலப் பலமணி கோத்த வடங்களையுடைய மேகலையை அணிந்த அல்குல், பெரிய பிடியின் பெருமை பொருந்திய துதிக்கைபோல மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித் திரண்ட தொடை, மயிரொழுங்கு பொருந்தின திருந்திய கணைக்கால்,

அதற்கொப்ப ஓடியிளைத்த நாயினது நாப்போலப் பெருமை பொருந்திய சிறிய அடி, பெண் மயில் போன்ற சாயல் (இவற்றையுடைய பாடினி).

*

இப்பாடலில் தனித்தனி உறுப்புக்களையே கூறினும் இவ்வுறுப்பு நலனெல்லாம் அமைந்த பாடினியின் முழு உருவை நாம் காணமுடிகிறது. உறுப்புக்களை உவமை காட்டி விளக்கும் திறன் முதலில் நிழல்காட்டிப் பிறகு அதன் உருக்காட்டும் தன்மையாக இருக்கிறது. உறுப்புக்களின் அழ கோடு பண்பையும் விளக்குகின்றன இச் சிறுசிறு தனி ஓவியங்கள். "கொலைவில் புருவம்" "பொறை சால் காது" "நாண் அடச் சாய்ந்த எருத்து" அனையன பண்பையும் விளக்குவனவாம்.

இப்பாடலில் பொருநன் தன் மனைவி பாடினி யின் சாயலழகினை மகிழ்ச்சியுடன் கூறுவதால், இத னையும் உவகைச்சுவைப் பாற்படுத்தலாம். (யசு)

# இன்பக் காட்சி

...புன்தலை இரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உவவு மடிந்து உண்டாடியும்
புலவு மணல் பூங்கானல்
மாமலை அணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
மலிஓதத்து ஒலிகூடல்
தீது நீங்கக் கடலாடியும்
மாசு போகப் புனல் படிந்தும்
அலவன் ஆட்டியும் உரவுத்திரை உழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகில்உடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கால் மாடத்து ஒள்ளெரி நோக்கிக்
கொடுந்திமில் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்
பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்
வெண்ணிலவின் பயன் துய்த்தும்
கண் அடைஇப கடைக்கங்குலான்... *

---

* கடியலூர் உருத்திரங்கண்ணனர். பட்டினப்பாலை – கூ௰ – ககரு. உவவு – அமாவாசை. கொண்மூ – மேகம். ஓதம் – வெள்ளம்.

பட்டினப்பாலை கரிகாற் பெருவளத்தான் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் எத்தகைய சிறப்புடன் திகழ்ந்தது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஒரு தலைவன் இத்தகைய சிறந்த பட்டினமே கிடைத்தாலும் தன் தலைவியைப் பிரியேன் என்று தனது நெஞ்சொடு கூறியதாக இப்பாடல் அமைப்பு உள்ளது.

காவிரிப்பூம் பட்டினம் கடற்கரைத் துறைமுகம். அங்கே நடக்கும் தொழில்கள், கடல் வாணிகம், கொண்டாட்டங்கள், விளையாட்டுக்கள், முக்கிய தெருக்கள், மாட மாளிகைகள், காவிரியின் பொலிவு கடற்கரை எழில் அனைத்தையும் காண்கிறோம் பட்டினப்பாலையில்! அவற்றில் மக்களின் இன்ப வாழ்வு நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியை இங்கே காண்போம்.

" சிவந்த தலையினையுடைய பெரிய பரதவர்கள் பரந்த கருமையையுடைய கடலில் மீன் பிடிக்கப் போகாமல், பசிய தழையணிந்த தம் கரிய நிறத்தினையுடைய மனைவியரோடு, உவா நாள் (அமாவாசை) ஆகையினாலே வீட்டிலே தங்கி நெற் கள்ளுண்டு ஆடுவர். புலால் நாற்றத்தையுடைய மணவிடத்தே பூக்களையுடைய கடற்கரையில், கருமலையைச் சேர்ந்த செக்கர் மேகம் போலவும் தாயின் மார்பைத் தழுவும் குழந்தை போலவும் தெளிந்த கடலலையோடே காவிரியாறு கலக்கின்ற வெள்ளத்தின் மிக்க ஒளியினையுடைய புகார் முகத்தின்கண் தீமை நீங்கக் கடலாடுவர் ; பிறகு அவ்வுப்புப்போக வேறு நீரிற் குளிப்பர் ; நண்டுகளை ஆட்டியும் பரக்கின்ற அலையிலே விளையாடியும் பாவைகளைச் செய்தும் பலவிதமான பொருள்களால் ஐம்பொறி

களும் மயங்குமாறு நீங்காத விருப்பத்துடனே பகற் பொழுதெல்லாம் விளையாடுவர்.

இரவு வந்ததும், பெறுதற்கரிய பழமையான சிறப்பினையுடைய 'சுவர்க்கத்தை'ப் போலும் பொய்யாமல் நீர்வரும் காவிரி கலக்கின்ற பூக்கள் நிறைந்த கடல்துறையின்கண் தங்கள் தங்கள் துணைவர்களுடன் கூடிய இளமை பொருந்திய பெண்கள் வீட்டிற்குவந்துபட்டாடையைநீக்கிவிட்டு மெல்லிய (இரவுக்குரிய) ஆடைகளை உடுத்துக் கொண்டு நெறகள் குடித்தலை விட்டுக் கனிச்சுவை பருகுவர். அவர்களது இன்பவிளையாட்டின்கண் ஆடவர் பூமாலையை (கண்ணி) மகளிர் சூடிக்கொள்வர்; மகளிரது மாலையை ஆடவர் அணிவா. இங்ஙனம் இன்பத்தில் மயங்கிக் கிடப்பர். உவா நாள் என்றும் பாராமல் வளைந்த ஓடத்திலே கடல்மேற் சென்ற சில பரதவர், உயர்ந்தமாளிகைகளின்மாடங்களின் மேலே காணும் ஒளி பொருந்திய நிறம் விளங்கும் விளக்குகளை எண்ணிக்கொண்டே கரை நோக்கி வருவர். மற்றும் மக்கள் பாடல்களைக் கேட்டும் நாடகங்களை விரும்பிப் பார்த்தும் வெண்ணிலவினால் பெறும் பயன் முழுவதையும் அனுபவிப்பர். இவ்வாறு அனைவரும் கண்சாய்த்து உறங்கும் கடைக்கங்குற்காலம்.

*

இப்பகுதியில் பரதவரின் இன்ப வாழ்வைக் கண்டோம். பட்டினப் பாலை முழுதுமே ஒரு படப்பிடிப்பாகும். இக்காலத்தில் சிறந்த நகரங்களைப் படம் பிடித்துக்காட்டி மக்களிடம் அவற்றின் பெருமைகளை விளக்க நினைப்போர் பட்டினப்

பாலையை ஒருமுறை படித்தல் நலம். வேறு எங்கும் காணமுடியாத தனிச் சிறப்புக்களையும், மனங் கவரும் காட்சிகளையும், நாகரிக விளக்கமான பொருள்களையும், இன்பம் பெருக்கும் செயல்களையும் எவ்விதம், எக்கோணத்தில், எம்முறையில் படம் பிடித்தல் வேண்டுமென்பது தெளிவாகப் புலனுகப் பட்டினப்பாலைப் பயிற்சி தேவை.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் ஒரு கருத்துப் படம் வரைந்துவிட்டுச் சென்றுர் கடியலூர் உருத்திரங்கண்ணனுர். இன்று உலகமே மாறிய பிறகும் அப்படக்காட்சி—சொற்படக் கற்பனை உருவாக—நம் மனக்கண்முன் திகழ்கிறது.

காவிரி கடலொடு கலக்கும் காட்சியைக் காட்டும்போது குழந்தை தாயிடம் தாவும் காட்சியையும் மேகம் மலைசாரும் காட்சியையும் உவமை காட்டும் கலை நுணுக்கம்அறிந்தறிந்துஇன்புறற்பாலது.காதல் மயக்கத்தை, ஒருவர் மாலையைப் பிறரணிந்துகொள்ளும் காட்சி மூலம் விளக்கும் புலவரது திறன் சிறப்புடையதாகும். கருங்கடலில் அமாவாசை இருளில் உயர்ந்த மாடத்தில் ஒளிவீசும் விளக்குகளை எண்ணிக்கொண்டே பரதவர் கரை நோக்கி வருகின்ற காட்சி மறத்தற்கரியது.

இவ்வாறு இன்ப விளையாட்டுக்களைக் கொண்ட இக்காட்சி, உவகைக் காட்சியன்றே! (௰௫)

# இன்பத்தின் எல்லே

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினுள் தோள்

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றுல்
அம்மா அரிவை முயக்கு

தலேவன் தலேவியின் நலம் துய்த்து மகிழ்ந்து கூறுவன கோடி; நினேப்பன எண்ணற்றவை. அவற்றைக் கவிஞர்கள் அழகுபடப் புனேந்துள்ளனர். திருவள்ளுவர் காட்டும் தலேமகன் இங்ஙனம் பேசுகின்றுன்:

இந்த ஒளி பொருந்திய வளேயலேயணிந்தாளிடம் கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் தீண்டியும் அனுபவிக்கும் ஐம்புல இன்பங்களும் ஒருசேர உள்ளன!

பூச்சூடிய தழைந்த கூந்தலினேயுடையாளின் தோள்கள் நாம் விரும்புகின்ற பொழுதில், விரும்பு

---

* திருவள்ளுவர்–திருக்குறள்–ககoக, ககo௫, ககoஎ.

உற்று – தீண்டி. ஒண்தொடி – ஒளிமிக்க வளேயலே யணிந்த பெண். வேட்ட–விரும்பிய. தோட்டார் கதுப்பினுள் – பூவணிந்த கூந்தலேயுடையாள். தமது – தம் செல்வம். பாத்து -பகுத்து. அம் மா அரிவை–அழகிய மாமை நிறத்தையுடைய பெண்.

கின்ற பொருள்கள் எவைஎவையோ அவையவை போல இன்பந்தருகின்றன !

அழகிய மாமை நிறத்தினையுடைய இவளை நாம் தழுவுவது, தம் வீட்டிலிருந்து தாம் தேடிய செல்வத்தைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு மகிழும் இன்பத்திற்கு ஒப்பாக விளங்குகிறது.

*

உலகத்துப் பிறபொருள் அனைத்தும் ஐம்புல இன்பத்தில் சிலவின்பமே தருவனவாயிருக்கும். சோலையில் உலாவினால் கண்ணுக்கு இனிமை உண்டு; அங்குள்ள பறவைகளின் ஒலியினால் காதிற்கு இனிமையுண்டு. அச்சோலைதரும் கனிகளை உண்பது நாவிற்கும் அச்சோலை மலர்களை முகர்வது மூக்கிற்கும் அங்குள்ள மலர்களைத் தொடுதலும் அணிதலும் உடலிற்கும் இன்பம் தரும். ஒரே மலர் காண, முகர, தொட என மூன்று புலன் இன்பந்தரலாம். இவ்வாறு உலகத்துப் பிற பொருள்களும் ஒரு புலனுக்கோ, ஒன்றிரண்டு புலனுக்கோ இன்பம் தருவன. காதல் இன்பமே காண இனிமை தரும் அவள் அழகால்; கேட்க இனிமைதரும் அவள் பேச்சால்; உண்ண இனிமைதரும் 'பாலொடு தேன் கலந்தன்ன வாலெயிறூறிய' இதழ் நீர் பருகலால்; முகர்தலுக்கு இனிமைதரும் அவள் கூந்தலால், நெற்றியால், நறுமலர் மேனியால்; தீண்டுதற்கும் இனிமைதரும் கூடலின்பத்தால்... இவ்வாறு ஐம்புல இன்பத்தையும் ஒருசேரத் தரும் ஒரே பொருள்—காதலுக்கிசைந்த கன்னிப் பெண் ஒருத்தியே! இது வள்ளுவர் முடிபன்று. வள்ளுவர் விளக்கிக் காட்டும் உலக முடிபு-முடிந்த

முடிபு! இதனுல் அவள் தோள்கள் விரும்பிய பொழுதே, விரும்பிய பொருளாகமாறி இன்பந் தருகின்றன. இவ்வின்பம் தாம் சேர்த்த பொருளைக்கொண்டு தம் வீட்டில் இருந்து அறநெறியிற் பகுத்துண்டு இன்பமாக வாழும் இல்லற இன்பத்தைப் போன்றதாகும். அவளைத் தழுவும் இன்பம் அறநெறியில் வாழும் இன்பத்திற்கு நிகர் என்ற உவமை நினைந்து நினைந்து பாராட்டுதற்குரியது. திருக்குறள் அறிவிற்கும் உணர்விற்கும் இன்பம் தரும் ஒரு பூங்கா. எவ்வளவு அரிய பெரிய கருத்தையும் ஒன்றேமுக்காலடியில் உள்ளடக்கிக் கூற முடியும் என்பதற்கு அறத்துப்பாலும் பொருட்பாலும் சான்ருகும். அளவற்ற இனிமையை அளந்து தர முடியும் என்பதற்குக் காமத்துப்பால் சான்ருகும். கட்டுரையை உள்ளடக்கியன போன்றன அறமும் பொருளும். கதையைக் காவியத்தை உள்ளடக்கியது போன்றது காமத்துப்பால்!

அவளிடம் அவன் நுகர்ந்த இன்பமெலாம் அவன் உள்ளத்தில் தங்கி உருவம் பெற்றன. அவ்வின்பத்தின் எதிரொளியை–பிரதிபலிப்பை இப்பாக்களில் காணுகிரும். இதனுல் இது உவகைச்சுவை. (௧௬–௧அ)

# பாராட்டு வகை

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி ஆயின்
பலர்காணத் தோன்றல் மதி! *

தலைவியின் நலனை அனுபவித்து மகிழ்ந்த தலைமகன் இன்பக் களிப்பிலே தன்னை மறந்து அவளைப் பாராட்டுகிறான்.

உருவத்தால் மூங்கில் போலும் தோளினையுடைய இவளுக்கு நிறம் தளிரனையது; பற்கள் முத்தனையன; மணம் இயற்கைதரும் நறுமணமே போன்றது; கண்டாரை உண்ணும் இவள் கண்கள் வேலனையன!

வான் நோக்கி நிமிர்ந்து நிற்கும் குவளைப் பூக்களைப் பார்த்து அவன் சொல்லுகின்றான்: "இவை காணும் ஆற்றல் உடையனவாயின் மாட்சிமையுள்ள அணிகளையுடையாளின் கண்களுக்குத் தாம் சிறிதும் ஒப்பாகமாட்டோம்என்று எண்ணி

---

* திருவள்ளுவர்–திருக்குறள்–கககரு, கககச, கககசு.

முறி–தளிர். வெறி–மணம். வேய்–மூங்கில். மாண்–மாட்சிமை. இழை–அணிகலன். தோன்றல்–தோன்றாதே.

நாணத்தால் தலைகவிழ்ந்து நிலத்தினை நோக்கா நிற்கும். பாவம், காணுமாற்றலின்மையின் அவை வானோக்கி நின்றன!" என்று.

தலைவியின் முகம்போலக் காட்சியளிக்கும் மதியத்தைப் பார்த்து, "ஏ, மதியமே! இம்மலர்விழியாளின் முகத்தினைப்போல நீ இருப்பதுண்மையானால் பலரும் காண இவ்வாறு வானிலே தோன்றுதே! ஏனெனில் இவள் முகநலன் பருகும் உரிமையுடையேன் நான் ஒருவனே" என்று கூறுகின்றான்.

*

தலைவியின் ஐம்புல இன்பங்களைச் சுட்டுவான் போலத் தளிர்மேனி (தீண்டல்) முறுவல் (பருகுதல்) வெறிநாற்றம் (முகர்தல்) உண்கண் (காண்டல்) எனவும் இவற்றுடன் உட்பொருளாக அவள் பேச்சினையும் கூட்டி (கேட்டல்) ஐம்புல இன்பத்தையும் தான் நுகர்ந்ததைக் கூறுகின்றான். குவளை அவள் கண்கட்கு இணையாயினும் காணுமாற்றல் அற்றவை என்பதைக்கூறி எவ்வளவு நயமாக அவளைப் பாராட்டுகிறான்! மதியத்தைப் பலர் காணத் தோன்றுதே என்பதால் தலைவனுக்குத் தலைவிபால் இருக்கும் உரிமையுணர்வு எத்தகையது என்பதை அறிகிறோம். இப்பாடலில் முதற்பா அவளை நேரே பாராட்டுவது; இரண்டாம் பா மலரைப் பழிப்பது போல் மங்கையைப் பாராட்டுவது; மூன்றும்பா உரிமை உணர்வை வெளிப்படுத்தும் பாராட்டு.

இங்ஙனம் பாராட்டி மகிழ்தல் உவகைச் சுவையின் விளைவாகும். (ம௯–௨௧)

# காட்சிப் பின்னணி

மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருடக்-கன்றமர்ந்து
ஆமா சுரக்கும் அணிமலை நாடனை
யாமாப் பிரிவது இலம்.

உண்மைக் காதல் இணைபிரியாதது; பிரியவே விரும்பாதது. இதனை மிக அழகுபடக் கூறுகின்ருள் தலைவி. தோழியிடம் தன் மணவாளனின் அருள் உள்ளத்தை அவள் விளக்கும் திறம் மிகநயமானது.

''தோழீ! பொது மன்றத்தின்கண் உள்ள பலாமரங்களின் சுளைவிளைந்த இனிய பழங்களைக் குரங்குகள் வயிறுமுட்டத் தின்னும். பிறகு, அக் குரங்குகள் பக்கத்தில் புல் மேய்ந்துகொண்டிருக்கும் காட்டுப் பசுக்களிடம் சென்று அவற்றின் மடியைக் கன்றுகள்போல வருடிப் பால் குடிக்கும். அப்பசுக் களும் தம் கன்றுகளுக்குப் பால் ஊட்டுவனபோல விரும்பிச் சுரக்கும். இத்தகைய அழகிய மலைநாட்டிற் குரிய நம் தலைவனை, (அவனோடு இன்புற்றிருக்குங் கால், ''இனி நீ செல்க'' எனக்கூறி அவன் பிரிந்து சென்ருலன்றி,) யானுக ஒருகாலும 'பிரிந்து செல் கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்ததில்லை''

*

இப்பாடலில் அழகிய மலை நாட்டையும் அங் குள்ள உயிரினங்களின் அஞ்சாமை, அருள் முதலிய

---

* மூவாதியர்-ஐந்திணை எழுபது-ச
மன்றம்-பொதுவிடம். தீம்பழம்-இனியபழம். அமர்ந்து-விரும்பி. ஆமா-காட்டுப்பசு. யாமா-யாமாக.

பண்புகளையும் தெளிவாகக் காண்கிறோம். தலைவன் அருள் உடையவன் என்பதை இங்ஙனம் நாட்டின் மேலேற்றிச் சொல்கிறாள் தலைவி. இலக்கியத்தில் வரும் பாத்திரங்களின் பண்புகளை வெளிப்படுத்த, இங்ஙனம் சுற்றுச் சூழலைப் பயன்படுத்துவது ஒரு நெறி. நாடகத்திலும் திரைப்படத்திலும் கொடியவனைப்பற்றிய காட்சியாயின் பின்னணியை (scenes or settings) அதற்கேற்பவும், நல்லவனாயின் அதற்கேற்பவும் அமைப்பர். கதைப் பாத்திரங்களுக்கு ஏற்பமட்டும் அல்லாமல் கதையமைப்புக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்பவும் காட்சிப் பின்னணியை உருவாக்குவது ஒரு தனிக்கலையாகும். தமிழிலுள்ள ஐந்திணைப் பிரிவுகள் இக்கருத்துக்கும் பாத்திரத்திற்கும் ஏற்ற பின்னணியை அமைக்கும் நாடகப் பண்பை ஒட்டிய புலனெறி வழக்கமாகும். இங்கு தலைவனைக் காட்டாமலே அவனது பண்பினை நம் மனக்கண்முன் நிறுத்திவிடும் கவிஞர் திறன் பாராட்டத்தக்கதாகும்.

இணைபிரியாக் காதல் உள்ளத்தை எடுத்துக் கூறும் இப்பா உவகையாகும். (உஉ)

## ஊடலும் கூடலும்

குளிரும் பருவத்தே யாயினும் தென்றல்
வளிஎறியின் மெய்யிற் கினிதாம்; - ஒளிஇழாய்
ஊடி இருப்பினும் ஊரன் நறுமேனி
கூடல் இனிதாம் எனக்கு.

முதல்நாள் மாலை தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே சிறுஊடல். இது *தோழிக்குத்தெரியும். மறுநாள் காலையில் தோழி தலைவியைச் சந்தித்து, என்ன, நேற்றையச் சண்டை என்னவாயிற்று? என்று புன்சிரிப்போடு கேட்கின்றாள். தலைவிக்கோ தன் தோல்வியை நேரிடையாக ஒப்புக்கொள்ள மனமில்லை. அவள் சுற்றிவளைத்துத் தோழியிடம் உண்மையைச் சொல்லிவிடுகிறாள். தலைவனுடன் தான் கூடியமையை நாகரிகத்தோடு சொல்லும் திறன் பாராட்டத்தக்கது.

"கடுமையான குளிர்காலமாக இருக்கட்டும். அப்போதும் இனிய தென்றல் வீசினால், அது நம் உடம்பிற்பட்ட அளவிலே இனிமையைத்தருகிறது. ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த தோழி! நான் மிக்க ஊடல் கொண்டு இருந்தேனாயினும் அந்த ஊரனின் சிறப்புப் பொருந்திய மேனி தீண்

---

* மாறன் பொறையனார்—ஐந்திணை ஐம்பது-௩௦.

வளி-காற்று. எறியினும்-வீசினும். ஊரன்-மருதநிலத் தலைவன்.

டியவுடனே எனக்கொரு தனி இன்பம் ஏற்படுகிறது, நான் என்செய்வேன்!"

*

இப்பாடலில் உள்ள உட்கருத்து அறியத் தக்கது. இவளுக்கோ தலைவன் மீது கோபம். அவனைக் கண்ணெடுத்தும் பாராமல் தூரத்தே இருக்கின்றாள். மனம் எல்லாம் அவன்மீது எரிச்சல்; பேச்செல்லாம் அவனுக்கு எதிர்ப்பு! இந்நிலையில் அவன் நெருங்குகிறான்; தொடுகிறான். வெறுக்கத் தக்க குளிராயினும் வீசுவது நறுமணத்தென்றலாயின் அது உடலில் படுந்தோறும் ஊற்றின்பம் மிகுதல் போல, அவன் தொடுந்தோறும் இன்பங் காணுகிறாள் தலைவி. முடிவு, அவள் சினம் தணிகிறது; ஊடல் நீங்குகிறது. வெற்றி தலைவனுக்கு! ஊடலில் தோற்றவள், தலைவி. ஆனால் வள்ளுவர் கருத்துப்படி 'ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும் கூடலில் காணப்படும்,' (குறள்-கஙஉஎ). அதிக உரிமை உணர்வினால் வரும் ஊடல் அதிக அன்பின் வெளிப்பாடு. அதனைக் குளிருக்கு உவமை சொல்லி, அன்புதரும் இன்பத்தைத் தென்றலுக்கு ஒப்பிடும் திறன் சிறப்புடையதாகும்.

கூடலின்பத்தைக் கூறும் இது உவகைச்சுவையாகும். (உங)

# காதல் இன்பம்

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை....*

புகார் நகரில் செழுங்குடி வாணிகச் செல்வர்க்கு மக்களாய்ப் பிறந்த கண்ணகியும் கோவலனும் மணம்பெற்று எழுநிலை மாடத்தின் இடைநிலத்தில் சந்தித்தனர். அப்போது பலவகைப் பூக்களின் இனிய மணத்துடன் தென்றல் வரவுகூற அவர்கள் இருவரும் நிலாமுற்றம் அடைந்தனர். பிறகு அவ் விருவரின் தாரும் மாலையும் ஒன்றுடன் ஒன்று மயங்கிக் கலந்தன. கோவலன் ஆராத காதலுடன் கண்ணகியின் முகத்தை நோக்கி அவளது நுதல், புருவம், கண், இடை, நடை, சொல் முதலியவற் றைப் பொருந்திய உவமைகளால் பாராட்டிக் கூறி விட்டு, பிறகு கீழ்க்கண்டவாறு அவளை அன்புடன் அழைத்துத் தன் அன்பை வெளிப்படுத்துகிறான்.

---

* இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் - மனையறம் படுத்த காதை - எ௩-அ௦.

மாசறு-குற்றமற்ற. காசறு-குற்றமற்ற. விரை - மணம் தாழ்-நீண்ட. இரும்-கரிய. தையால்-பெண்ணே.

"குற்றமற்ற பொன்போன்ற தோற்றத்தால் காட்சிக்கு இனியவளே! வலம்புரிச் சங்கீன்ற முத்துப்போன்றவளே! குற்றமற்ற மணமாகத் திகழ்பவளே! கரும்பேபோல் இனிப்பவளே! தேன் போன்ற மொழியாளே!! பெறுதற்கரிய உயிருண்ணும் கொல்லிப்பாவை போன்றவளே! அரிய உயிருக்கு மருந்தாகும் அமிழ்தம் போன்றவளே! பெரிய குடியிலே பிறந்த வாணிகன் பெற்றெடுத்த பெருமையும் இளமையும் பொருந்திய மகளே! நீண்ட கரிய கூந்தலையுடையவளே! உன்னை மலையிலே தோன்ருத மாணிக்கம் என்பேனு; அலைகடலில் தோன்ருத அமிழ்தம் என்பேனு; யாழில் தோன்ருத இசையே என்பேனு! என்னவென்று அழைப்பேன்!"

*

இங்ஙனம் பாராட்டும்பொழுது கோவலனின் ஆராமை புலனுகிறது. அன்புள்ளத்தின் சொல்லுருவமே பாராட்டு. காதல் மயக்கத்திலே கோவலன் இம்மொழிகளைக் கூறுகிருன். ஆனுல் அடுத்த மூன்ரும் காதையாகிய அரங்கேற்று காதையிலே அவன் மனம் மாதவி பால் ஓடிவிடுகிறது. இங்ஙனம் இரண்டாம் காதையில் இடையீடின்றிப் பாராட்டும் கோவலனை, மூன்ரும் காதையிலேயே மாதவிபால் மயங்கிச் சென்ருன் என இளங்கோவடிகள் குறிப்பிடுகிருர். இது, ஆண்களின் காதல்திறத்தை அவர் சொற்கொண்டு நம்பிவிடாதீர் எனப் பெண் குலத்திற்கு எச்சரிப்பது போலிருக்கிறது. ஆயினும் பயன் என்ன? ஆண்கள் தம்மை ஏமாற்றத்தான் பாராட்டுக்களை அடுக்குகின்றனர் எனப் பெண்கள் உணர்ந்தாலும் தம்மளவில் அப்பாராட்டுக்களைக் கேட்கும்

போது மயங்கத்தான் செய்கின்றனர். ஆண் பாராட்டப் பிறந்தவன் ; அப்பாராட்டில் ஏமாறப் பிறந்தவள் பெண் என்பது இயற்கை விதிபோலும்! ஒரு பெண் ஏமாற்றமடைந்தால், அதைக் காணும் மறு பெண் எச்சரிக்கையாக இருக்கவேண்டாமா? ஆனால் இவ்வேமாற்றம் எப் பெண்ணினிடத்திலும் நிகழ்கிறது. இங்ஙனம் ஏமாறுவதே இன்பம்போலும்!

தலைவன் தான் நுகர்ந்த ஐம்புல இன்பங்களையும் சொல்லிப் பாராட்டுகிருன். பொன்னே என்பது கண்ணுக்கினிமை; முத்தே என்பது தொடுதற்கினிமை; மணமே என்பது முகர்தற்கினிமை; கரும்பே என்பது சுவைத்தற்கும் தேனே என்பது இனிய மொழியாகையால் கேட்டற்கும் இனிமை. இங்ஙனம் கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பங்களைக் கூறிக் கோவலன் பாராட்டுவதாகப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களும் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் இப்பகுதிக்கு உரை கூறினர்.

கோவலன் கூடி மகிழ்ந்த பிறகு கூறும் பாராட்டுரைகளாதலின் இது உவகையாகும். (உச)

# காம இன்பம்

பவழவாய் பரவை அல்குல் என்றிவை பருகும் வேலான்
கவழமார் களிறு போன்ருன் காதலி கரும்பை ஒத்தாள்
தவழ்மதுக் கோதை மாதர் தாமரைப் பூவ தாக
உமிழ்நகைவேலினுனும் ஒண்சிறை மணிவண்டொத்தான்

பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழும் சாயல்
களிக்கயல் பொருவ போன்றுகடைசிவந்தகன்றகண்ணுள்
ஒளிக்கவின் கொண்ட காமத் தூழுறு கனியை ஒத்தாள்
அளித்தயில் கின்ற வேந்தன் அஞ்சிறைப்பறவைஒத்தான்

ஏமாங்கத நாட்டு மன்னனுகிய சச்சந்தன் நற்பண்புகள் வாய்ந்த பேரரசன். விசையை அவன் மாமன் மகள். அழகிலும் பண்பிலும் சிறந்தவள். இவ்விருவர்க்கும் திருமணமாயிற்று. அவள்பால் காதல்கொண்ட சச்சந்தன் அவளுடன் ஒன்றுபட்டு இன்பம் நுகர்கின்ருன். இக்காட்சி சுவைபடத் தீட்டப்பெற்றுள்ளது.

“பவழம் போல் வாயினையும் கடலனைய அல்குலினையும் நுகரும் வேற்படையினனுகிய சச்சந்தன் கவள உணவை உண்ணும் களிறுபோலத் தோன்றினுன்; அவளோ அக்களிறுண்ணும் கரும்புபோல் காணப்பட்டாள். தேன் துளிக்கும் மலர் சூடிய விசையை தாமரைப் பூவாக, ஒளி வீசும் வேற்படையினனுகிய சச்சந்தன் அழகிய சிறகினையுடைய வண்டு போல இன்பம் நுகர்ந்தான்.

---

* திருத்தக்க தேவர்-சிந்தாமணி ககூக, ககூஉ.

பரவை-கடல், கோதை-மலர்க்கண்ணி, உமிழ்நகை-ஒளி உமிழும், பளிக்கறை-பளிங்குக்குன்று. கவின்-அழகு, ஊழுறு-முற்றிய, அளித்து-அன்புசெய்து, அஞ்சிறை-அழகிய சிறகு, பறவை-இங்கு வாவல் (வௌவால்)

பளிங்குப் பாறையையடுத்த பவழப் பாவை போல விளங்கும் சாயலுடனும், மகிழ்ச்சியால் துள்ளும் கயல் மீன்கள் போர்செய்வன போன்று கடை சிவந்து அகன்ற கண்களுடனும் விளங்கும் விசையை அழகொளி கொண்டு முற்றிய காமத்துக் கனிபோல இருக்க, அன்புகொண்டு அவளை நுகரும் சச்சந்தன் அழகிய சிறகினையுடைய வாவல்பறவை போலக் காணப்பட்டான்''.

*

அவளும் அவனும் கூடுங்கால் 'நெருக்கி நீர் நுகர் தலுக்கு'க் கரும்பு உவமையென்றும், செவ்விகுலையா திருக்க நுகர்வதற்கு வண்டு உவமையென்றும் நச்சினர்க்கினியர் விளக்குகிருர். 'பளிக்கறைப்பவழப் பாவை' என்ற உவமையும் சிறந்தது. சச்சந்தன் பளிங்குப் பாறை போன்றிருக்கின்ருன். அப்பாறை யினை அடுத்த பவழப் பாவைபோல விசையை இருக் கின்ருள். பவழப்பாவையின் முழுத்தோற்றமும் பளிங்கில் பிரதிபலிப்பது போல, இங்கே இருவரும் ஒருருவாயினர் என்பது கருத்து. இதற்கு அடுத்தது காட்டும் பளிங்கைப் (குறள்-700) பவழம் தன் தன்மையாக்கினுற்போல,அடுத்த மகளிரின் தன்மை யனுகும் அரசனை இவளும் தன் தன்மை ஆக்கிக் கொண்டாள்' என நச்சினர்க்கினியர் தரும் விளக் கம் சிறப்புடையது. குறுந்தொகைப் பாடலில் ''செம் புலப் பெயல் நீர் போல'' எனவந்த உவமையுடன், இதனை ஒப்பிட்டுப் படித்தல் வேண்டும். ஆடவர் தாம் சேர்ந்த மகளிரின் இயல்பினர் ஆவர் என்று தமிழர்கண்ட அகவியல் உண்மை இவ்வுவமை யாலும் தெளிவுபெறுகிறது.

காமக்களிப்பை விளக்கும் இப்பாடல் உவகைச் சுவையாகும். (உரு-உசு)

# மகளின் வெற்றி !

காப்படங்கென்று அன்னை கடிமனை யிற்செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின்-மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவந் துளை தொட்டார்க்கு
என்னைகொல் கைம்மா றினி. *

பாண்டிய மன்னன் உலாவருவதைத் தன் மகள் பார்க்கக்கூடாது என ஒரு தாய் கட்டளையிடுகிருள். மகளுக்கோ பாண்டியன்மீது தணியாத காதல். எப்படியும் மன்னன் உலா வருகையில் கண்டு களிக்க வேண்டுமென விரும்பித் துடித்துக்கொண்டிருக்கிருள். முன்பெல்லாம் பாண்டியனைத் தாங்கிச் செல்லும் பிடிமீது அவள் சினந்து கொண்டதுண்டு: "பிடியே, பெண்தானே நீயும். பைய நடக்கத் தெரியவில்லையே உனக்கு. உன் பெண்மை ஐயப்படத்தக்கதாக இருக்கிறதே! என் வீட்டினருகே வரும்போதாவது மெதுவாக நட!" என்றெல்லாம் அந்த யானையை எத்தனையோ முறை இவள் வேண்டிக்கொண்டிருக்கிருள். இன்ருே தாயின் அதிகாரம் கதவை அடைத்துவிடுகிறது.

"என் பாதுகாப்புக்கு நீ அடங்கியிரு என்று கூறுபவள்போல என் தாய் காவல்மிக்க வீட்டிலே என்னை அடைத்துவைத்து, வெளிக்கதவினை நன்ருக விளிம்புகள்பொருந்தும்படி ஓடிச்சென்று அடைத்து

---

* ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை – முத்தொள்ளாயிரம். கடிமனை–காவல் பொருந்திய வீடு. யாப்பு அடங்க - விளிம்பு பொருந்த. தொட்டார்க்கு–தோண்டினவர்க்கு.

விட்டாள். என்ன செய்வது என்று தெரியாது நான் திகைத்திருந்தவேளையில் சிறந்த கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னனின் நல்ல அழகெல்லாம் நான் கண்டுகளிக்குமாறு கதவின்கண் துளை யொன்று தோண்டியிருக்கக் கண்டேன். இவ்வாறு துளையமைத்து எனக்குக் காலத்தால் உதவி செய்தவர்க்கு என்ன கைம்மாறு செய்வேன்!"

*

திறவுகோலுக்கான துளையை, உலாக்காட்சி காண்பதற்காகத் தோண்டப்பெற்றது என மகிழும் தலைவியின் எண்ணம், காதலால் மயங்கிநிற்கிறது. "கண்ணாடி போட்டுப் பார்ப்பதற்குக் கண்களைப் படைத்த கடவுள், அக்கண்ணாடியை இழுத்து மாட்டிக் கொள்வதற்குக் காதுகளையும் படைத்திருக்கும் வியப்பைப் பார்!" எனக் கூறியவனின் மனநிலையையே இத்தலைவிபால் காண்கிறோம்.

உலாக் காட்சியைச் சிறிது கண்ட அளவிலே பெரிதுவக்கும் தலைவியின் மனநிலையைக் காட்டும் இப்பாடல் உவகைச்சுவை. (உஎ)

## காணாத காட்சி!

புலவி புறக்கொடுப்பன்; புல்லிடின் நாணிற்பன்;
கலவி களிமயங்கிக் காணேன்-நிலவியசீர்
மண்ணாளும் செங்கோல் வளவனை யானிதன்றே
கண்ணாரக் கண்டறியா வாறு. *

சோழனின் காதலியிடம் ஒரு தோழி சென்று 'உன் காதலன் எத்தகைய அழகுடையவன்?' எனக் கேட்கின்றாள். அதற்கவள் "அவர் எத்தகைய அழகர் என்பதை யான் முழுதும் கண்டிலேன். எப்பொழுதும் அவரை நான் முழுதும்கண்டுகளித்த தில்லையே!" என்று பதிலுரைக்கின்றாள்.

"வளவனுடன் நான் ஊடல்கொண்டு சினத்துடன் இருக்கும்பொழுது அவரைப் பார்ப்பதில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டு புறங்காட்டி நின்று விடுவேன். தழுவி மகிழும் பொழுதும் நான் அவரைப் பார்க்க நிமிர்ந்தால் நாணம் வந்து தடுத்துத் தலைகுனியச் செய்யும். அவருடன் கலந்து களிப்புறும் காலத்தும் அக்களிமயக்கத்திலே திளைத்துக் கிடக்கும் நான் அவரைக் காண்பதில்லை. நிலை பெற்ற சிறப்பினையும் மண்ணுலகைக் காக்கும் செங்கோலாட்சியினையும் உடைய சோழனை, நான்

---

* முத்தொள்ளாயிரம்.

புலவி-ஊடல். புல்லிடின்-தழுவினால். வளவன்-சோழன்.

ஒருபொழுதும் கண்ணாரக் கண்டறியாத காரணம் இதுதான்!"

*

பெண்மையின் சிறப்பையும் இயல்பையும் பண்பையும் சில நிகழ்ச்சிகளால் சுட்டுகிறது இப்பாடல் தன் உயிரனையானை அவள் கண்டதில்லையாம்! ஆம், உயிரை யார்தான் கண்ணுற் கண்டார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது நமக்கு! உணர்வுகளின் ஆழத்தை அளந்தறிந்து அதற்கு உருவங் கொடுக்கும் கவிஞனின் ஆற்றலைக் கண்டு வியக்க வேண்டும். சொல்லுங் கருத்தும் நயம்; சொல்லும் முறையும் நயம்! இத்தகைய முத்தொள்ளாயிரத்தைத்தான் தமிழன் இழக்கத்துணிந்தான்; அதன் ஆசிரியர் பெயரையும் மறந்தான். ஏதோ, சில பாக்கள் மிஞ்சின. அந்த அளவிற்கு நாம் நன்றியுடையவர்களே!

பெண்மையின் காதல் உள்ளத்தைக் காட்டும் இக்கருத்தும் உவகையிற் பிறந்ததே யாகும். (உஅ)

# கடவுளின் காதலி

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்! *

மாணிக்கவாசகர் இறைவன்மீது தாம் கொண்ட காதலை விளக்கும் பாடல் இது. ஆணும் தன்னைப் பெண்ணாக எண்ணிக்கொண்டு, கடவுள் எனும் தலைவன்மீது காதல் கொண்டு பாடுவதான பாக்கள் தமிழில் எண்ணிறந்தவை உள.

"சிவபெருமானுக்குரிய கொன்றைப் பூவைத் தலையில் சூடிக்கொள்வேன். சூடிக்கொண்டு அவருடைய திரண்ட தோள்களைத் தழுவிக் கூடுவேன். கூடித்தழுவி மயங்கி நிற்கும் நிலையிலே, அவர்பால் சிறிது ஊடல் கொள்வேன். அவ்வாறு ஊடல் கொண்டு அவரைத் தழுவாத நிலையில், அவரது சிவந்த வாயை நினைந்து உருகுவேன். உள்ள முருகி அருவுருவான அவரைக் காணாமல் தேடுவேன். அவரது பாதங்களையே சிந்திப்பேன். பிறகு என் முயற்சியினால் வாடி மெலிவேன்.

---

* மாணிக்கவாசகர்–திருவாசகம்–திருவம்மானை–கஎ.
முயங்கி–தழுவி. அனல்–தழல்.

மீண்டும் கூடி மகிழ்வேன். கையில் நெருப் பேந்தி ஆடும் அவரது சிவந்த பாதங்களையே சிந் தித்துப் பாடுவேன்!''

*

அம்மானை என்பது பெண்கள் கழற்சிக்காய் போட்டு ஆடும் ஒரு விளையாட்டு. அவ்விளையாட் டின்போது பெண்கள் ஒருவருக்கொருவர் பாடிக் கொண்டே ஆடுவர். தமிழில் உள்ள திணைதுறை யமைந்த பாடல்களில் பெண்கூற்ருகப் பாடிய பாக் களையும் ஆண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். கடவுட் பாக்களையும் இத்துறைப் பாடல்களைப் போலக் கொள்ளவேண்டும்.

ஒரு பெண் இறைவனுக்காக உருகிக் கூடுவ தாகத் துறையமைத்துப் பாடியதனுல் இஃது உவகையாகும். (உக)

# இன்பக் கனவு

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்!

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்!*

கடவுள்மீது காதல்கொண்டு ஆண்டாள் பாடியுள்ள பாசுரங்கள் மிக இனிமையுடையனவாகும். கடவுளோடு உறவாடும் முறை, மனித நிலையினின்றே கடவுள் நிலைசாரும் மனப்போக்கு, தமிழ் நூல்களில் காணத்தகும் பெரும் செல்வமாகும்.

"தோழீ! நாளைக்குத் திருமணம் என்று நாள் குறித்து, பாளையுடன்கூடிய பாக்குமரங்களைக் கட்டி வைத்த சிறப்புடைய மணப் பந்தலின்கீழ், வலிய சிங்கம் போன்றவனும் பெருந்தவத்தினால் அடையத் தகுந்தவனுமாகிய கோவிந்தன் என்ற காளை, என்னை மணக்கவரும் காட்சியைக் கனவிற் கண்டேன்.

---

* ஆண்டாள் பாசுரம்.
வதுவை மணம் - வதுவையாகிய மணம்; திருமணம். கமுகு - பாக்குமரம். கோள்அரி - வலிய சிங்கம். தாம நிரை - மாலை வரிசை.

மத்தளங்கள் ஆரவாரிக்கவும் அழகிய சங்கு ஒலிக்கவும், முத்துக்களைக் கோத்த மாலை வரிசையானது தொங்குகின்ற மணப்பந்தலின்கீழ்,எனக்கு முறைமாப்பிள்ளையான கண்ணன் வந்து என்னுடைய கையைப்பற்றித் திருமணம் செய்துகொள்ளும் காட்சியைக் கனவிலே கண்டேன் தோழீ!"

*

கனவிலே மணப்பந்தலில் தலைவன் வரும் காட்சியும், தலைவன் மணமகளின் கைத்தலம்பற்றும் காட்சியும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. பாடல் படித்து இன்புறத்தக்க நடையில் அமைந்துள்ளது. தோழீ என அழைத்து நான் இங்ஙனம் கனாக்கண்டேன் என்று சொல்லும் பாவனை அல்லது சாயல் கூட, பாடலில் நன்கு வெளிப்படுகிறது.

இன்பக் கனவைக்கூறும் இஃது உவகை.

(௯௦-௯௧)

# பண்பின் திருவுருவம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

திருநாவுக்கரசரை நோக்கி "இறைவன், இறைவன் என்கின்றீரே, அவ்விறைவன் எத்தகையவன்? அவனது திருவடி நீழல் எத்தகையது?" என வினவியார்க்கு அவர் கூறும் பதில்போல இப்பாடல் அமைந்துள்ளது.

"குற்றமற்ற வீணையின் இசை கேட்கிறது. மாலை நேரத்து மதியம் கண்ணுக்கினிய நிலவொளி வீசுகிறது. இனிய மணம் முகரத் தென்றற் காற்று அசைந்தாடி வருகிறது. அதுவோ உண்ணுதற்கினிய கனிகளைத் தரும் வளரும் இளவேனிற் காலம். உடலிற் படுந்தொறும் குளிர்மையும் இனிமையும் தருவதும், மொய்க்கும் வண்டுகள் ஒலிக்கப் பூத்த மலர்களையுடையதுமான பொய்கையின் ஓரம். இங்கிருந்து இவ்வைம்புல இன்பங்களையும் துய்த்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்?

---

* திருநாவுக்கரசர்—தேவாரம்.

மாசு—குற்றம். வீங்கு—பெருகு. மூசு—மொய்க்கும். அறை—ஒலிக்கும். இணை—இரண்டு. நீழல்—நிழல்,

எம் தந்தையாம் இறைவனின் இணையடி நிழலும் இங்ஙனம் ஐம்புல இன்பம் தருவதேயாகும்.''

*

நாம் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களும் பெண்ணிடமே உள்ளன எனக் கருதுகிறோம். உலக இயல்பும் அது தான். திருவள்ளுவரும் இதனை நன்கு விளக்கியுள்ளார். தமிழ் இலக்கியங்களனைத்தும் இதற்குச் சான்று பகரும்.

இல்வாழ்க்கை இன்பத்தின் வழிப்பட்ட இறை இன்பமும் 'ஐம்புல நுகர்ச்சி' தருவது என இங்கே நாவுக்கரசர் குறிக்கும் அழகு கருதத்தக்கது. தாயின் பாசம், தந்தையின் வாஞ்சை, மனைவியின் காதல், குழந்தையின் பற்று, நண்பனின் அன்பு—இவையெல்லாம் பண்புகள்; உருவம் அற்றவை. திடீரென ஒருவர் நம்மை நிறுத்தி 'நும் தந்தையின் வாஞ்சை எத்தகையது?'' என வினவினால் நாம் பதிலிறுக்க முடியாமல் விழிப்போம். ஆனால் கவிஞர்கட்கு இயலாததொன்றில்லை.

கவிஞர்கள் வெளிப்படுத்த முடியாத பண்புகளை உலகப் பொருள்கள் மேலேற்றி வெளிப்படுத்துகின்றனர். ஒருவனின் உள்ளுணர்வு அவனது உடம்பில் மெய்ப்பாடாக வெளிப்படுதல் போல, பண்புகளின் உருவத்தை அப்பண்புடைய பொருள்கள் மேலேற்றிக் காட்டுதல் கவிஞர்தம் மரபு. ஓர் ஓவியன் 'அன்பு' எனும் பண்பைத் தீட்டிக் காட்ட வியலாதபோது என்ன செய்கிறான்? கறவையிடம் தாவும் கன்றையோ, தாயிடம் ஓடும் சேயையோ படமாக்கிக்காட்டி அன்பை நம் மனக்கண்

ணல் காணவைக்கிருன். கவிஞர்களும் நீர்போல் தண்மையன், அனல்போல் கொடியன், தேன் போல் இனியன் என உவமைகொடுத்தும் முகமதி, விழிக்கயல், தாள்மலர் என உருவகப் படுத்தியும் பிறவாறும் உருவுடன் ஒட்டிய பண்புகளே உணர்த்துகின்ருர்கள். திருநாவுக்கரசர் இறைவன் தரும் இன்பத்தை, இவ்வகையில் உவமை கொடுத்துக் கூறியுள்ள திறன் உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

இவ்வாறு தேவாரம் ஏறத்தாழஎண்ணுயிரம், திருமால் பாசுரங்கள் நாலாயிரம், இன்னும் திருவாசகம், தாயுமானவர் பாடல், இராமலிங்க அடிகள் பாடல்... என அடுக்கிவிட்டு, அவற்றை அனுபவித்துப் படித்துவிட்டு இவை நம் திருமணச் சடங்குகட்கு உதவாதவை ; அருச்சனே புரியப் பயன்படாதவை ; வேதமெனக் கருதவோ, உள்ளம் உருக்கும் என உயர்த்தி மதிப்பிடவோ, இறைவனே எய்த உதவுமென நம்பவோ, மன அமைதி தரவோ இயலாதவை என்று நாட்டுமக்கள் எண்ணி வாழும் நிலேயையும் காணும்போது நமக்குக் கவலே பெருகுகிறது. மக்களின் வாழ்க்கைக்கும் மனத்திற்கும் புறம்பான இறையன்பு வாழுமா என்ற அச்சமும் ஏற்படுகிறது.

இறைவனது இனிய பண்பின் திருவுருவாய்த் திகழும் இப்பா உவகைச் சுவை தருவதாகும். (கூஉ)

# எடுத்த பொற் பாதம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்

இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்ருல்

மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே!

இது சிற்பி செதுக்காத சிலை. சொற்களை வண்ணங்களாகக் கொண்டு கற்பனைத் தூரிகையினுல் வரையப்பட்ட சொற்சித்திரமாக, அச் சித்திரத்தை வடித்தெடுத்த சிலையாக, நடமாடும் கூத்தப்பர் அப்படியே நம் கண்முன் நிற்கின்ருர். சிற்பியின் கற்பனையில் உருவான சிலையின் மறுபதிப்பே இப் பாடல். நம் நாட்டுச் சிற்பச் செல்வங்கள் பல பேணுவாரின்றி மறைந்தபிறகும், மறையாதசிலவும் கீறல் விழுந்தும் சிதைந்தும் உருமாறிய பிறகும் இப்பாடல் சிதையாமல் நின்று விளங்குகிறது. சங்க இலக்கியக் காலத்துத் தமிழர் நாகரிகமெல்லாம் குறைந்துபோய்விட்டன அல்லது மறைந்துபோய் விட்டன. எனினும் அக்கால இலக்கியத்தைச் சான்

---

* திருநாவுக்கரசர்—தேவாரம்.

குனித்த-வளைந்த. குமிழ்-சிமிழ். பனித்த-குளிர்ந்த.

ருகக் காட்டி "நாங்கள் இத்தகைய நாகரிகத்தின் பரம்பரையினர்" எனப் பெருமை பேசிக்கொள்கிறோம் அல்லவா? அதுபோல நம் நாட்டுச் சிற்பங்களனைத்துமே சிதைந்து போனாலும் இப்பாடலைக் காட்டி, "எங்களிடம் எத்தகைய சிற்பக்கலையும் நடனக்கலையும் இருந்தன தெரியுமா?" என நாம் பெருமையடித்துக்கொள்ளலாம்!

"உள்ளமெனத் தெளிந்திருக்கும் வெட்ட வெளியிலே ஒரு தோற்றம்: அவிநயங் காட்டும் முறையில் வளைந்த புருவம், கொவ்வைப் பழம் போற் சிவந்த வாயில் குங்குமச் சிமிழைத் திறந்து வைத்தாற் போன்ற புன்சிரிப்பு, குளிர்ந்த செஞ்சடை, பவளம்போற் சிவந்த மேனி; அதன்மேல் பால்போன்ற வெண்ணிறத் திருநீறு; இனிமை பொருந்த ஆடுதற்கு எடுத்த அழகிய பாதம்; இத்தகைய, சிவபெருமானின் காட்சியைக் காணப் பெற்றால், இந்த உலகின்கண் மனிதப் பிறவியும் வேண்டியதேயாகும்!'

*

சிவபெருமானின் நடனத்தோற்றம் நம் கண்களைவிட்டு அகலாத வகையில் படைக்கப்பட்டுள்ளது. அந்நடனத் தோற்றத்தின் உயிர்ப்பாகமே எடுத்த பொற்பாதம். கைத்திறன் மிக்க ஓவியர்கள் பெருந் தலைவர்களின் திருவுருவங்களைச் சில கீறல்களிலேயே போட்டுக் காட்டிவிடுவர். அவ்வத் தலைவருக்குரிய சிறப்பான உருவப் பகுதியைத் தொட்டுக் காட்டிவிடுவதால் அவரின் முழு உருவமும் நம் கண்ணிற்கு வந்துவிடுகிறது. குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாயிலே குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளமேனி,

பால்வெண்ணீறு, எடுத்த பொற்பாதம் - இவையும் அத்தகைய ஓவியச் சாயல்கள் தாம்–கோடுகள் தாம்– அக் கோடுகளுக்கிடையேதான் வண்ணமும் தீட்டுகிருர் கவிஞர், பவளமேனி என்றும்; பால்வெண்ணீறு என்றும்! இக்கோடுகளிலும் வண்ணத்திலும் உருவாகிய கூத்தப்பரின் முழு உருவம் நம் உள்ளத்தில் அழியாமல் நிலைபெற்றுவிட்டது. இனித்தம் –இனிமையை எதுகைக்காக எவ்வளவு புதிய வடிவிலே தருகிருர் கவிஞர்! மனிதப் பிறவியும் எதுகைக்காக மனித்தப் பிறவியாகி இருக்கிறது. இம் மாற்றங்களைக் கவிஞர் கையாண்டதனல் நமக்கு ஒருவித அருவருப்போ, குறையோ தோன்றவில்லை. இனிமையும் அருமையுமே பெருகுகிறது. கவிஞன் தனது தனியுரிமையை அல்லது புறநடையை (Poetical License) இங்ஙனம் கவியழகை மிகுதிப் படுத்தும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

இனிய காட்சியை மனக்கண்ணிற்குத் தரும் இப் பாடல் உவகைச் சுவையினதாகும். (௩௩)

# இயங்கும் ஓவியம்

தோயும் வெண்தயிர்
　　மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளே
　　வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை
　　சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர்
　　அங்கை வருந்துவார்!

காலையில் எழுந்ததும் பெண்கள் தயிர்கடையும் காட்சியைக் கம்பர் மிக அழகுபட வரைந்துள்ளார்.

"உறைந்த கட்டியான வெண் தயிரைக் கடையும் மத்திலிருந்து ஒலி துள்ளித்துள்ளி எழுகிறது. தயிர் கடையும் வேகத்தால் கைகளில் முன்னும் பின்னும் கண்ணுக்கு அகப்படாமல் ஓடும் சங்கு வளையல்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பு கின்றன. பெண்கள் நிலமத்தில் கயிறு கட்டி இழுத்து முயன்று தயிர் கடைவதால் முன்பே தேய்ந்துபோன நுண்ணிய இடை வலமும் இடமும் சென்று துவள்கிறது. உள்ளங் கைகள் வருந்தும் வண்ணம் ஆயர்குல மங்கையர் இங்ஙனம் தயிர் கடைகின்றனர்.

*

---

* கம்பர்—இராமகாதை—௰௫.

தோயும் — உறைந்த. வணங்கவும் — துவளவும்.
அங்கை—உள்ளங்கை.

கட்டித்தயிரில் மத்தொலி துள்ளுதல், வளையல்கள் நிலைபெருது கதறுதல், இடை துவளுதல், உள்ளங்கையில் உழைப்பினுல் தோன்றும் சிறு வலி— இந்தக் காட்சிகள் அனைத்தும் தயிர் கடையும் முழு ஓவியத்தையும் நம்முன் நிறுத்தும் தனிக் காட்சிகளாகும். இவை நான்கும் இயங்கும் நிலையில் இருக்கக்காணும் நம் கண்முன் ‘ தயிர் கடையும் பெண் ’ நிலையாகத் தோன்றுகிருள். ஓவியத்தில் இதனைத் தீட்ட முடியும்; ஆனுல் படிக்குந்தோறும் “ இயங்கும் இவ் ஓவியப் ” பாவைபோல், வரைந்த ஓவியத்திலே இயக்கம் காண முடியாது.

கவிஞனுக்குச் சொல்லும் யாப்பும் முதலியன போதா. சிற்பிக்குக் கல்லும் உளியும் இருந்தால் போதுமா? கற்பனையும் திறமையும் வேண்டுமல்லவா? அதுபோலக் கவிஞனுக்கு ஒரு காட்சியைச் சுவைத்த அனுபவம் வேண்டும்; அக் காட்சியில் இன்றியமையாதன எவை என்ற அறிவுணர்வு வேண்டும்; உணர்வுக்குச் சிதையாத உருவம் தரும் மொழிப் புலமையும் வேண்டும். கம்பரிடம் இவையனைத்தும் உள்ளன என்பதை இச் சிறு பாடலே விளக்குகிறது. கம்பரின் காவிய நயம், சொற்சிறப்பு, இலக்கிய இனிமை இவை அனைத்தும் ஒப்பற்றவை. ஒரு காலத்தில் தமிழகம் முழுதும் வடமொழியின் பெருமையும் வான்மீகியின் பெருமையும் ஓங்கியிருந்தன. கம்பரின் தமிழ் அவற்றை வென்று காட்டியது.

இனிய இயங்கும் ஓவியமாகிய இப்பா உவகைச் சுவை. (௩௪)

# முதற் சந்திப்பு

எண்ணரும் நலத்தினள்
　　இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை
　　கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது
　　உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் ;
　　அவளும் நோக்கினள் !

நோக்கிய நோக்கெனும்
　　நுதிகொள் வேல்இணை
ஆக்கிய மதுகையான்
　　தோளின் ஆழ்ந்தன ;
வீக்கிய கனைகழல்
　　வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள்
　　தனத்தில் தைத்தவே !

பருகிய நோக்கெனும்
　　பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம்
　　உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும்
　　வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு
　　இதயம் எய்தினர் !*

---

* கம்பர்—இராம காதை—௧௬௭, ௧௬௮, ௧௬௯.

நுதி-கூர்மை. மதுகையான்-வலிமை உடையவன்.
ஈர்த்தலால்-இழுத்தலால்.

மிதிலையில் இராமனும் சீதையும் முதன்முதல் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர்.

எண்ணுதற்கு அரிய அழகு படைத்த சீதை இத்தகையவளாக மேலே நின்றுகொண்டிருக்கையிலே, தெரு வழியே நடந்து செல்லும் இராமனைக் காண்கின்றாள். அவர்கள் இருவரது கண்ணிணைகளும் ஒன்றையொன்று கவ்வி மாறி மாறி உண்ண முயலவும், உணர்வு ஒன்றவும் முதற்படியாக அவன் அவளை எதிர்பாராமல் நோக்கினான்; அவளும் தற்செயலாக அவனை நோக்கினாள்.

இங்ஙனம் நோக்கிய இரண்டு கூர்மை மிக்க கண்களாகிய வேல்களும் வலிமைமிக்க அவனது தோள்களில் ஆழப்பதிந்தன; இமுத்துக்கட்டி, ஒலிக்கின்ற கழலையுடைய வீரனது சிவந்த கண்களும் தாக்கி வருத்தும் தெய்வம் போன்றவளாகிய சீதையின் மார்பில் தைத்தன!

இங்ஙனம் பருகிய நோக்கு என்னும் பாசக் கயிற்றால் கட்டி ஒருவர் மற்றவருடைய உள்ளத்தை இழுத்தலால், அழகிய வில்லையுடைய இராமனும் வாளனைய கண்களையுடைய சீதையும் ஒருவர் உள்ளத்தில் மற்றவர் புகுந்து தமதாக்கிக் கொண்டனர்!"

*

முதற்பாட்டு காட்சி; அடுத்தது காதற் போர்; மூன்றாவது பாடலில் இருவருக்கும் வெற்றி! முதற்பாடலில் இருவரும் எதிரெதிர் நோக்கினர் எனக் கம்பர்பாடியிருப்பதற்குத் தமிழர் பண்பாட்டுக்குப் புறம்பான கதையென்பதே காரணமாக இருக்கலாம். அடுத்த பாடலில் முதல் இருவரியிலேயே

அவளது கண்கள் இமைதாழ்ந்து அவனது தோள் நலம் நுகர்ந்த காட்சியைத் தருகிருர் கம்பர். "யான் நோக்கும் காலை நிலன் நோக்கும்" என்ற தமிழர் நாகரிகப் பண்பை, அதற்குப் புறம்பான கதையிலும் காண முயன்றிருக்கும் கம்பரது கவித்திறன் இங்கு ஓரளவுதான் வெற்றி கண்டிருக்கிறது எனலாம்.

கம்பர் பாடும் எச்சுவையும் இனிமையாக இருக்கிறது. காரணம் அவரது கற்பனைத் திறனும் மொழிப்புலமையும் கவியாற்றலுமே. அவர் இன்பச் சுவையைப் பாடுங்கால், நாம் இனிமையில் இனிமை என அதனை அனுபவிக்க முடிகிறது. கம்பரது இராம காதையை ஒழுங்காகப் படிப்பவர்கள் அது ஒரு தொடரான நாடகக் காட்சி என்பதைக் காண்பார்கள். கம்பன் படைக்கும் ஒவ்வொரு பாத்திரமும் உயிருடையதாகும். கம்பன் படைக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இயங்குவதாகும். கம்பனிடம் கருத்துமட்டுமன்று சொல்லும், நடையும், கவியும் பொருளுடையன ; நம்முடன் பேசுவன ; உயிருடையனவாகும். எனவேதான் கம்பர் காட்டும் கதை நமது பண்பாட்டுக்குப் புறம்பானது என்றும் கருதாமல், சிலர் அதன் காவிய நயத்திலே ஈடுபடுகிருர்கள். கம்பர் தமது காவியநயத்தால் ஆரியத்தை வென்ருரா? அல்லது ஆரியம் கம்பர் காவியத்தால் தமிழரை அடிப்படுத்தியதா ? என்பது ஆராய்ச்சிக் குரியது.

இப்பாடலில் காதலர் சந்திப்பைக் காண்பதால், இஃது உவகைச் சுவை தருவதாகும். (௫௫-௫௭)

## மகிழ்ச்சியின் உச்சம்

வடங்களும் குழைகளும்
　　வான வில்லிடத்
தொடர்ந்தபூங் கலைகளும்
　　குழலும் சோர்தர
நுடங்கிய மின்என
　　நொய்தின் எய்தினுள்
நெடுந்தடம் கிடந்தகண்
　　நீல மாலையே.

வந்தடி வணங்கிலள் ;
　　வழங்கும் ஓதையள் ;
அந்தமில் உவகையள் ;
　　ஆடிப் பாடினள் ;
சிந்தையுள் மகிழ்ச்சியும்
　　புகுந்த செய்கையும்
சுந்தரி, சொல்லெனத்
　　தொழுது சொல்லுவாள்.

கயரத துரகமாக்
　　கடலன், கல்வியன்,
தயரதன் எனும்பெயர்த்
　　தனிச்சொல் நேமியான் ;
புயல்பொழி தடக்கையான்
　　புதல்வன் ; பூங்கணை
மயல்விளை மதனற்கும்
　　வடிவில் மேன்மையான்.

மராமரம் இவையென
　　வளர்ந்த தோளினன் ;
அராவணை அமலன்என்று
　　அயிர்க்கும் ஆற்றலான் ;

இராமன்என் பதுபெயர் ;
    இளைய கோவொடும்
பராவரும் முனியொடும்
    பதிவந் தெய்தினன்.

பூணியல் மொய்ம்பினன்
    புனிதன் எய்தவில்
காணிய வந்தனன்
    என்ன, காவலன்
ஆணையின் அடைந்தவில்
    அதனை, ஆண்தகை
நாண்இனி தேற்றினன்
    நடுங்கிற் றும்பரே !

மாத்திரை அளவிற்றன்
    வலித்து முன்பயில்
சூத்திரம் இதுவெனத்
    தோளின் வாங்கினன் ;
ஏத்தினர் இமையவர் ;
    இழிந்த பூமழை ;
வேத்தவை நடுக்குற
    முறிந்து வீழ்ந்ததே ! *

---

* கம்பர் - இராமகாதை - ௨௫௨ - ௨௫௭.

வடம் - மாலை. கலை - ஆடை. குழலும் - கூந்தலும். நுடங்கிய - வளைந்த. ஓதை - ஓசை கயம் - யானை. துரகம்-குதிரை. புயல்-மேகம். மதனன்-மன்மதன். மராமரம்-பெரிய மரம். அராவணை அமலன்-பாம்பைப் படுக்கையாகவுடைய திருமால்.

பூண் இயல் - தோள்வளை அணிந்துள்ள. மொய்ம் பினன்-வலிமையுடைய இராமன். உம்பர்-மேல்உலகம். மாத்திரை அளவு-கண்ணிமைப்பொழுது. வேத்தவை-அரசவை.

இராமன் சீதையைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்குடன், வில்லை வளைக்கும் கட்டம். இதுவரை பலரும் முயன்று தோற்ற வில் அது. "இராமனாவது வில்லை வளைத்துத் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டானா?" என்று சீதை அந்தப்புரத்தில் துடித்துக்கொண்டிருக்கிறாள். நீலமாலை என்ற தோழி இராமன் வில்லை வளைத்ததோடன்றி முறித்து வீழ்த்தியதையும் பார்த்துவிட்டு, அதனைச் சீதையிடம் அறிவிப்பதற்காக ஓடோடி வருகின்றாள்.

" நீண்ட அகன்ற கண்களையுடைய நீலமாலை, இரத்தின மாலைகளும் காதணிகளும் வானவில்லைப் போல ஒளிசெய்யவும், அணிந்துள்ள அழகிய ஆடைகளும் கூந்தலும் சரிந்து பறக்கவும், வளைந் தோடும் மின்னற்கொடிபோலச் சீதையிடம் ஓடி வந்தாள்.

வந்ததும் வழக்கம்போல அவள் சீதையை வணங்கவில்லை. ஒரேயடியாகச் சத்தமிட்டுக்கொண்டிருந்தாள். முடிவில்லாத மகிழ்ச்சியினளாக ஆடினாள்; பாடினாள். உடனே சீதை 'உன் மனமகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? நடந்த நிகழ்ச்சி என்ன? சொல்வாயாக' என்று கேட்டவுடன் அவள் வணங்கிச் சொல்கின்றாள்.

நீலமாலை: அவர் யார் தெரியுமா? யானை, தேர், குதிரை இவற்றைக் கடல்போல மிகுதியாக உடையவர். எல்லாக் கலைகளையும் கற்றவர். தயரதன் என்னும் பெயரை உடையவர். ஒப்பற்ற ஆட்சியை உடையவர். மேகத்தைப் போலக் கொடுக்கும் கைகளை உடையவர்... அவருடைய மகன். அவன் எவ்வளவு அழகன்

தெரியுமா? மலர் அம்புகளால் ஆசையை உண்டாக்குகிற மன்மதனிலும் சிறந்த அழகுடையவன்...

சீதை :- என்னடி இது? உன் மகிழ்ச்சிக்குக் காரணம்கேட்டால் வேறுஏதோபேசுகிருயே...!

நீலமாலே :- ஆம் அம்மா. அவனது தோள்கள் மராமரம்போல வளர்ந்தவை. திருமாலோ எனச் சந்தேகிக்கும்படியான ஆற்றலுடைய வன். அவன் பெயர் இராமன் என்பது. இளையவனேடும் வணங்குதற்கரிய முனிவரோடும் இந்த ஊருக்கு வந்திருக்கிருன்.

சீதை :- தெரியுமே. அதற்கும் உன் மகிழ்ச்சிக்கும்...

நீலமாலே :- தோள்வளே அணிந்துள்ள வலிமையுடைய இராமன், முன்பு சிவன் எய்தவில்லேக் காண வந்துள்ளான் என்று அம்முனிவர் கூறினர். சனக வேந்தரும் அவ்வில்லேக் கொண்டுவரக் கட்டளேயிட்டார்...

சீதை :- அப்படியா? பிறகு... சொல்லடி சீக்கிரம்...!

நீலமாலே :- ஆடவரிற் சிறந்த அவன் நாணியை இழுத்து எளிதாக ஏற்றினுன். மேலே உள்ள உலகத்தவரும் திகைத்துப் போனர்கள்.

சீதை :- ம்ம்... பிறகு...

நீலமாலே :- கண்ணிமைக்கும் நேரத்தில் நாணியை இழுத்து, அவ்வில்லுடன் பலநாள் பழக்கப்பட்டவன்போலத் தோள்வரை அதனை இழுத்துச் சென்ருன்.

சீதை :- ...........?

நீலமாலை :- தேவர்கள் வாழ்த்தினர்கள். பூமழை பொழிந்தார்கள்!

சீதை :- (முகம் மலர்கிருள்)......!

நீலமாலை :- அரசவை நடுக்குறும் வண்ணம் அப் பெரிய வில் முறிந்து வீழ்ந்தது!

*

இப் பாடலில் மகிழ்ச்சியின் உச்சத்தைக் காண் கிருேம். ஆறு பாடல்களிலும் நீலமாலையின் நடிப்பே இருக்கிறது. முதல் பாட்டில் அவள் ஓடோடி வருகின்ருள். ஆரும் பாட்டின் இறுதி இரு சீர்களில்தான் வந்த காரியத்தை அவள் சொல்கிருள். இடையே அவள் மகிழ்ச்சியில் மயங்கி ஆடியதும், பாடியதும், பிறகு அளந்தளந்து பேசியதும் ..சீதையைச் சில விநாடிகளில் திகைக்க வைத்துப் பிறகு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிருள். நாமும் அந்நிலைக்குத்தான் ஆளாகிருேம். நடிப் புக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டு இப்பாடல்.

இவ்வளவு மகிழ்ச்சியானசெய்தியை வந்தவுடன் சொல்லியிருந்தால் சுவையாயிருந்திருக்காது. உல கத்தில் பல வகையினர் உண்டு. சிலர் இதே செய் தியை வருமுன்னே கதறிக்கூறிக்கொண்டே ஓடி வந்திருக்கக்கூடும் அல்லது வந்ததும் சொல்லி யிருக்கக்கூடும். இலக்கியத்தில் சுவையான பகுதி களை எடுத்துச் சொல்வதே சிறப்பு. சுவையற்ற வற்றையும் சுவைபடச் சொல்வது அடுத்த சிறப்பு. நடிகர்கட்கும், படக்கலை இயக்குநர்க்கும் சுவை யான நிகழ்ச்சி எது? சுவையான நடிப்பு எது? என்ற அனுபவமும் வேண்டும். அழகோடு அனு

பவமும் சேர்ந்தால் எவ்வளவு வெற்றி கிடைக்குமோ அதுபோன்ற வெற்றி கிடைக்கும், மொழியோடு இத்தகைய நயமும் கலப்பதால்! கம்பரிடம் இவை இரண்டு திறன்களும் போதுமான அளவு இருக்கக் காண்கிறோம்.

புத்தகத்தை மூடிய பிறகும் நீலமாலையின் மகழ்ச்சிப் பெருக்கு நம் கண்களைவிட்டு மறையவில்லை. நாடகம் பார்த்துவிட்டு வந்த பிறகும் அதிலே சில காட்சிகள் நம் கண்களை விட்டு அகலுவதில்லையல்லவா! அது போன்றது இக்காட்சி.

நீலமாலையின் மகிழ்ச்சிப் பெருக்கைப் படம் பிடித்துக்காட்டும் இப்பாடல் உவகைச் சுவையாகும்.

(௩-அ-௬௩)

# இன்பத்துள் இன்பம்!

கொலைஉரு அமைந்தெனக்
    கொடிய நாட்டத்தோர்
கலைஉரு அல்குலாள்
    கணவற் புல்குவாள்
சிலைஉரு அழிதரச்
    செறிந்த மார்பில்தன்
முலைஉரு வினஎன
    முதுகை நோக்கினாள்!

குங்குமம் உதிர்ந்தன;
    கோதை சோர்ந்தன;
சங்கினம் முரன்றன;
    கலையும் சாறின;
பொங்கின சிலம்புகள்;
    பூசல் இட்டன;
மங்கையர் இளநலம்
    மைந்தர் உண்ணவே! *

வரைக்காட்சிப் படலத்தில் மைந்தரும் மகளிரும் தழுவிக்கூடும் காட்சி அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. வடமொழிச் சிருங்கார ரசத்திற்கும், தமிழில் உள்ள உவகைச் சுவைவகை நான்கில் ஒன்றாகிய 'புணர்வு' வகைக்கும் சீவக சிந்தாமணியிலும், கம்பரின் இராமகாதையிலும் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. அவற்றுள் சீவக சிந்தாமணியி

---

* கம்பர்—இராமகாதை. (௩கரு–௩கசு)
நாட்டம் — கண்கள். புல்குவாள் — தழுவுவாள்.
கோதை—பூமாலை. முரன்றன—ஒலித்தன

லிருந்து ஒரு பகுதியினை முன்னர்த் தந்தோம். கம்பர் காவியத்தில் இதைக் காணலாம்.

"கொலைத் தொழிலின் உருவாய் அமைந்த கொடிய கண்களையும், மன்மதக் கலையின் வடிவான ஒப்பற்ற அல்குலையும் உடைய ஒரு பெண் தன் கணவனைத் தழுவினாள். சிலை போன்ற தன் உருவம் அழியுமாறு இறுகத் தழுவிய தலைவனது மார்பில் தன் தனங்கள் அழுத்திப் பின்புறம் உருவினவோ என முதுகைத் தடவிப்பார்த்தாள்.

மங்கையர்களோடு அவர்தம் கணவன்மார் இன்புற்றுக் கூடி இளமை நலத்தைத் துய்க்கின்றனர். இதனால் பெண்கள் அணிந்திருந்த குங்குமம் உதிர்ந்தன; மலர்மாலைகள் கசங்கின; சங்கு வளையல்கள் ஒலித்தன; ஆடைகள் நழுவின. ஓசையிடும் காற்சிலம்புகள் ஒன்றுடன் ஒன்று மோதின!"

*

பெண் ஆணைத் தழுவும்போது அவன் முதுகைத் தன் இரு கைகளாலும் வளைத்துக்கொள்கிறாள். இதற்குக் காரணம் சொல்கிறார், கற்பனையில் சிறந்த கம்பர் "தன் முலை உருவின என முதுகை நோக்கினாள்", என்று!

'சிருங்கார ரசத்தை' வருணிப்பதிலும் சிலரே சிறந்து விளங்குகின்றனர். தமிழில் இவ்வின்பச் சுவைதரும் இவ்வகைச் சிறு நூல்கள் பலவுள்ளன.

கலவிக் கற்பனை தவழும் இப்பாடல் உவகைச் சுவை தருவதென்பது, சொல்லாமலே விளங்கும்.

(௪௪—௪௫)

# உள்ளத்தின் ஓட்டம்

பள்ளத்துப் பாயும் நன்னீர்
　　அனையவர் ; பானல் பூத்த
வெள்ளத்துப் பெரிய கண்ணார்
　　மென்சிலம்பு அலம்ப மென்பூத்
தள்ளத்தம் இடைகள் நோவத்
　　தமைவலித்து அவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் என்ன
　　ஓடுகின் றாரும் ஒத்தார் ! *

மிதிலை நகரில் திருமணத்துக்கு முன் இராமன் உலாச் செல்லும் காட்சி.

கடலிலே போய்ப் பாயும் நல்ல ஆற்று நீர் போலப் பாய்ந்தோடி வருகின்றார்கள். குவளை பூத்த குளங்களெனப் பெரியகண்களையுடைய பெண்கள் மெல்லிய சிலம்பு ஒலிக்கவும் மென்மையான பூவனைய பாதங்கள் தடுமாறவும் இடை நோகவும் ஓடிவருகின்றார்கள். தம்மை இழுத்துக்கொண்டு இராமன்பால் முன்னே ஓடுகின்ற தங்கள் உள்ளத்தைப்பிடிப்பதற்காகப் பின்னே விரைந்தோடி வருபவர்கள்போல் அப்பெண்கள் காணப்படுகிறார்கள்!"

*

தங்கள் உள்ளம் முன்னே ஓடிவிட்டதால் அதைப் பிடிக்கப் பின்னே ஓடிவருகிறார்களாம், பெண்கள்! சிலம்பு அலம்புதல், பாதம் தள்ளுதல், இடைகள் நோதல்—இம் மெய்ப்பாடுகள் அனைத்துமே சிறப்புடைய காட்சிகள்.

மகிழ்ச்சியின் விளைவாதலின் இஃது உவகை. (௬௬)

---

* கம்பர்—இராமகாதை (௩.௩.௨)

பானல்—குவளை. வலித்து—இழுத்துக்கொண்டு

# பவழவாய் பருகுதல்

முனிபவர் ஒத்திலராய் முறுவல்கி ளைத்தலுமே
முகிழ்நகை பெற்றமெனு மகிழ்நர்ம ணித்துவர்வாய்
கனிபவ ளத்தருகே வருதலும் முத்துதிரும்
கயல்களி ரண்டுடையீர் கடைதிற மின்திறமின்! *

காமத்தில் ஊடுதல் இன்பம்; அதற்கு இன்பம் கூடி முயங்குதல்.

சினந்துகொண்டிருந்த காதலியர் ஊடல் தவிர்த்துப் புன்னகை காட்டினர். உடனே, முறுக்கிய முகத்திலே முகிழ்க்கும் மலர்ச்சியைக்கண்டோம் என்ற இன்பத்தில் கணவரது மணிப்பவழ வாய், அக்கன்னியரின் கனியும் பவழத்தருகே வருகின்றது, முத்தமிட! அக்கணத்தில் ஆனந்தக் கண்ணீர் அரும்பி உதிர்க்கின்ற கயல்மீன்களாம் இருகண்களை யுடைய பெண்களே, கதவைத் திறங்கள்! உடனே ஓடிவந்து கதவைத் திறங்கள்!!

*

கலிங்கப் போருக்குச் சென்றிருந்த கணவன் வெற்றி மாலையோடு தன் வீடுதிரும்பினான். அப்போது அவள் தன் பிரிவுத் துன்பத்திற்காக அலுத்துக்கொண்டு கதவைத் திறக்கச் சற்றுக்காலந் தாழ்க்கவே 'அவளின் ஊடலையும் அந்த ஊடல் தவிர்ந்து பிறகு அவள் ஆனந்தக் கண்ணீர் உகுப்பதையும்' சுட்டிக்காட்டிக்கதவு திறக்கவேண்டுகிறான், கணவன்!

இன்பத்தை நினைப்பூட்டும் இஃது உவகை. சஎ

---

* சயங்கொண்டார்-கலிங்கத்துப்பரணி-கடைதிறப்பு-உஎ
முனிபவர் ஒத்து இலராய்-ஊடல் கொண்டு நீங்கி. கிளைத்தல்-தோன்றுதல். மகிழ்நர்-கணவர்.

# மலையும் மயிலும்

விலையி லாதவடம் முலையி லாடவிழி
குழையி லாடிவிழை கணவர்தோள்
மலையி லாடிவரு மயில்கள் போலவரு
மடந லீர்கடைகள் திறமினோ *

மலைமீது மயிலாடக் கண்டிருக்கிறோம். இங்கே பெண் மயில்கள் நடமாடும் காட்சியைக் காணு கிறோம்.

விலைமதிப்பற்ற உயர்ந்த முத்துமாலைகள் மார் பிலே ஆட, விழிகள் காதளவு சென்று பாய்ந்து குழை என்னும் காதணிகளுக்கு எதிராக ஆட, தாங்கள் விரும்பும் கணவர்தம் மலைபோன்ற தோளிலேவிளையாடி, மலையில் ஆடிவரும் மயில்கள் போன்ற சாயலுடன் வருகின்ற இளமை நலமிக்க பெண்களே ! வாயிற்கடையைத் திறப்பீராக!

*

ஆடவர் தோள் மலையாம் ; பெண் அம்மலைமீது விளையாடும் மயிலாம். வடம் ஆட, விழி ஆட, அவள் ஆடிவரும் காட்சி அழகியது. கலிங்கத்துப் பரணி கடைதிறப்பு என்ற முதல் பகுதியிலே தரும் இன்பக் காட்சிகள் இதுபோற் பல. பா நடையும், பாவில் பதிந்துள்ள கற்பனையும் சுவை தருவன.

பெண்களின் சாயலைப் படமெடுத்துக் காட்டும் இஃது உவமையாகும். (சஅ)

---

* சயங்கொண்டார்-கலிங்கத்துப்பரணி-கடைதிறப்பு-சஉ
வடம்-முத்துமாலை. குழை-காதணி. விழை-விரும்பும்.

# அகமகிழ்ச்சி

முலைமீது கொழுநர்கைந் நகமேவு குறியை
முன்செல்வம் இல்லாத அவர்பெற்ற பொருள்போல்
கலைநீவி யாரேனும் இல்லாஇ டத்தே
கண்ணுற்று நெஞ்சங்க ளிப்பீர்கள் திறமின் !*

பெண்கள் தனித்திருந்து நினைத்து மகிழும் இயல்பினர். பிறரறியா இன்பமே அவர்களின் பேரின்பம்.

"இரவு கணவனுடன் கூடியபோது தம் மார்பின்மீதுபட்ட அவன்தன் நகக்குறியை, முன் செல்வம்பெருத ஏழை திடீரெனக்கிடைத்தசெல்வத்தால் மனம் மிக மகிழ்தல்போல, யாரும் இல்லாத இடத்தில் ஆடையை அகற்றிப் பார்த்துப் பார்த்து மனங் களிக்கும் பெண்களே ! கதவைத் திறங்கள் !"

*

பெண் தன் உள்ளத்தே அனுபவிக்கும் இத்தகைய இன்பங்களை நாடகத்திலோ, திரைப்படத்திலோ காட்டமுடியாது; காட்டவும் கூடாது. ஆனால் அகத்துணர்வாலேயே அனுபவிக்கத்தக்க இக்காட்சி இலக்கியத்தில் இடம்பெறுகின்றது. இலக்கியமும் தனித்துப் படித்துத் தானே உணர்ந்து களித்தற்குரியதாகலின், இதில் தவறில்லை.

இப்பாடல் உவகைச் சுவையின் மெய்ப்பாட்டை விளக்குகிறது. (சுகூ)

* சயங்கொண்டார்-கலிங்கத்துப்பரணி-கடைதிறப்பு-சஎ
கலை-மேலாடை. நீவி-விலக்கி

# கலவிப் பயன்

கூடும் இளம்பிறையில் குறுவெயர் முத்துருளக்
கொங்கை வடம்புரளச் செங்கழு நீரளகக்
காடு குலைந்தலையக் கைவளை பூசலிடக்
கலவி விடாமடவீர் கடைதிறமின் திறமின்!

திருத்தக்க தேவரின் சிந்தாமணியிலும் கம்பரின் இராம காதையிலும் கண்ட கலவியின்பம் சயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணியிலும் இடம் பெறுகிறது.

இளம் பிறைபோல் வளைந்த நெற்றியில் சிறு வியர்வைத் துளிகளாம் முத்துருளவும் கொங்கை மேற்கிடக்கும் முத்துவடங்கள் புரளவும், செங்கழு நீர்ப் பூவணிந்த கூந்தற்காடு குலைந்து அவிழ்ந்து காற்றில் அலையவும் கைவளையல்கள் போராடவும் இடையருக் கலவி தரும் இளம் பெண்களே கடை திறமின்!"

*

தாழிசையின் நடை அலை ஓசையின் இனிமை தருவதாகும். அத்தாழிசை நடையில் அமைந்த இன்பத்தைக்கூறும் இப்பாக்களைப் படிக்கும்போது 'பால் நிலவு வேளையில் படகேறி இன்ப அலைமீது செல்வது' போன்ற உணர்வு உண்டாகிறது!

கலவியின்பம் காட்டும் இப்பா உவகைச் சுவை தருவது. (௫௦)

---

*சயங்கொண்டார்–கலிங்கத்துப்பரணி–கடைதிறப்பு-௬௨.
செங்கழுநீர் அளகம்—செங்கழு நீர்ப் பூவணிந்த கூந்தல். அலைய—புரள. பூசல்—ஒலி.

# அனுபவ விளைவு

வான்கலந்த மாணிக்க
　　வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
　　நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
　　செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
　　உவட்டாமல் இனிப்பதுவே! *

திருவாசகம் உயிரை உருக்கும் இறைமைக் காவியம். பிற மதத்தாரும் பிற மொழியாளருமாகிய போப்பையரும் திருவாசகத்தில் மனமொன்றிக் கற்று, அதனை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார். இப்பாடலில் இராமலிங்க அடிகள் தாம் திருவாசகம் கற்றுப்பெற்ற கழிபேருவகையை-தம் அனுபவ விளைவை வெளிப்படுத்துகிறார்.

“இவ்வுலகை நீத்து வானிற் கலந்த மாணிக்க வாசகப் பெருமானே! உம் திருவாசகத்தை நான் மனங்கலந்து பாடுகிறேன். இவ்வாறு பாடும் பொழுதெல்லாம் தனியின்பம் காண்கின்றேன். அவ்வின்பத்தை எங்ஙனம் நான் சொல்லுவேன்! நல்ல கருப்பஞ்சாறு; அதிலே தேனையும் கலந்து, பாலையும் கலந்து, செழித்துப் பழுத்த இனிய கனி

---

* இராமலிங்க அடிகள்-அருட்பா.

வாசகத்தை-திருவாசகத்தை. தீஞ்சுவை-இனியசுவை. ஊன்-உடல்.

களின் சுவையையும் கலந்துபருக, அஃது என் உடலிலும் கலந்து, உயிரிலும் கலந்தாற்போல் சிறிதும் தெவிட்டாமல் இனிக்கின்றது.

*

படிக்குங்கால் உடற்கின்பமும் உணருங்கால் உயிர்க்கின்பமும் கண்டவராதலின் 'ஊன் கலந்து உயிர் கலந்து' என்ருர். திருவாசகம் படியாத நிலையிலும், இப்பாடலைப் படித்த அளவிலேயே, இராமலிங்க அடிகளாரின் அனுபவத்தை நாமும் அடைகிரேம். இலக்கியம் ஊன்றி ஊறிய அனுபவ விளைவாகும். கவிஞர் தாம் அடைந்த அனுபவத்தைப் பிறரும் அடையச் செய்வதே, அவரது ஆற்றலைக் காட்டும் அளவாகும். பிறதுறை எழுத்தாளர்களுக்கும் இது பொருந்தும். இராமலிங்க அடிகள் இதில் தலையாய வெற்றி பெறுகிருர்.

இறைவன்மீது அன்புகனிந்து தம்மை மறந்து பாடிய பாடல்கள் தமிழில் எண்ணற்றவை. ஆனல் இந்த நாட்டில்தான் "தாய்மொழி அருச்சனை ஏன்? இறைவனுக்குத்தான் மொழிகளனைத்தும் புரியுமே. தமிழன் வடமொழியிலும் அருச்சனை புரியலாம், ஆங்கிலத்திலும் வழிபடலாம், இந்தியிலும் நடத்தலாம். அவை கூடாதென்போர் மொழிவெறியர்" என எதிர்வாதமிடுவோரும் நிறைந்துள்ளனர். இவர்கள் கடவுள் தமக்கே உரியவர் எனவும் பிறரெலாம் கடவுளுக்குச் சிறிதும் உறவற்றவர்எனவும் கருதுகின்றனர்.

இறைவன் அன்பு என்பது மனித மனத்தின் நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கிடமான மனமே, இறைவனின் திருக்கோயில். மனிதன் இறைவ

னைத் தனியே பார்க்கவில்லை. உலகத்தில், உலகத்தின் பண்புகளில் காண்பதெலாம் அவனுக்குக் கடவுட்கோலமாகக் காட்சிதரும். எனினும் மனிதன் இறைவனுக்குத் தன்னைப் போல் ஒரு வடிவம் கொடுத்தான்; வழிபடக் கற்றான். அவன் மன அமைதி தேடிய வழி இது; இன்று பலர் தாம் செய்யும் பெரும்பாவங்கட்குச் சிறு அளவில் கழுவாய் தேடும் வழியும் இதுவாயிற்று!

வெவ்வேறு நாட்டார் இறைவனுக்கு வெவ்வேறு வடிவங்கண்டனர். மேனாட்டாரின் கடவுளர் சேலையும் வேட்டியும் துண்டும் அணியவில்லை. காரணம் என்ன? அவ்வந் நாட்டார் தம் உடையால் இறைவனைப் புனைந்து, தம் நாகரிகப்படி வழிபட்டு, தம்மொழியால் வணங்கினர்; வணங்குகின்றனர். இது மனிதப் பொதுவியல்பு; உலக இயற்கை விதி.

தமிழனிடம் வந்து "இறைவனிடம் எம் மொழியிலும் பேசலாம். தாய்மொழியில் வழிபடவேண்டுமெனப் பேசாதே. நாத்திகன் நீ" என்பவன் கடவுளின் பகைவன். அவன் "ஊன் கலந்து, உயிர் கலந்து" பாடியறியாதவன். இறைவனுடன் மனமொன்றிவாழாதவன். கடவுளைக்காட்டி "வழிபாட்டு வாணிகம்" செய்யும் அறநெறிப் பிழைப்பாளன். இதைத் தமிழர் உணருங்காலமே, இறை வழிபாட்டில் புதுமை காணும் காலம். தேவாரமும், திருவாய்மொழியும், திருவாசகமும் பிறவும் தெருவெல்லாம் முழங்கும் காலம். அதுவே தமிழரின் பொற்காலம். இறையன்பு அறநெறி பிழையாத நற்காலம்.

இப்பாவில் இராமலிங்க அடிகள் சுவையெலாம் கலந்த பாச்சுவையைத்தாம் பருகியமையை வெளியிடுவதால் இஃது 'உவகை' யாகும். (௫௧)

## ஒலி வெள்ளம்

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீரோசை அருவி ஒலியினிலும்
நீலப் பெருங்கடல்எந் நேரமும் தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினல்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கோற்ருெடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்ருெலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்... *

இப்பாடற் கருத்து மிக எளிதாகும்.

இப்பாடலைப் படிக்கும்போது இயற்கைச் சூழ லிடையே நாம் சென்றுவிடுகிருேம். எங்கெங்

---

* சி. சுப்பிரமணிய பாரதியார்—குயிற்பாட்டு.
கானம்—காடு. உதிக்கும்—தோன்றும். தேன்வாரி—தேன்கடல். கோற்ருெடியார்—அழகிய வளையலணிந்த பெண்கள். சுண்ணம்-பொடி. பண்ணை மடவார்—உழவர் மகளிர். வேயின் குழல்—புல்லாங் குழல்.

கிருந்தோ இசையருவி பாய்கிறது! காட்டுப் பறவை கலகலென ஓசையிடுகிறது! மரங்க ளிடையே இலைதழைகளை அசைத்துக் காற்றுத் தானிருப்பதைக் காட்டுகிறது! நீலக்கடல் ஓலமிடு வதிலேகூட இசையின்பம் இருக்கிறது! மனித குலப் பெண்கள் ஊனுருகப் பாடுகிறார்கள். அது தேன் கடலாய், மடைதிறந்து பாய்கிறது! ஏற்றப் பாட்டை வயலோரம் கேட்கும்போது, நாம் மெய் மறந்து போகிறோம். பாரதியாருக்கு நாட்டிற்கேட் பதும் பாட்டாகிறது; காட்டில் ஒலிப்பதும் பாட்டா கிறது. மனத்தை உருக்கி மென்மையாக்கி உயர உயர ஏற்றிவைத்து மகிழ்ச்சி செய்யும் ஆற்றல் பாட்டிற்கு உண்டு.

இன்னும் வள்ளைப் பாட்டுக்கள், கும்மிப் பாட் டுக்கள், வாய்ப்பாட்டு, கருவிகளில் இசைக்கும் பண் ணொலி என்று இவ்வாறு ஒவ்வொரு நாளும் வெவ் வேறு ஒலியினிலும் தாம் இன்பங் கண்டதைப் பாரதியார் அழகுபொருந்த ஒரு சேரக் கூறுகிறார். மனிதர் இயக்கும் ஒலியாயினும், இயற்கை எழுப்பும் ஓசையாயினும் எல்லாம் அவருக்கு இனிய இசை யாக, இதயம் கவரும் பண்ணாக விளங்குகின்றன.

ஒலியின்பத்தை ஒன்றுகூட்டித் தரும் இஃது உவகைச் சுவையாகும். (ருஉ)

# பேசும் பொற்சித்திரம்

சின்னஞ்சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே—என்முன்னே
ஆடிவருந் தேனே!

ஓடி வருகையிலே—கண்ணம்மா
உள்ளம் குளிருதடி!
ஆடித் திரியக் கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவுதடி!

உச்சி தனை முகந்நால்—கருவம்
ஓங்கி வளருதடி!
மெச்சியுனை ஊரார்—புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!

இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

மார்பில் அணிவதற்கே—உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ? *

இப்பாடற் கருத்து மிக எளிதாக விளங்குவது.

---

* சி. சுப்பிரமணிய பாரதியார்-கண்ணன் பாட்டு.
ஏற்றம்-உயர்வு. ஆவி-உயிர். ஏடு-நூல்.

சிலசில கோடுகளால் பெரிய தலைவர்களின் திருவுருவங்களை நம்மனக்கண்முன் நிறுத்திவிடும் கைசிறந்த ஓவியக்காரனைப்போல, சிலசில அழகிய சொற்றொடர்களாலேயே குழந்தையின் பல காட்சிகளை அழியாத ஓவியமாக்கிக் காட்டிவிடுகிறார் கவிஞர். சின்னஞ்சிறு கிளி, பேசும் பொற்சித்திரம், ஆடி வரும் தேன் என்பன அவ்வோவியச் சாயல்கள்.

உள்ளம் குளிருதல், ஆவி போய்த் தழுவுதல், கருவம் ஓங்கி வளருதல், மேனி சிலிர்த்தல்-இத் தொடர்கள் தரும் மெய்ப்பாடுகளை உள்ளுணர்ந்து படித்தால் நீங்கள் உண்மையிலேயே தந்தையாகி விடுவீர்கள் ; தாயாகி மகிழ்வீர்கள் !

பிள்ளை மார்பில் அணியத் தகுந்த வைரமணி மாலையாம், சீர்பெற்று வாழ வந்த செல்வமாம் ! “ தம் பொருள் என்ப தம் மக்கள் ” என்ற திருக்குறட் தொடருக்கு விளக்கவுரை தருகின்றன இவ் வடிகள்.

குழந்தை இன்பக்கதை சொல்லும் ஏடாம், அன்பு தரும் தெய்வமாம்-சொல்லுக்குச் சொல், சீருக்குச் சீர் குழந்தையின் ஓவியமே தவழ்கிறது நம்முன் !

பிற காட்சிகள் எல்லாம் நம்மைவிட்டுப் பிரிந்து நின்று இன்பந்தருகின்றன. இலக்கியமோ நாமே படிக்கும்போது நம்மிடம்ஒன்றும் இன்பம். நம்இயல் பிற்கும் மனத்திற்கும் ஏற்பப் பெருகும் இன்பம், நவில் தொறும் நூல்நயமாகும் இன்பம்; நம் நாவிற் பட்டு உடலிற் படிந்து, உள்ளத்திற் கலந்து, உயிருடன் ஒன்றும் இன்பம் !

இன்ப வடிவான குழந்தையைக் காட்டும் இப் பாடல் உவகைச்சுவை தருவதாகும். (ருரு)